கல்கி

KALKI 12.11.89 ரூ. 2.50



நேரு நூற்றாண்டு

இப்போது, விம்
ஏறக்குறைய பாதிவிலையிலே...



பேரச் சலுகை
அளிக்கும் (கேரிபேக்) தூக்குப் பை.

இப்போது ஏறக்குறைய பாதி விலையில் கிடைக்கிறது நீங்கள் விரும்பும் விம்... பணமிச்சம் தரும் (கேரி பேக்) தூக்குப் பைகளிலே!

ஒப்பிட்டுப் பாருங்களேன

பேக்	100 கிராம் விலை
500 கிராம் கேனிஸ்டர்	135 பைசா
2.5 கிலோ கேரிபேக் பை	75 பைசா



உபயோகிப்பிலேயோ மேலும் சிக்கன லாபம் கிடைக்கிறது இதில் உங்களுக்கு ஒரு துளியளவு விம் உபயோகமோங்கும் நுரை கொழித்து பிசுக்குகளை விலக்க என வெளியேற்றுகிறது கனகருக்காக... அதிகப் பாத்திரங்களைத் துலக்குகிறது ஒளிமிளுக்க.

விரைந்தோடி இன்றே வாங்குவீர் புதிய விம் கேரிபேக் உங்கள் தேவைக்குகந்த அளவிலே (தேர்ந்தெடுக்கக் கிடைப்பவை 500 கிராம், 1 கிலோ, அல்லது 2.5 கிலோ பேக்குகள்)

ஒரு துளி விம் தரும் துலக்கம் அதிகப் பாத்திரங்கள் ஒளிமினுக்கும்

LINTAS VG 482 2213 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

ஏ. பி. வேங்கடேஸ்வரன்:

கொஞ்சம் அதிர்ச்சி; ஏராளத் துணிவு!



* ஏ. பி. வேங்கடேஸ்வரன்

ஸஃபாரி அணிந்த குள்ளமான உருவம். சற்று அதிகமாக முடி வைத்துக் கொண்டு பாகவதர் தலை. இவர்தான் ஏ.பி. வேங்கடேஸ்வரன். முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலர். ராஜீவ் காந்தியின் அதிகார மமதைக்குப் பலியாகி அரசுப் பணியை விட்டு வந்தவர்.

''தென் சென்னையில் நல்ல பார்லிமென்டேரியனான செழியனையே மக்கள் தோற்கடித்து விட்டார்கள். அப்படியிருக்க நீங்கள் சுயேச்சையாக...?''

''வெற்றி உறுதி என்ற நோக்கில் நான் இந்தத் தொகுதியில் நிற்கவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக என்னைச் சந்திக்கும் பலர் ''இந்த நாடு சுரண்டுபவர்களின் கையில் சிக்கி இருக்கிறது. உங்களைப் போன்ற அனுபவஸ்தர்கள் படித்தவர்கள் எல்லாரும் ஒதுங்கியிருந்தால் எப்படி? பிறருக்கு வழிகாட்டுவது போல ஏன் நீங்கள் தேர்தலில் நிற்கக் கூடாது'' என்று கேட்கிறார்கள். எனவே, 'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே' என்ற அடிப்படையில்தான் இந்தத் தேர்தலில் நிற்கிறேன். பெரும்பாலான நடுத்தர, மேல்தட்டு மக்கள் வோட்டுப் போடாததால்தான் அரசியலையே 'பிஸினஸ்' பண்ணும் பேர்வழிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தெருத் தெருவாகச் சென்று ராஜீவ் காந்தியின் சுய ரூபத்தை விளக்கிக் காட்டுவேன். அதற்கப்புறமும் மக்கள் காங்கிரஸுக்கு வாக்களித்தார்கள் என்றால் அது அவர்களது போறாத காலம் என்றுதான் சொல்ல வேண்டும்.''

வேங்கடேஸ்வரனின் தகப்பனார் ஏ. எஸ்.பி. அய்யர் உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்தவர். அரசுப் பணியில் இருந்து விலகிய பின் சில காலம் ஹிந்துஜா பவுண்டேஷன் என்ற அமைப்பில் பணியாற்றினார் ஏ. பி. வேங்கடேஸ்வரன். இந்தியாவில் சில மாநிலங்களில் குடி தண்ணீர் வசதிகள் செய்து தரும் பணியை இந்த பவுண்டேஷன் மேற்கொண்டது. ஆனால் போஃபர்ஸ் விஷயத்தில் ஹிந்துஜா பெயர் அடிபட்டவுடன் அதிலிருந்து விலகி விட்டார்.

''ராஜீவ் காந்திக்கு அடிப்படையான பல விஷயங்களே தெரியாது. உதாரணமாக ஒரு சமயம் அவர் என்னைப் பார்த்து, ''மனு, மனு என்கிறார்களே, அவர் யார்?'' என்று கேட்டார்!

''எங்கே போய் முட்டிக் கொள்வது? எனக்குத் தெரிந்த வரையில் பள்ளியில் எந்த பரீட்சையிலும் ராஜீவ் பாஸ் செய்ததில்லை. ஸ்ரீலங்கா பிரச்னையில் அவர் அடித்த அந்தர் பல்டிகளுக்கு ஒரு படிப்பினை கொடுக்க வேண்டுமானால் தமிழ் நாட்டில் கண்டிப்பாக மக்கள் காங்கிரஸைத் தோற்கடிக்க வேண்டும்'' என்கிறார் வேங்கடேஸ்வரன்.

தி. மு. க., ஆலடி அருணாவைத் தென் சென்னையில் வேட்பாளராக நிறுத்தியுள்ளது, வேங்கடேஸ்வரனுக்குக் கொஞ்சம் அதிர்ச்சியைக் கொடுத்துத்தான் உள்ளது. வி. பி. சிங் போன்றவர்கள் ''நீங்கள் நில்லுங்கள், எதிர்க் கட்சிகளின் ஆதரவு உண்டு'' என்று சொன்னதை ஞாபகப்படுத்துகிறார்.

''யார் எனக்கு ஆதரவு கொடுக்கிறார்களோ இல்லையோ, நான் தேர்தல் களத்தில் இருப்பேன்'' என்று கூறி வாசல் வரை வந்து வழி அனுப்புகிறார்.

— கௌசல்யா

நேரு நினைவுகள் – 1



* ஹோலிப் பண்டி கையன்று இந்திரா வுடன்.



* கை கொடுப்போர் காமராஜ் மற்றும் சி. எஸ்.



* கொலம்பியா யூனி வர்சிடியில் கௌரவ டாக் டர் பட்டம்.



* கன்னரின் பணிசளுடன்....



* ஆசையாய் வளர்த்தவை.



* 1955 ரஷ்ய விஜயத் தின் போது...

* மலர் மாலையை வீசுகிறார்...



* சாஸ்திரி, ராதாகிருஷ்ண னுடன் — தீவிர ஆலோசனை.



* பாரத ரத்னா





* கென்னடியுடன்...






* கிரிக்கெட் மாட்சுக்குத் தயா ராய்......



* சே. சந்தானத்துடன்...



* பில்லியர்ட்ஸ் ஆட்டம் (1948).



* பூடான் அரசருடன் பூடான் உடையில்.

"இலங்கை அரசை வற்புறுத்தும் உரிமையை இந்தியா பயன்படுத்தவில்லை!"

— முதல்வர் வரதராஜ பெருமாள் சிறப்புப் பேட்டி

இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து படிப் படியாகத் திரும்பிக் கொண்டிருக்கும் இந்த வேளை யில் இலங்கைத் தமிழர்களின் நிலை என்ன? திரி கோணமலையிலுள்ள அவரது இல்லத்தில், அண்மை யில் அங்கு சென்றிருந்த நமது துணையாசிரியரிடம், மனம் திறந்து பேசினார், இலங்கை வடக்கு — கிழக்கு மாகாண முதல்வர் வரதராஜ பெருமாள்......

கேள்வி: இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வருவதற்கு முன்பிருந்த நிலைக்கும் இப்போதுள்ள நிலைக்கும் நீங்கள் என்ன வித்தியாசங்களைப் பார்க் கிறீர்கள்?

வரதராஜ பெருமாள்: இந்திய அமைதிப் படை வருவதற்கு முன்பு, எமது தமிழர்கள் அனைவருமே ஒரு ராணுவ ஒடுக்கு முறை யில்தான் வாழ்ந்தார்கள். அரசியல் தீர்வு என்பது சுத்தமாகவே இல்லை. மூன்று லட்சம் பேருக்கு மேல் அகதிகளாகச் சென் றார்கள். முப்பதாயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்டார்கள். ஐம்பதாயிரம் வீடு களுக்கு மேல் கொளுத்தப்பட்டன. இவற் றைத் தடுத்து நிறுத்தும் சக்தி எங்களிடம் இல்லாததால், இலங்கை அரசு தனது முழு சக்தியையும் பயன்படுத்தி இந்த அழிவுகளை நடத்தியது. இந்திய அமைதிப்படை வந்த பிறகுதான் இவை நிறுத்தப்பட்டன. மக் களும் குதூகலமாக இந்திய அமைதிப் படையை வரவேற்றார்கள். நாங்களெல் லாம் இந்தியா— இலங்கை ஒப்பந்தப்படி ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பினோம். ஆனால் (விடுதலைப்) புலிகள் மட்டும் மாறுபட்டு மீண்டும் மீண்டும் குழப்பங் களையே விளைவித்துக் கொண்டிருந்தார் கள். 1987—ம் ஆண்டு செப்டம்பர் 13—ம் தேதி மட்டும் ஒரே நாளில் 110 பேரைப் புலிகள் கொன்று குவித்தார்கள். அதற்குப் பிறகும் கூட இந்திய அரசு புலிகளோடு சுமுகமான நிலையிலேயே பிரச்னைகளைத் தீர்த்து விட முயன்றது. ஆனால் புலிகளோ இந்திய அமைதிப்படைக்கு எதிராக ஒரு யுத்தத்தையே தொடங்கினார்கள். இந்தக் கட்டத்தில்தான் இந்திய அமைதிப்படையும் புலிகளிடமிருந்து பலாத்காரமாக ஆயுதங் களைப் பிடுங்க வேண்டியதொரு சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது, மற்ற பகுதிகளில் இல்லாவிட்டாலும் யாழ்ப்பாணத்தில் சில அழிவுகளும் அமைதியற்ற சூழ்நிலையும் ஏற்படவே செய்தன. இந்தச் சூழ்நிலையில்





கூட இந்திய அரசு புலிகளை ஜனநாயக முறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளையும் பேச்சு வார்த்தைகளையும் நடத்தியது. ஆனால் புலிகள் வருவதாக இல்லை. இந்த நிலையில்தான் இந்தியா — இலங்கை ஒப்பந்தப்படி சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் வடக்கு — கிழக்கு மாகாணத் தேர்தல் நடந்தது. நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டோம். இப்போது இந்திய அமைதிப்படை படிப்படியாக விலகத் தொடங்கி விட்டது. இருப்பினும் இலங்கைத் தமிழர்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான பிரச்னைகள் இன்னும் முடிவடையவில்லை. ஒரு சுமுகமான அரசியல் தீர்வுக்கு உட்பட்ட வகையில், தமிழ் மக்களுக்கான பாதுகாப்புக்கு இன்னும் உத்தரவாதம் ஏற்படவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கேள்வி: இந்திய அமைதிப்படை முழுமையாக வாபஸ் ஆகிற போது உங்கள் அரசாங்கம் தாக்குப்பிடிக்க முடியாது என்று சொல்லப்படுகிறதே?

வ. பெருமாள்: தமிழ் மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை இந்த மாகாண அரசு செய்து கொண்டுதான் இருக்கிறது. ஆயினும் அமைதிப்படை வாபஸ் ஆன பிறகு எங்கள் அரசு தாக்குப் பிடிக்காது — புலிகள் விட மாட்டார்கள் என்கிற கருத்து, தமிழ் நாட்டில் இருப்பதை நான் அறிவேன். அவர்கள் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். அப்படிப்பட்டதோர் சூழ்நிலை உருவாகிற போது, இங்கு ரத்த ஆறுதான் ஓடும். அதையா அவர்கள் பார்த்து ரசிக்க விரும்புகிறார்கள்? ஜனநாயக வழியிலான அரசுக்குத் தீவிரவாதிகளால் ஆபத்து ஏற்படும் போது, ஜனநாயக அரசைப் பலப்படுத்துவதுதான் தமிழகத்திலுள்ள தமிழர்களின் கடமை மட்டுமல்ல; அனைவருடைய கடமையுமாகும். அப்படிச் செய்யாதவர்கள் தமிழர் விரோதிகளாகத்தான் இருக்க முடியும். இது ஒருபுறமிருக்க, இன்னொரு புறம் இலங்கை அரசே புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு, அவர்களுக்கு ஆயுதங்களையும் கொடுத்து வருகிறது. இந்த அச்சுறுத்தலையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

கேள்வி: தீவிரவாதிகளோடு பேச்சு வார்த்தை நடத்துவதென்பது, அவர்களை ஜனநாயக வழிக்குக் கொண்டு வருவதற்காகத்தான் என்று ஏன் கருதக் கூடாது?

வ. பெருமாள்: தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களைக் கொடுத்தா ஜனநாயக வழிக்குக் கொண்டு வருவது? இலங்கை அரசு புலிகளைச் சமாதான வழிக்குத் திருப்ப நினைத்தால் அவர்களை ஆயுதங்களோடு கொழும்பில் நடமாட அனுமதிக்குமா?

கேள்வி: வடக்கு — கிழக்கு மாகாண முதல்வர் என்ற முறையில் இந்தியா — இலங்கை ஒப்பந்தப்படியான அதிகாரங்களையெல்லாம் நீங்கள் பெற்றிருக்கிறீர்களா?

வ. பெருமாள்: இல்லை. ஒவ்வொன்றையும் சிங்கள அரசிடமிருந்து போராடிப் போராடிப் பெறுகிற நிலையில்தான் நாங்கள் இருக்கிறோம். எங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு விடக் கூடாது என்பதில் புலிகளும் தீவிரமாக இருக்கிறார்கள். அதனால்தான் இப்போது புலிகள் இலங்கை அரசோடு கூட்டுச் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி: நீங்கள் முதல்வரான பிறகு தமிழர்களுக்காக என்ன செய்ய முடிந்திருக்கிறது?

வ. பெருமாள்: தமிழர்களுக்கான மாகாண அரசு உருவாகவே முடியாது என்ற சூழ்நிலையில், இந்த மாகாண அரசை உருவாக்கியிருக்கிறோம். இந்தத் திரிகோண மலை; தமிழர்களின் தலைநகராக இருக்க வேண்டும் என்ற தமிழர்களின் நாற்பதாண்டு காலக் கனவை நனவாக்கியிருக்கிறோம். கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வு வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். தொடர்ந்து செய்து வருகிறோம். இது ஒரு வருடக் குழந்தை. இதை வளர்ந்த மனிதனோடு நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது.

கேள்வி: ஒரு வருடக் குழந்தை ஒரு வருடத்தில் பெற வேண்டிய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறதா என்பதுதான் கேள்வி.

வ. பெருமாள்: நான் முன்பே சொன்னபடி போராடிப் போராடித்தான் வளர்த்து வருகிறோம். பல்வேறு பயமுறுத்துதல்களுக்கு மத்தியில்தான் வளர்த்து வருகிறோம்.

கேள்வி: இந்த பயமுறுத்துதல்களுக்கு எப்போதுதான் ஒரு முடிவு ஏற்படும் என்று கருதுகிறீர்கள்?

வ. பெருமாள்: பயமுறுத்தல்களே இல்லாத சமுதாயம் என்பது ஒரு கற்பனைச் சமுதாயமாகத்தான் இருக்க முடியும். ஆயினும் எங்களுக்கிருக்கிற பயமுறுத்தல்கள் சற்று அளவில் கூடுதல் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். அதை எதிர்கொள்ள வேண்டிய திராணி எங்கள் மாகாண அரசுக்கு இருக்கிறது.

கேள்வி: உங்கள் மாகாண அரசுக்கும் இலங்கை மத்திய அரசுக்கும் இடையிலான உறவு சுமுகமானதாக இருக்கும் என்று நம்புகிறீர்களா?

வ. பெருமாள்: இலங்கை அரசு தாமாகவே எங்களுக்கு ஒத்துழைப்புத் தரும் என்று நம்பவில்லை. போராடிப் போராடித்தான் நாங்கள் பெற்றாக வேண்டும்.

கேள்வி: அந்தப் போராட்டம் எப்படிப்பட்டதொரு போராட்டம்?

வ. பெருமாள்: எங்களது போராட்டம் புத்திபூர்வமான போராட்டம். புலிகளைப் போல, தமிழர்களைக் கொன்று குவிப்பதே வீரமான போராட்டம் என்றல்லாமல், தமிழர் நலனுக்காகப் போராடும் புத்திபூர்வமான போராட்டம்.

கேள்வி: அதை அகிம்சை என்று சொல்லலாமா?

வ. பெருமாள்: அதை அகிம்சை என்று சொல்லத் தேவையில்லை. ஒருவன் நம்மை வந்து தாக்கும் போது நாம் திருப்பித் தாக்காமலிருப்பதுதான் அகிம்சை என்றால், 'மிருகங்கள்' நம்மை வந்து தாக்கும் போது என்ன செய்ய முடியும்? நம்மைப் பாதுகாத்துக் கொள்ள மிருகங்களுக்கு முன்னால் நாம் உண்ணாவிரதம் இருக்க முடியாது. ஆயினும் எங்களது போராட்டம் அரசியல் போராட்டமாகவே இருக்கும்.

கேள்வி: முன்பிருந்த ஜெயவர்த்தன அரசுக்கும் இப்போதுள்ள பிரேமதாச அரசுக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா?

வ. பெருமாள்: உருவங்களில்தான் வித்தியாசத்தைக் காண்கிறோமே தவிர, அடிப்படைக் குணாதிசயங்களில் எந்தவிதமான வித்தியாசத்தையும் காணவில்லை. எங்களைப் பொறுத்தவரை, எல்லாச் சிங்களத் தலைவர்களுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தாம்!

கேள்வி: இத்தனை நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த பிறகு, இனியும் சிங்களர்களோடு, பழைய நட்புணர்வோடு சேர்ந்து வாழ முடியும் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?

வ. பெருமாள்: தமிழர்களைப் பொறுத்தவரை இலங்கையில் அவர்கள் சிறுபான்மையினர். ஆக, இந்த நாடு ஒன்றாகவும் அமைதியாகவும் இருப்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் பெரும்பான்மையினராக இருக்கும் சிங்களர்கள்தாமே தவிர, நாங்களல்ல. எங்களைப் பொறுத்தவரை ஒற்றுமையாக இருக்கவே முயற்சி செய்வோம். அது இயலாத போதுதான் தனியாக வாழ்வதைப் பற்றிப் பரிசீலிப்போம்.


கேள்வி: அனைவரும் ஒற்றுமையாக இருக்கத் தேவையான முயற்சிகளைச் சிங்களர்கள் உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா? ஏனெனில் இப்போதே நீங்கள் ஒவ்வொன்றையும் போராடிப் போராடிப் பெறுவதாகவே சொல்கிறீர்கள்...

வ. பெருமாள்: அதை இப்போது சொல்ல முடியாது.

கேள்வி: இப்படிப்பட்டதோர் சூழ்நிலையில் இந்திய அமைதிப்படை இன்னும் சிறிது காலம் இங்கே தொடர்ந்து இருந்தால் நன்றாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

வ. பெருமாள்: இலங்கை வாழ் தமிழர்கள் இந்தியாவிலுள்ள மாகாண மக்களுக்குள்ள உரிமைகளையாவது குறைந்தபட்சம் பெற்றாக வேண்டும். இரண்டாவதாக இலங்கைத் தமிழர்கள் பயமில்லாமல் கௌரவமாக வாழும் சூழ்நிலை உருவாக வேண்டும் என்கிற இரண்டு விஷயங்களுக்கும் இந்தியா உத்தரவாதமளித்தது. இந்த

சுவைத்த உடனே தெரியுது.
ஸ்பிகாஃப் சுறுசுறுப்பாய்
செயல் புரியுது. இதுவே
என்றும் என் இருமலுக்கு
கைகண்ட மருந்து.



ஸ்பிகா:ப்

அதிமதுரம், சோம்பு எண்ணெய் கொண்ட ஸ்பிகாஃப்,
மார்புச் சளியைக் கரைக்கிறது.
தொண்டை ரணத்தின் மீது படர்ந்து இதமளிக்கிறது.



SPIC

சதர்ன் பெட்ரோகெமிகல்
இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்
ஃபார்மசூடிகல் டிவிஷன்,
92, G.N. செட்டி ரோடு, சென்னை-17.

PROFAD/SPIC/321/89/TAM

உங்கள் கட்சி

தேர்தலில்

சுலபமாக வெற்றி பெற


1. நல்லோர்களை காப்பாற்றுவோம் என்று அறிக்கை விடுங்கள்.
2. நல்லோர்களை பாதிக்கும் சட்டங்களை திருத்துவோம் என்று கூறுங்கள்.
3. எங்கள் ஆட்சியின் அஸ்திவாரம் நல்லோர்களை காப்பாற்றுவது என்று கூறுங்கள்.

ஒரு நல்லோனை காப்பாற்றினால் ஒரு லட்சம் ஓட்டு கிடைக்கும்.

ஒரு நல்லோனை பாதிக்கும் சட்டத்தை திருத்தினால்
ஒரு கோடி ஓட்டு கிடைக்கும்.

-எப்படி என்றால்-

சிறிய போட்டோவில் இருப்பதுதான் பெரிய போட்டோவில் இருக்கின்றது.



தனிப்பட்ட மனிதன் நல்லோர்களின்
ஆசியினால்தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான்.
அதேபோல உங்கள் கட்சி வெற்றி பெற
நல்லோர்கள் ஆசி தேவை.

ஆகையால் நல்லோர்களுக்கு கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி
விநியோகிக்கவும்.

ஸ்ரீ கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

நெ. 24, 2 வதுமெயின் ரோடு, காந்தி நகர்
அடையாறு, சென்னை 20 போன்: 412557



இலங்கையின் வடக்கு — கிழக்கு மாகாண முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜ பெருமாளுக்கு முப்பத்தாறு வயது. யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். இடியாப்பம் செய்து விற்கும் வறுமையான குடும்பம். அந்த வறுமையிலும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. படித்தவர். படிக்கிற காலத்தி லேயே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் மத்திய கமிட்டி உறுப்பினர். அதன் காரணமாக வெளிக்கடைச் சிறை யில் மூன்றாண்டு காலம் அடைக்கப்பட்டார். அப்போது தாயா ரைக் காலனுக்குப் பறிகொடுத்தார். பிறகு மீண்டும் 82 — இல் மட்டக்களப்புச் சிறையில் அடைக்கப்பட்டார். 83 ஆகஸ்டில் சிறையிலிருந்து தப்பித்து இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். இந்தியா- இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகே மீண்டும் இலங் கைக்குச் சென்றார். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர். மூன்று பெண் குழந்தைகளுக்குத் தந்தை. மனைவி கௌரி பிரபலமான நாடக நடிகை.

முதல்வர் வரதராஜ பெருமாள் எப்போதும் இயந்திரத் துப்பாக்கிகளை ஏந்திய பாதுகாவலர்களுக்கு மத்தியில்தான் இருக்கிறார் என்றாலும், மற்றபடி நம்மூர் எம். எல். ஏ. அளவுக்குக் கூட பந்தாக்கள் ஏதுமில்லை.

இரண்டு நடவடிக்கைகளுமே இந்திய அமைதிப்படை இங்கே இருக்கிறபொழுதே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கையும் விருப்பமும். இப்படி நிறைவேற்றப்படுவதற்கு முன்பே இந்திய அமைதிப்படை வாபஸ் ஆகும் போது, மீண்டும் இங்கே குழப்பங்களும் போராட்டங்களும் உருவாகக்கூடிய சூழ் நிலையைத் தவிர்க்க முடியாமல் போகும். இந்த நிலையில் இந்திய அமைதிப்படை வாபஸ் ஆவதில் எங்களுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் கூட, அது இங்கே தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும் எங் களால் வற்புறுத்த இயலாது.

கேள்வி: இந்திய அமைதிப் படையின் செயல்பாடுகள் குறித்து உங்களுக்கு முழுத் திருப்தி என்று சொல்லலாமா?

வ. பெருமாள்: அதன் செயல்பாடுகள் குறித்து முழுத் திருப்திதான் என்றாலும், இந்தியா — இலங்கை ஒப்பந்தம் முழுமை யாக நிறைவேறுவதற்கு முன்பே அது இலங் கையை விட்டு வெளியேறுவதில் எங்க ளுக்கு முழுத் திருப்தி என்று சொல்லிவிட முடியாது.

கேள்வி: ஒப்பந்தம் முழுமையாகச் செயல்படுத்தப்படுவதற்கு முன்பே அது வெளியேறுவதற்கு என்ன காரணமாக இருக்குமென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

வ. பெருமாள்: பல காரணங்கள் இருக்க லாம். ஆனால், ஒன்று மட்டும் நான் சொல் வேன். 'இலங்கைப் பிரச்னை என்பது அதன் உள்நாட்டுப் பிரச்னை. அதில் இந்தியா தலையிடக் கூடாது. உடனடியாக அமைதிப்படையினரை இந்தியா வாபஸ் பெற்றுவிட வேண்டும்' என்று பேசுகிற இந்திய அரசியல்வாதிகள், நாளைக்கு இலங் கைத் தமிழர்கள் தங்களது உரிமைகளுக் காகவும் பாதுகாப்புக்காகவும் போராடுகிற போது ஏற்படுகிறதொரு நெருக்கடி நிலை, இந்தியாவைப் பாதிக்கும் என்று அவர்கள் பேசக் கூடாது என்பதுதான் எங்களது கோரிக்கை.

கேள்வி: எந்த விதத்தில் இந்தியாவைப் பாதிக்கும் என்று சொல்கிறீர்கள்?

வ. பெருமாள்: பாதிக்குமோ, பாதிக் காதோ... நாளைக்கு இலங்கை இரண் டாக... மூன்றாக... பத்தாக உடையும் நிலை ஏற்பட்டு, ஒன்றில் அமெரிக்காவும் ஒன்றில் சோவியத் யூனியனும், ஒன்றில் சீனா வும் பிறிதொன்றில் பிரிட்டனும் வந்து இருக்கிற போது... அதெல்லாம் இந்தியா வின் பாதுகாப்புக்கு ஆபத்து என்று எவரும் பேசக் கூடாது என்று சொல்கிறேன்.

கேள்வி: இந்திய அமைதிப்படை தனித் தமிழ் ஈழத்தைப் பெற்றுத் தந்திருந்தால் பிரச்னையே இல்லை என்று சொல்ல வருகி றீர்களா?

வ. பெருமாள்: நான் அப்படிச் சொல்ல வரவில்லை. இன்றைய இந்திய அரசு மேற் கொண்ட செயல்பாடுகளையும் நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். அதற்கெல்லாம் நாங்கள் இந்தியாவுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.

கேள்வி: ஆயினும் கூட இப்போது இந்திய அமைதிப்படை படிப்படியாக வெளியேறிக் கொண்டிருப்பதில் உங்க ளுக்கு முழுத் திருப்தி இல்லை, இல்லையா?

வ. பெருமாள்: இலங்கை அரசும் தான் கொடுத்த வாக்குறுதியை இன்னும் நிறை வேற்றவில்லை. இந்திய அரசும் தமிழர்களுக் குக் கொடுத்த வாக்குறுதியை இன்னும் இலங்கை மண்ணில் நிறைவேற்றவில்லை. இந்த நிலையில் அமைதிப்படை வெளி யேறுவதில் எங்களுக்குத் திருப்தி என்று

எப்படிச் சொல்ல முடியும்? இந்தியா — இலங்கை ஒப்பந்தத்தின்படி, போராளி இயக்கங்களெல்லாம் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென்று இரண்டு அரசாங்கங்களும் கூறின. அதன்படி நாங்கள் ஒப்படைத்தோம். புலிகள் அப்படி ஒப்படைக்க மறுத்த போது, இந்திய அரசு பலாத்காரமாகப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க நடவடிக்கை எடுத்தது. அதேபோல, இலங்கை அரசும் ஒப்பந்தப்படி தமிழர்களுக்கான பாதுகாப்பையும் உரிமைகளையும் வழங்காத போது, இந்திய அரசு, இலங்கை அரசையும் ஒப்பந்தப்படி நடக்க வேண்டுமென்று வற்புறுத்தலாமே! அப்படி வற்புறுத்த வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். இன்னும் சொல்லப் போனால், இந்தியா — இலங்கை ஒப்பந்தப்படி, புலிகளிடமிருக்கும் ஆயுதங்களைப் பறிக்கும் உரிமை இந்திய அரசுக்கு இருக்கிறதென்றால், அதேபோல, ஒப்பந்தப்படி நடக்காத இலங்கை அரசை நெருக்குகிற உரிமையும் இந்தியாவுக்கு இருக்கிறது. ஆனால் செய்யவில்லை. அப்புறம் எப்படி நாங்கள் திருப்திப்பட முடியும்?

கேள்வி: இதுபற்றி நீங்கள் இந்திய அரசுடன் பேசவில்லையா?

வ. பெருமாள்: பேசியிருக்கிறேன். ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, இந்திய அமைதிப்படை வாபஸாகக் கூடாது என்பதைத் தெளிவாகவே கூறியிருக்கிறேன்.

கேள்வி: அப்படியிருந்தும் வெளியேறுவதற்கான காரணம் என்னவாக இருக்குமென்று கருதுகிறீர்கள்?

வ. பெருமாள்: ஒருவேளை இந்தியாவின் உள்நாட்டு நிர்ப்பந்தங்களும் சர்வதேச நிர்ப்பந்தங்களும் காரணமாக இருக்கலாம். அது எப்படியிருந்தாலும் அமைதிப்படை இருக்கும்போதே ஒப்பந்தப்படி எங்களுக்கு உரிமைகளை வழங்காத சிங்கள அரசு, அது வெளியேறிய பிறகு எப்படி வழங்கும்? ஆக, எங்கள் போராட்டம் ஓய்ந்து விட்டதென்று சொல்ல முடியாது.

கேள்வி: உங்கள் போராட்டம் இலங்கை அரசோடு மட்டுமல்ல, ஜே. வி. பி. இயக்கத்தோடும் இருக்கும் என்று சொல்லலாமா?

வ. பெருமாள்: இருக்கிற அரசு ஊழியர்களுக்கே சம்பளம் தர முடியாத நிலை இலங்கை அரசுக்கு. இந்த நிலையில் எப்படிப் புதிய வேலை வாய்ப்புக்களை இலங்கை அரசால் ஏற்படுத்த முடியும்? ஆக, பொருளாதாரச் சரிவால் இளைஞர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட விரக்தியின் வெளிப்பாடுதான் ஜே. வி. பி. இயக்கம். சிங்கள இனவாதம் எங்களுக்குப் புதிதல்ல. பல்லாண்டு காலமாக நாங்கள் பார்த்து வருவதுதான். இவற்றையெல்லாம் நாங்கள் சமாளிப்போம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

கேள்வி: இன்னொரு பக்கம் விடுதலைப் புலிகளின் வன்முறைப் பயங்கரவாதப் போக்கையும் நீங்கள் சமாளித்தாக வேண்டும். விடுதலைப் புலிகளை இவ்வளவு பலம் பொருந்திய இந்திய ராணுவத்தினாலும் அடக்க முடியாததற்கு என்ன காரணம்?

வ. பெருமாள்: இலங்கையில் காடுகள் ஏராளம். அதில் ஒரு லட்சம் படைகளையல்ல, ஐம்பது லட்சம் படைகளை இறக்கினாலும் அவற்றிடமிருந்து சிலரால் தப்பித்துக் கொண்டு, உயிர் வாழ முடியும். அப்படித் தப்பித்துக் கொண்டு உயிர் வாழ்வதாலேயே அவர்கள் பலம் பொருந்தியவர்களாகவோ அல்லது வீரர்களாகவோ ஆகிவிட முடியாது.

கேள்வி: விடுதலைப் புலிகள் பற்றிய உங்கள் கருத்து எதுவாயினும் புலிகள் சமாதான வழிக்கு வந்தால் நீங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறீர்கள், இல்லையா?

வ. பெருமாள்: நிச்சயமாக. நாகரிகமடைந்த மனிதர்களின் வாழ்க்கை சமாதான வாழ்க்கையாகத்தானே இருக்க முடியும்!

பேட்டி, படங்கள்: **இளங்கோவன்.**

திரிகோணமலை:
பயந்து பயந்து வாழ்க்கை...

ஒரு புறம் பார்த்தால் கடலலைகளின் தாலாட்டு. இதர பக்கங்களில் பச்சைப் பசேலென்று அடர்ந்து கிடக்கும் கானகங்களும் வயல் வெளிகளும். இலங்கை வடக்கு — கிழக்கு மாகாண அரசின் தலைநகர் திரிகோணமலை அழகு கொஞ்சும் ஊர்.

அவரவரும் வேலைக்குச் செல்கிறார்கள். குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றன. ஆனாலும் மக்களின் நடமாட்டம் இயல்பானதாக இல்லை. ஏதோவொரு நிர்ப்பந்தம் போல் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறார்கள். கடைகளில் வியாபாரம் செய்கிறார்கள். சூரியன் மறைந்ததுமே வீடுகளை அடைத்துக் கொள்கிறார்கள். அனைவருக்கும் பாதுகாப்பாக எங்கு நோக்கினும் இயந்திரத் துப்பாக்கிகளுடன் நமது இந்திய அமைதிப் படையினர் காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பகல் வேளைகளில் கூட சிங்களர் வாழும் பகுதிகளுக்குத் தமிழ் மக்கள் செல்ல அச்சப்படுகிறார்கள். அதேபோல்தான் சிங்களர்களுக்குத் தமிழர் பகுதிகளுக்கு வர அச்சம். காரணம், பரஸ்பர நம்பிக்கை இன்மைதான்.

"குழந்தைகளின் மனோ நிலையில் கூட ஒரு தலைகீழ் மாற்றம் நடந்துவிட்டது. அவர்கள் விளையாடுகிற விளையாட்டுக்களில் கூட 'ஸ்டென் கன்'களும், கண்ணி வெடிகளும்தான் இடம் பெறுகின்றன. ஆக, தீவிரவாதம் என்பது, எங்கள் அடுத்த தலைமுறையினரையும் பாதித்துவிட்டது!" என்றார் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து, திரிகோணமலையில் வேலை பார்க்கும் ஓர் அதிகாரி.


முன்பு நகரசபைக் கட்டடமாக இருந்தது தான் இப்போது மாகாண அரசின் தலைமைச் செயலகமாக மாறியிருக்கிறது. வாசலில் அமைதிப்படை ஜவான்கள் காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள். தலைமைச் செயலகத்துக்கு எதிரிலேயே முதல்வர் வரதராஜ பெருமாளின் வீடு. அங்கும் நமது ஜவான்களின் பலமான காவல்.

இந்தனை கட்டுக் காவல்களுக்கு மத்தியில் எப்படி அசம்பாவிதங்கள் நடக்க முடியும்? திரிகோணமலையில் இப்போது அமைதி நிலவிக் கொண்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், அந்த அமைதியில் தென்றலின் இதமில்லை; கோடை அனலின் புழுக்கம்தான் உணர்கிறோம்.

* திரிகோணமலை: பயத்துடன் கூடிய நடமாட்டம்.



* மாகாண அரசின் தலைமைச் செயலகம் — பலத்த பாதுகாப்புடன்.





நாங்க சொல்ற இடத்துலதான் நீ வேட்பு மனு போடணும்!
வேட்பு மனு
அரசியல்லே ஜமீன்தார் முறையை நான் ஏத்துக்க முடியாது!
அர்ஜுன் சிங்
பந்த்
போஃபர்ஸ்லே ஊழல் இல்லை!.. ஊழல் இருந்தாலும் இந்தியர் கமிஷன் வாங்கல்லே. இந்தியர் வாங்கினாலும் எனக்கு பங்கு இல்லை.. டைரி சமாச்சாரம் ஒரு ரீல்!.. நம்பாதீங்க! எனக்கே வோட் போடுங்க!
போஃபர்ஸ்
எம்.ஜி.ஆர். நினைவிடத்தைக் கோலாகலமாகத் திறப்பு விழா நடத்துகிறேன்...
எம்.ஜி.ஆர். விருந்தை அமர்க்களமா அளிக்கிறேன்!
எம்.ஜி.ஆர். வாழ்க!
வாழ்க எம்.ஜி.ஆர்!
தி.மு.க. வுக்கு —
உதயசூரியனுக்கு வோட் போடுங்க!



கல்கி

1989 நவம்பர் 12
மலர் 48 இதழ் 15
சுக்ல ஐப்பசி 27



மோகன காந்தி Vs மோசடி காந்தி!

'காங்கிரஸுக்கும் ராஜீவ் காந்திக்கும் வோட்டுப் போடக் கூடாது என்று நடுநிலைப் பத்திரிகையான கல்கி எழுதலாமா?' என்று சிலர் கேட்கிறார்கள். நடுநிலைமை என்பது, 'எப்படியோ போங்கள், யாருக்கு வேண்டுமோ வோட்டுப் போட்டுக் கொள்ளுங்கள்' என்று கூறி ஒதுங்குவதல்ல; அது கோழைத்தனம். மெய்யான நடுநிலை என்பது, இன்றைக்குள்ள சூழ்நிலையை விருப்பு வெறுப்பு இன்றிச் சீர்தூக்கிப் பார்த்து, நாட்டுக்கு நல்லது எது என நிர்ணயித்து, அதனை மக்களுக்குச் சிபாரிசு செய்வதேயாகும். கல்கி, காங்கிரஸுக்கும் எதிரி அல்ல; ராஜீவின் விரோதியும் அல்ல. இந்தப் பத்திரிகையின் ஆரம்ப காலத்திலிருந்தே இதனுடன் தொடர்பு கொண்டிருந்த கல்கி, சதாசிவம், ராஜாஜி ஆகியோர், காந்தி பக்தர்கள்; தீவிர காங்கிரஸ்காரர்கள். சுதந்திரப் போராட்டத்தின் பல இயக்கங்களிலும் பங்கு பெற்றுப் பலமுறை சிறை வாசம் அனுபவித்தவர்கள். அந்தக் காங்கிரஸுக்கு இன்னும் நமது உள்ளத்தில் தனியிடம் உண்டு. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இன்றைய தமிழக காங்கிரஸோ, அகில இந்திய காங்கிரஸோ நாம் ஆதரித்து மகிழக் கூடிய விதத்தில், செயல்படவில்லையே! ராஜீவ் காந்தி பதவிக்கு வந்த புதிதில் எழுதப்பட்ட கல்கி தலையங்கங்கள் நாம் அவரது விரோதி அல்ல என்பதை நிரூபிக்கும். ஆனால் நமது நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்வதற்குப் பதில், அவர், தம்மைத் திறமையற்றவர் என்று நிரூபித்துக் கொண்டது மட்டுமல்ல; லஞ்ச ஊழல், பொய் — பித்தலாட்டம், எதேச்சாதிகாரப் போக்கு இவற்றின் மொத்த உருவமாகவும் திகழ்கிறார்! அவரை எவ்வாறு தொடர்ந்து ஆதரிக்க முடியும்?


ஒன்றன் பின் ஒன்றாக அவரது முகமூடிகள் கிழிக்கப்பட்டு விட்டன. சமீபத்தில் ஆர்ட்போ டயரிக் குறிப்புக்கள் அம்பலமானதில் கடைசி முகமூடியும் கிழிந்துவிட, அவர் ஒரு லஞ்ச ஊழல் மன்னராகக் காட்சி தருகிறார்! பொய் சொல்லி, நாட்டு மக்களை ஏமாற்றி, அவர்களுடைய வரிப்பணத்தைக் களவாடி, அயல் நாட்டு வங்கிகளில் போட்டு வைக்கும் தேசத்துரோகியாக அவரை ஆர்ட்போ டயரிக் குறிப்பு இனம் காட்டுகிறது. எனவே நடுநிலையில் நின்று, நாட்டு நலன் கருதி, அவருக்கு வோட்டுப் போடக் கூடாது என்று எழுதுவது நமது தலையாய கடமையாகிறது.


எதிர்க்கட்சிகள் பதவிக்கு வந்தால் உடனே எல்லாம் சரியாகிவிடும் என்று அர்த்தமில்லை. தட்டுத் தடுமாறித்தான் அவர்கள் சமாளிக்க வேண்டியிருக்கும். விழுந்து எழும்போது கையைக் காலை அவர்கள் முறித்துக் கொள்ளவும் நேரலாம். ஆனால் நாளடைவில் அவர்கள் சரியான பாதையைப் புரிந்து கொண்டு, நல்லவிதமாக நாட்டை நடத்திச் செல்வார்கள் என்று நம்பித்தான் வோட்டு அளிக்க வேண்டும். இந்த நம்பிக்கை பொய்த்துப் போனால் காங்கிரஸை மன்னித்து, மீண்டும் அதற்கு வாய்ப்பளிக்கலாம். ஆனால் இந்தத் தேர்தலில், மோசடி மன்னர் ராஜீவை மட்டுமின்றி, அவரைத் தலைவராக ஏற்றுள்ள காங்கிரஸையும் நாம் தண்டித்தே ஆகவேண்டும். இல்லையெனில், இன்று ஆட்சியிலுள்ள கொள்ளைக்காரக் கும்பலே மீண்டும் பதவிக்கு வர, அவர்கள் மமதை கட்டிப்பிடிக்க முடியாத அளவில் வளர்ந்துவிடும். நாம் மீள முடியாத அடிமைகளாகிப் போவோம். முன்பு எமெர்ஜென்ஸி கொண்டு வந்ததற்காக இந்திய மக்கள் இந்திராவைத் தண்டித்துப் பாடம் புகட்டியது போல், அதே விவேகத்துடன் இந்தத் தேர்தலிலும் நடந்து கொள்ள வேண்டும்.

அமேதி தொகுதியில், நேருவின் பேரன் என்று கூறிக் கொள்ளவோ, ஃபிரோஸ் காந்தியின் மகன் என்று சொல்லிக் கொள்ளவோ, கொஞ்சமும் அருகதையற்ற மோசடி மன்னர் ராஜீவ் தேர்தலில் நிற்கிறார். அவருக்கு எதிராக, சத்தியத்தின் உருவகமாக, காந்திஜி — ராஜாஜி ஆகியோரின் பேரனும் நல்லறிஞரும், சிந்தனையாளரும், உழைப்பாளியுமான ராஜ்மோகன் காந்தி போட்டியிடுகிறார். அதர்மத்துக்கும், தர்மத்துக்கும்; திறமையின்மைக்கும், ஆற்றலுக்கும் இடையில் நேரடி மோதல்! நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் படித்த இளைஞர்கள் அமேதிக்கு வந்து, சிரமம் பாராமல் உழைத்து, தமக்கு உதவ வேண்டும் என்று ராஜ்மோகன் காந்தி கோருகிறார். ஏற்கெனவே அரசு கஜானாவிலிருந்து செலவழித்துள்ள 700 கோடி ரூபாய் தவிர, மேலும் பல கோடிகள் அமேதியில் தேர்தலை முன்னிட்டு ராஜீவால் இப்போது கொட்டப்படும். நாட்டின் பல்வேறு தொகுதிகளிலும், இப்படியே பல கோடிகளை வாரிவிட்டு, காங்கிரஸ் வோட்டுக் கேட்கும். பணத்தால் மக்களை விலைக்கு வாங்க நடக்கும் இந்த முயற்சி தோல்வி அடைந்தே தீர வேண்டும். பணத்தைக் காங்கிரஸிடம் வாங்கிக் கொண்டாலும் வோட்டை எதிர்க்கட்சிக்கு அளித்து விட வேண்டும்!

இதையெல்லாம் மக்களுக்கு உணர்த்த, எதிர்காலத் தலைவர்களான இன்றைய இளைஞர்கள் எழுச்சி கொள்ளட்டும்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.


ஐயோ... ஐயோ... தீ...
ஏன்யா சுந்தரமே. கொலைகாரனைக் கண்ட மாதிரி.. நான் வோட்டு கேக்க வந்திருக்கேன்!
என் குடும்பத்திலே சொளையா இருபத்தேழு வோட்டு உங்களுக்கு வேணும்! ஒரு கண்டிஷன். வரதட்சணை இல்லாம என் பொண்ணை உங்க பையனுக்குக் கட்டிக் கணும்!
• என்னப்பா, போஸ்டர் ஒட்ட அநியாய கூலி கேக்கற?
• சார் தான் மறந்துட்டய்யா! நானும் உன்னைப் போல எம்.பி. எலக்ஷனுக்கு நின்னவன் தான்! எனக்குத் தெரியாதா?
ஒரு வோட்டல அவர் தோத்துடக் கூடாதுன்னு கடவுளைப் பிரார்த்தனை பண்ணிக்கிட்டு இருக்கேன்! நான் தான் அவருக்கு வோட் போடலைன்னு சந்தேகப் படுவார்!
• என்னது, உடம்பெல்லாம் கட்டு?
• தெரியாத்தனமா போஃபர்ஸ் ஊழலே நடக்கலேன்னு பேசித் தொலைச்சுட்டேன்!



மருந்துக்கு நிக்காது! தினம் நாலு
பேராவது 'உங்களுக்கே ஓட்டுப்
போடறோம்'னு வந்து சொல்ல
ணும்! அப்பத்தான் ஜுரம் நிக்
கும்! இது தேர்தல் ஜுரம்!
உங்க தேர்தல்
வாக்குறுதி புஸ்தக
ங்களைப் பாத்துட்டு
தாங்க!
என்னத்தையெல்லாம் நீங்க இனாமா
குடுத்தாலும் எங்க ஓட்டு மாத்
திரம் இனாமா கெடைக்காது!
இஷ்டாருங்க'.. பெரிய
பெரிய சினிமாக்காரங்க
எல்லாம் நம்ம கிட்ட
வந்து கெஞ்சப் போறா
ங்க, ஓட்டுக்காக!
டாப்டக்கரா மேக்கப்
போட்டுக்க!
தேர்தல் ஜுரம்!
பேசக் கத்துக்கறது பிரயோஜனமில்லே!
நான் புஸ்தகம், நாற்காலி, மைக், சோடா
பாட்டில், சைக்கிள் செயின் வீசுவேன்!
அதுங்களைத் தடுக்கக் கத்துக்க!

இமயக் கமல் முயன்றால் முடியும்!

வட்ட மேஜை

* விநோதானந்த் எழுதிய 'பேகம் பொம்மைகள்' எனும் சிறுகதை மிகவும் தரமாய் இருந்தது. பேச்சி லும், எழுத்திலும் வீரத்தையும், துணிவையும் காட்டும் நபர் நிஜ வாழ்க்கையில் சுயமாகச் சிந்தித்து துணிவு டன் செயல்படாமல் கோழையாய் இருப்பதால் காதலி வித்யா அவரை விலக்கியது மிகவும் பாராட் டும்படியாக இருந்தது.

ஈரோடு — 3. மேஜர்தாசன்.

* பொன்னியின் செல்வன் திரைக் கதையைத் தீவிர வாசகர்கள் சிலரிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லி, ஸ்கிரிப்ட் முழுமை யானதாக — திருப்திகரமானதாக இருக்கிறதா என்று கருத்துக் கேட்டு, தேவையெனில் அவர்கள் கருத்துப் படி சில மாறுதல்களையும் செய்வேன் என்று கமல் கூறியது அவரின் உயர்ந்த பண்பை எடுத்துக் காட்டு வது. (பொ. செ.) கதையைப் படமாக்கும் கமல் அவர்களுக்குக் கல்கி வாசகர்கள் சார்பாக வாழ்த் துக்கள்!

சீர்காழி. சிவ. சண்முகம்.

* எத்தனை முறை படித்தாலும் திகட்டாத அதே சமயம் எத்தனை முறை படித்தாலும் திகைப்படையச் செய்யும் இவ்வளவு பெரிய சரித்திர நாவலை அன்று கல்கி எப்படித்தான் எழுதினாரோ என்று ஓராயிரம் முறை சிந்தனை செய்ததுண்டு. பொன்னியின் செல்வன் படித்து அதில் ஊறிய ஒவ்வொரு வாசக னும் நிச்சயம் அந்தச் சரித்திரம் தன் முன்பே நடப்ப தாகவே நினைப்பான். என்னை'. போன்ற ஒரு சில பைத்தியங்கள் ஒரு படி மேலே போய் தாங்களும் அதில் வரும் பாத்திரங்களுள் ஒன்று என்று நினைப் பார்கள். அப்படி ஒரு ஈடுபாடு அதில்! இன்றைய கலைத் தாயின் நாயகன் கமலுக்கு அதே போன்ற ஈடுபாடு ஏற்பட்டதில் வியப்பில்லை. டென் கமாண்ட்மென்ட்ஸ், பென்ஹர் போன்று பெரிய படங்களாக (சுமார் 4½ மணி நேரம்) பொன்னியின் செல்வனைத் தயாரித்து, படத்துக்கு உயிரோட்டமும் உணர்வும் கொடுத்து என்னைப் போன்ற கோடிக் கணக்கான வாசகர்களின் ஆவலை இமயக் கமல் நிச்சயம் பூர்த்தி செய்து, மாபெரும் வெற்றியும் பெறு வார் என்று நம்புகிறேன்.

சென்னை — 92. கே. ராஜகோபால்.

* அமரர் கல்கி எழுதிய பல அமரகாவியங்களுள் மிகச் சிறந்த படைப்பான பொன்னியின் செல்வ னைப் படமாக்கக் கமல் விரும்புவது மிக மிக இயற்கையே ஆனாலும் அரசு ஐந்தாண்டு திட்டங்கள் போட்டு ஏழையை மேலும் ஏழையாக்கி உள்ள நிஜத் தின் முன்னால் கமலின் திட்டமும் பயமே தருகிறது.

கம்பரசம்பேட்டை. என். பானு.

* தீபாவளிச் சிறப்பிதழ் உண்மையிலேயே சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளதுதான். இரண்டு 'டாப்'பான புதுக் கவிதைகள், மலையாள மொழிபெயர்ப்புக் கதை இலங்கை தெனாலிராமன் கதைகள், பட்டாசுக் கட்டுரை... இவ்வளவுக்கும் மேலாக சேமிப்பு பற்றிய சிறப்புக் கட்டுரை... "Superb!"

புதுவை — 7. 'பரிதி' வேங்கடேசன்.

* சரண் ஏறினால் முழம் சறுக்குகின்ற இன்றைய பொருளாதார சாகரத்தில், சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பினும், அதைச் செயலாக்கத் திறமை யும் திட மனதும் வேண்டும் என்று எழுதியிருப்பது மிகப் பெரிய உண்மை. மொத்தத்தில் இக் கட்டுரையே அரிய செல்வமாக வைத்துக் கொள்ளும்படி இருக் கிறது. நாளொரு மேனியாய்த் திடுக்கிட வைக்கும் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டு மனம் சோர்ந்து விடும் நேரத்திலேதான் டானிக் போல கட்டுரை எங்களை எட்டியுள்ளது.

தெசப்பாக்கம். கு. மாலதிகுசேலன்.

* **Stand and deliver** திரைப்பட விமர்சனம் படித்தேன். மனம் நெகிழ்ந்தேன். இனிமேலா வது கோடம்பாக்கத்துக் குமரிகளைக் குருவி ரெட்டியூரில் காட்டுவதையே திரைப்படப்புரட்சி என்று சொல்லி வரும் கருத்துக் குருடர்களின் கண் கள் திறக்கட்டும். உண்மையான கலை நுணுக்கம் கதை அம்சம் கொண்ட படங்கள் நம் நாட்டிலும் வெளிவரட்டும்.

ஈரோடு. டி. சந்திரன்.

* ராஜீவுக்கு வாக்களிப்பது தேசத் துரோகத் துக்குத் துணை போவது போன்றது என வலியுறுத்தி, விளக்கிக் கூறிய தலையங் கமும், வரும் தேர்தலில் அவரைத் தோற்கடிக்க வேண்டிய பொறுப்பு மக்களைச் சேர்ந்தது என்று சுட்டிக்காட்டிய கார்ட்டூனும் அருமையாக இருந்தன.

வேலூர். கே. ஆர். தேவேந்திரன்.

* சமீப காலமாக நீங்கள் ராஜீவ் காந்தியின் அரசைத் தாக்கி எழுதி வருவது கொஞ்சம் நடுநிலை மீறியதாகவே என்னைப் போன்ற நீண்ட கால வாசகனுக்குத் தோன்றுகிறது. நீங்கள் இன்றைய இந்திய அரசியலில் ஜவஹர்லால், படேல், ராஜாஜி, சாஸ்திரி போன்றவர்களை எதிர்பார்க்கிறீர்கள். ஆனால் எங்களுக்கு என்.டி.ஆர், தேவிலால், கலைஞர், வி.பி. சிங் இவர்களை விட ராஜீவ் காந்தி எவ்வளவோ மேல் என்று தோன்றுகிறது.

விழுப்புரம். கே. எஸ். குமார்.

* சென்ற 1989 ஜனவரி மாதத்தில் கோபால கிருஷ்ண பாரதியார் வாழ்ந்த ஆனந்ததாண்டவ புரத்தில் டாக்டர் செம்மங்குடி ஆர். ஸ்ரீநிவாஸ அய்யர், டாக்டர் மதுரை எஸ். சோமசுந்தரம் ஆகியோரது தலைமையின் கீழ் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, பாரதியாரின் புகழைப் போற்றும் வகையில் ஓர் இசைவிழா மிகச் சிறப்பாக நடை பெற்றது.

வருகிற ஜனவரியிலும் இசை விழா நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. விழாவையொட்டி ஒரு சிறப்பு மலர் வெளியிடவிருக்கிறோம். தமிழ் இசை இலக்கிய அன்பர்கள் பாரதியார் வாழ்க்கை சம்பந்தப்பட்ட அபூர்வ நிகழ்ச்சிகளையும், அவர் இயற்றிய அபூர்வ (அச்சில் ஏறாத) கீர்த்தனைகளை யும் எங்களது அடியிற் கண்ட முகவரிக்கு அனுப் பித் தந்தால் தேவையானவற்றை வெளியிட உதவியாக இருக்கும்.

இசை விழா பற்றிய ஆலோசனைகளையும், உதவிகளையும் அனுப்பி வைக்க வேண்டு கிறோம்.

ஆனந்ததாண்டவபுரம் அஞ்சல், பி. ராமதாஸ்
609 103. அமைப்பாளர்,
கோபாலகிருஷ்ண பாரதி
இசை விழாக் கமிட்டி.

ரோட்டரி தலைவி ரேகா!



பார்த்த மாதிரிதெரிகிறதா...?

....டீ.வி.யில் ஐ. கியூ நிகழ்ச்சியில் பங்கேற்ற ரேகா ஷெட்டி தான்! அப்போலோ மருத்துவமனையில் அவரைச் சந்தித்து. "உங்களைப் பற்றின விவரங்கள்..." என்று ஆரம்பித்தவுடன் தமது வாழ்க்கைக் குறிப்பின் ஜெராக்ஸ் பிரதியை எடுத்துத் தந்தார். நான்கு பக்கங்கள்! தற்போது அப்போலோ மருத்துவமனை, ஹெல்த் அசோசியேஷனின் துணைத் தலைவர். தோலாடை ஃபாஷன் ஷோ நடத்தியது முதல் ஜர்னலிசம் பயிற்சி வகுப்புகள் நடத்தியது வரை பலவித அனுபவங்கள். இந்த யூனிவர்சிடி செகண்ட் ராங்க் எம்.ஏ. பட்டதாரிக்கு.

⇒

ரோட்டரி சங்கங்களின் சமூகப் பணிகளுக்காக, 1986ல் நிதி சேர்ப்பு நிகழ்ச்சியை நடத்தி, நான்கு லட்சம் ரூபாய் நன்கொடை வசூலித்துக் கொடுத்த போது, இவரைப் பார்த்து வியப்படையாதவரில்லை. ரேகா ஷெட்டியைச் சமீபத்தில் வந்தடைந்துள்ள பெருமை ரோட்டரி சங்கத்தின் தலைமைப் பொறுப்பு. அமெரிக்கா தவிர வேறெந்த நாட்டுப் பெண்ணும் இதுவரை ரோட்டரி தலைமைப் பொறுப்பு வகித்தது கிடையாது!

ரோட்டரி சங்க வரலாறைத் தமது அமைதியான குரலில் கூறினார் ரேகா:

** பால்.பி.ஹாரிஸ் என்கிற அமெரிக்க வழக்கறிஞர் ஒரு மாலைப்பொழுதில், நண்பர் ஒருவருடன் வாக்கிங் போய்க் கொண்டிருந்தார். அது சிகாகோ நகரத்தின் வர்த்தகப் பகுதி. போகும் வழிநெடுக, ஹாரிஸின் நண்பர் தம் தொழில் ரீதியான நண்பர்கள் நிறையப் பேரை, ஹாரிஸுக்கு அறிமுகம் செய்து வைத்தபடியே இருந்தார். இதைக் கண்டு வியப்படைந்த ஹாரிஸ், 'நாமும் ஏன் இப்படிப்பட்ட ஒரு நண்பர்கள் வட்டத்தை ஏற்படுத்தி, அவ்வப்போது சந்தித்து உரையாடக் கூடாது?' என்று எண்ணினார். உடனடியாக அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு ரோட்டரி சங்கத்தை உருவாக்கினார்.

** ரோட்டரி என்கிற பெயர் எப்படி வந்தது தெரியுமா? ஆரம்பத்தில் அந்தச் சங்கத்து உறுப்பினர்கள் 'ரொடேஷன்' முறையில், ஒவ்வொருவருடைய இல்லத்திலோ நிறுவனத்திலோ கூடிப் பேசினார்கள் என்பதால்தான்.

** வெகு சீக்கிரமே உலகின் பல நாடுகளிலும் ரோட்டரி சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதால், 'ரோட்டரி இன்டர் நேஷனல்' என்று பெயர் பெற்றது. இன்று உலகெங்கும் சுமார் 165 நாடுகளில், 24 ஆயிரத்துக்கும் அதிகமான ரோட்டரி சங்கங்கள் இயங்கி வருகின்றன. தலைமையகம் அமெரிக்காவில் 'இல்லினாய்ஸ்' நகரில். மொத்த உறுப்பினர்கள் சுமார் பத்தரை லட்சம் பேர்!

** எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் 1. இது சத்தியத்துக்குக் கட்டுப்பட்டதா? 2. வேறு யாருக்கும் தீங்கு விளைவிக்காமல் இருக்குமா? 3. உலக சகோதரத்துவம், மேம்பட உதவுமா? 4. சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பயனுடையதாய் அமையுமா?

என்கிற இந்த நான்கு கேள்விகளையும் கேட்டுக் கொண்டு, 'ஆம்' என்ற பதில் கிடைத்தால் அக் காரியத்தை ரோட்டரி சங்க உறுப்பினர்கள் செய்வார்கள்.

** பள்ளிக்கூட மாணவர்களுக்காக, ரோட்டரி சங்கங்களால் துவக்கப்படும் அமைப்புக்களுக்கு 'இன்டர் ஆக்ட் கிளப்' என்று பெயர். அதே போல, கல்லூரி மாணவர்களுக்கு உரியது ரோடராக்ட் கிளப்.

** முதலில் ஆண்கள் மட்டுமே, ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராகலாம் என்கிற விதியிருந்தது. இதை எதிர்த்து, அமெரிக்கப் பெண்மணியொருவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததன் பேரில், பெண்களும் ரோட்டரி சங்க உறுப்பினராக வழி பிறந்தது. 1987 முதல், ரோட்டரி சங்கங்களில், பெண்களும் உறுப்பினர்களாய் இருக்கிறார்கள்.

சந்திப்பு, தகவல் தொகுப்பு:
எஸ். சந்திரமௌலி
வண்ணப்படம்: **யோகா**

பனிக்கு அடியில், இருபதடி ஆழத்தில்...



படத்திலுள்ள ஒன்பது பெண்களும் தென் துருவத்தில் பெண்கள் சமத்துவத்தை நிலைநாட்டப் போகிறார்கள்!
டிசம்பர் மத்தியில் தொடங்கிப் பதினான்கு மாதங்களுக்கு இவர்கள் வடதுருவப் பனிப் பிரதேசத்தில் பூமிக்கு இருபதடி ஆழத்தில், மைனஸ் 46.1° சென்டிகிரேட் குளிரில் வசிப்பார்கள். எஃகினால் செய்யப்பட்ட இரண்டு பிரும்மாண்டமான குழாய் போன்ற அமைப்புகள்தான் இவர்களுடைய வீடுகளாகவும் ஆராய்ச்சிக் கூடங்களாகவும் இருக்கும். இந்த பதினான்கு மாதங்களும் வெளியுலகத்துடன் இவர்களுக்குத் தொடர்பு இருக்காது. இதுவரை ஆண்கள் மட்டுமே ஈடுபட்டு வந்த இந்த ஆராய்ச்சிப் பணியைத் தொடரப் போகிறார்கள் இப் பெண்கள்.

நன்றி: ஜெர்மன் ட்ரிப்யூன்

வாத்தியார் வீட்டு பிள்ளை



சத்யராஜுக்கு இது நூறாவது படமாம். பேர் வாங்கித் தந்த 'நூறாவது நாளி'லிருந்து சிவாஜி சாரோடு கை கோத்து நடித்ததைத் தொட்டு, வசூல் சக்ரவர்த்தி ரஜனியோடு 'என்னம்மா கண்ணு சௌக்கியமா?' பாடியது வரை மலரும் நினைவுகளாய் எடுப்பிலே பீச்சியடித்திருக்கிறார்.

மேற்படியாருக்குத் தயாரிப்பாளர் படா தோஸ்த் என்று கொஞ்சிக் காட்டுவதிலிருந்து புரிகிறது.

இனி இந்த 'ப்' விட்டுப் போன பிள்ளை எபடி, ஸாரி எப்படி — பார்க்கலாமா?

ஆனைப் படையே வந்தாலும் அம்பேலாக்கக்கூடிய சண்டியராம் சத்யராஜ். ஆனால் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவர். அவருடைய அண்ணன் வாத்தியார் ராஜேஷ். வெளுத்ததெல்லாம் பாலாய் நினைக்கும் வெகுளியாம். அந்த ஊர் சிறிசு பெரிசு பண்ணைச் சகோதரர்கள் ஊரை அடித்து உலையில் போட்டு உல்லாசம் காண்கிற உ... உ... உலுத்தர்கள். இந்தத் திரி — கோணத்துக்குள் உரசல், போராட்டம். அதுதான் கதை.

ஆப்த நண்பரின் படமாச்சே, உயிரைக் கொடுத்து நடிக்கணும் என்ற ஆதங்கத்தின் விளைவோ என்னவோ 'இயல்பான நடிப்புக்கு இருக்கவே இருக்கிறார் இந்தக் கொங்கு நாட்டுக்காரர்' என்ற நற்பெயரைக் கொஞ்சம் இழக்கும்படியாகி விட்டது! அடிதடிகளில் அனுமானிக்க முடியாத அளவில் வெற்றி வாகை சூடுவதைக் கூட மசாலா ஹீரோ லட்சணப் பொருத்தம், தொலைகிறது என்று விட்டு விடலாம். மற்றபடி ஆரம்ப நினைவோட்டமாய் அவர், மாதிரி காட்டிய காரெக்டர்கள் அளவுக்கு ஏதாவது ஒன்றை இந்தப் படத்தில் அவராலேயே சுட்டிக்காட்ட முடியுமா என்றால் — எனக்குச் சொந்தச் சந்தேகம்தான்.

அதற்கு அவரை மட்டும் குற்றம் சொல்லிப் பயனில்லை. செமர்த்திக் கதையும்' வகையான காரெக்டரும் கூர்மையான டைரக்ஷனும் வேண்டும். அதெல்லாம் இதில் இரண்டாம் பட்சம்தான்.

முகத்தளவில் நவரசங்களும் விதவிதமான ஒடிசல்களும் நல்ல நாட்டிய முத்திரையாய் இருக்கலாம். நடிப்பு என்றால் இதுக்கெல்லாம் மேலே கொஞ்சம் ஒணும்மா ஷோபனா! 'நீங்க சொன்னபடி செய்யறேனா இல்லையா?' என்று டைரக்டரைக் கேட்பது மாதிரி நடித்தால் போதாது. அதற்கும் அதிகமாகச் செய்யணும்!


ஒரே மாதிரி டிரெஸ், ஒரே மாதிரி மீசை, ஒரே மாதிரி முறைப்பு — இவை சிறிசும் பெரிசுமான பண்ணையார்களாம். கவுண்டமணியும் அவருக்கு அண்ணனாய் வரும் காட்டான் மோட்டான் (பீமன் ரகு) புதுமுகமும் ரொம்ப அவுட்டேட்டட் சமாசாரம்.

ராஜேஷ் — ஸ்ரீவித்யா தாம்பத்தியம் படு பாந்தம். சம்பந்தி தூக்கியெறிய அடிபட்டு நொந்து திரும்பி வந்த பிறகு தம்பி வந்து பார்க்கும் போது, 'நீ சொன்னது சரியாப் போச்சுடா தம்பி,' என்று மன்னிப்புக் கோரும் ராஜேஷ் நெகிழ வைக்கிறார். அதே போக்கில் ஊராரிடம் சொல்வது போல், 'என் மக கர்ப்பமா இருக்கா. அவளுக்குச் சீர் கொண்டு போறேன். புகுந்த இடத்திலே அவ ரொம்ப சந்தோஷமா இருக்காளாம்,' என்று கொழுந்தன் சத்யராஜுக்கு ஜாடையில் சொல்லும் வித்யாவும் நெஞ்சைத் தொடுகிறார்.

இப்படிக் குறிப்பிட்டுச் சொல்லும் நாலைந்து நிகழ்ச்சிகளின் பலத்தையும் அந்த க்ளைமாக்ஸ் பரபரப்பையும் வெற்றிக் கணைகளாய் நம்பி விட்டார்கள் போலும். பாட்டுக்கள் கூடத் தாளம் போட வைக்கின்றன. பிரயோசனம்? காலத்துக்கு ஒவ்வாத அபத்தச் சொதப்பல்களில் நல்லவை அமுங்கிப் போகின்றனவே!

பாவம் — சத்யராஜ், தன் நூறாவது படம் என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்கிற மாதிரி 'பிள்ளை' அமையவில்லை.

— பி. எஸ். எஸ்.



இழப்புகள்

ஜியா

'மானம் கவிஞ்சிக்கிட்டு வருது. அடி ஆத்தாவ்... சிலுசிலுன்னு கூத வேற அடிக்குது. 'சோ'ன்னு பெய்யற மழையிலே சொகமா நனைஞ்சிக்கிட்டே வந்து 'சுருக்'னு கட்டுப் போட்ட சோளக் கதிரைக் கடிக்கிறது வயசோட போச்சி. நெத்திலி மீனப் போட்டு, முருங்கக்காவ வெட்டிக் காய்ச்சின ஆணத்தா சூட்டோட சோத்துக்கு ஊத்தித் தின்னதெல்லாம் பழசாப் போச்சி. ஆருக்கும் அம்புடுதில்லே. வரவுக்குஞ் செலவுக்குமே வக்கணையாயிருக்க வாய்க்கு ருசியை ஆரு பாத்தா?

இஞ்சியைத் தட்டிப் போட்டு வறக் காப்பி குடிச்சா எதமாத்தான் இருக்கும், எரியுற நெஞ்சுக்கு. இஞ்சி இருக்கோ இல்லியோ?'— பொன்னுத்தாயி உள்ளே போய் இண்டு இடுக்கெல்லாம் தேடிப் பார்த்தாள். பிளாஸ்டிக் டப்பாவையெல்லாம் கவிழ்த்துப் பார்த்தாள். ம்ஹும். இஞ்சிதான் அகப்படவில்லை.

''தேவானே... தேவானே.... இஞ்சி இருக்கா?''

மாட்டுக்குத் தவிடு வைத்துக் கொண்டிருந்தவள் அங்கிருந்தே குரல் கொடுத்தாள்:

''எங்கே இருக்கு? வாங்கினாத்தானே இருக்கும்...?''

''குடித்தனம் பண்றவதானே வாங்கி வைக்கணும்' கிழவி முனகிக் கொண்டே இடுப்பிலிருந்த சுருக்கைத் தடவினாள். நாலணா இருந்தா போதும். இருந்தது. கிழவி புறப்பட்டாள்.

''செத்த கடைக்குப் போயிட்டு வர்றேன்.. தேவானை...ஒம்புள்ளே எங்கே போனான்... பள்ளிக்கூடம் விட்டு எம்புட்டு நேரமாச்சி...! வெட்டிப்பய புள்ளே எங்கினக்குன்னே நிக்குதோ...?'' பொன்னுத்தாயி அவளாகப் பேசிக் கொண்டு கூரை தலையைத் தட்டாமல் குனிந்து வெளியே வந்து நடக்க ஆரம்பித்தாள்.

மரங்களெல்லாம் புதுமணப் பெண் மெருகோடு தலைகவிழ்ந்து, இளைகளை விர்ரெனச் சுழற்றி, மழை வரவை எதிர் நோக்கியிருந்தன. கிழவிக்குத் திடும்மென உற்சாகம் வந்தமாதிரியிருந்தது. 'அடிச்சிக்



கிட்டு ஊத்துனா அல்லாருக்கும் நல்லது தான்... ஒழுகுற குடிசைக்கு ஓடு மேஞ்சாச் சின்னா ஒரு கவலையுமில்லே... அஞ்சுவத் துக் கோவையும், அசலிப்பு மணியுமா வேணும்...? ஒழுசல் இல்லாத குடிசை இருந்தா போதும்... போகும் போது பொட்டி கட்டியா கொண்டு போகப் போறோம்? ஏதோ அதுக்கு ஒரு வழி தொறந் தாச் சரிதான்'

இஞ்சி குடுப்பா... சம்முக சுந்தரம்... பேத்தி நல்லாருக்காளா?'' — கடைக்காரனி டம் கேட்டாள் கிழவி.

''நல்லாயிருக்கா — ஒம் புண்ணியத்துலே... ராசேந்திரன் எங்கே போயிருக்கான்...? ஆளையே காணமே?''

''லோடுக்குத்தாம் போயிருக்கான்... ஒரு எடத்துலயா இருந்தமா எந்திரிச்சமான்னு முடியுதா... உள்ளூரிலே வயக்காட்டுலே ஏதோ இருக்குறத வச்சி பொழைக்குறத வுட்டுப்புட்டு... நானும் கரையா கரைச்சிப் பாத்திட்டேன் பாவிப்புள்ளே காதுலே வுழுவுதா? போதாக் குத்தத்துக்கு மவராசி ஒருத்தி வந்து வாச்சிருக்கா... புருஷம் போற தும் வர்றதும் அவளுக்குத்தான் பெருக்கமா இருக்கு...''

''ஆடு மேஞ்சாச்சா... ஓடெல்லாம் வந்து எறங்கியிருக்கு போல...''

''ஆமா... அது எறங்கி ஆறு நாளாவுது... போனவன் இன்னமும் வரக்காணாமே... அடாடா... மழ புடிச்சிக்கிச்சே பேசிக்கிட்டே இருந்திட்டேன்....''

''திண்ண பொறவு போகலாம் தாயி...''

''இதுவா நிக்குற மழை...! மூலையிலே கருத்திருக்கு... ஒரு அடி அடிச்சிட்டுத்தான் நிப்பாட்டும்... மெதுவாப் போறேன்.''

ஆக்ரோஷமான மழையில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள். 'என்ன கரைஞ்சாப் போகப் போறேன்?''

தாழ்வாரத்தில் சிம்னி விளக்கு ஜீவனில்லாமல் எரிந்து கொண்டிருந்தது. குழந்தை ராசு 'பொட் பொட்'டென்று கூரை யில் இருந்து விழும் குண்டு மழைத் துளி களை எண்ணிக் கொண்டிருந்தான். பொன்னுத்தாயியைப் பார்த்ததும் உள்ளே ஓடினான்.

''யம்மோவ்... பாட்டி வந்திரிச்சி... மழை யிலே நல்லா நனைஞ்சிக்கிட்டு வெட வெடன்னு ஆடுது...''

''அப்பிடி என்ன அவசியந்தான் இந்த மழையிலே கடைக்குப் போறதுக்கு... எப்பிடி நடுக்குறே... கருப்பணஞ்சாமிக்கு வெட்டப் போற கடா மாதிரி...'' பேசிக் கொண்டே வாசலுக்கு வந்தாள் தேவானை.

''இன்னிக்குத்தானாக்கும் புதுசா நனை யிறேன்... பெரிசா சொல்ல வந்திட்டே... அது கெடக்கட்டும்... இந்த இஞ்சியத் தட்டிப் போட்டு வறக்காப்பி போடேன்...''

''பள்ளிக்கூடம் வுட்டதும் எங்கடா போன?''-பேரனைக் கேட்டாள் பொன்னுத் தாயி.

''அது வந்து பாட்டி அன்னூர்ப்பக்கம் ஏதோ சண்டையாம்... கூட்டமா மைதானத் துலே நின்னு பேசிட்டிருந்தாங்க... நானும் நின்னு கேட்டிட்டு வந்தேங்...''

''அது சரி... பெரிய வயசுக்காரவுங்க ஆயிரம் பேசுவாங்க... பொடிமட்ட ஒனக்கு அங்கினே என்ன ஜோலி...?''

வெளியே கட்டியிருந்த கிடாரி ''ம்பா'' என்றது. 'புரட்டாசி மாசமாச்சி இன்னுஞ் செனைப் புடிக்கக் காணாம்... மேய்ச்சலுக் குப் போயிட்டு மேனி அலுங்காம வந்திடுது... ம்... மழையிலே நனையுது போல... என் னத்த சொவத்தோட ஒண்டிக்கிட்டாலும் சாரலு அடிக்கத்தானே செய்யும்...? வாயில்லா சீவராசி... ஓட்டை எறக்கிட்டா... ஓலையப் பிரிச்சி அதுக்கு ஒரு கொட்டகை யாப் போட்டுடலாம்... எல்லாத்துக்கும் நேரம் வரணும்...''

உள்ளே ஒழுகுற இடங்களில் சாக்கு களைப் போட்டும், பழைய அலுமினியச் சட்டிகளை வைத்தும் தேவானை தரை நனை யாமல் பண்ணிக் கொண்டிருந்தாள்.

''வவுத்துப் புள்ளையோட ஏனுட்டே கெடந்து மாயிறே? மூதேவி வடிஞ்சா வடிஞ் சிட்டு நிக்கும்...''

''இன்னாரமா நீ சொல்லிட்டே... ஒம் புள்ளே வந்தா சவட்டிப்புடுஞ் சவட்டி...''

''நல்லாத்தாயிருக்குது நாயம்... நா ஒனக் காகவா சொன்னேன்... வவுத்துப் புள்ளை யிலே வதபடுது...''

''குடிசையிலே பொறந்தா அல்லாம் அனு பவிக்க வேண்டியதுதான்'' தொடித்து விட்டு

உள்ளே போனாள் தேவானை.

விடியற்காலை நாலு மணியிருக்கும். மழை நின்று போய் வெகு நேரமாகியிருந்தது. பொன்னுத்தாயிக்கு இடையில் 'முழிப்பு' வந்து விட்டால் பிறகு தூங்குவது பகீரதப் பிரயத்தனம். கண்களை அரைவாசி திறந்தபடி விட்டத்தைப் பார்த்துக் கிடந்தாள். வெளியில் பரபரப்பான ஓசைகளும், அவசரமான பேச்சுக் குரல்களும்... 'இந்நேரத்துக்கு ஆரு அங்க? ஒரே சலசலப்பாயிருக்கே' கிழவி நினைத்துக் கொண்டிருக்கையிலேயே வாசல் தட்டியை யாரோ உதைத்தார்கள்.

''ஆத்தா... ஆத்தாவ்... தேவானைக்கா...''

''ஆருடா... பொழுது விடியறதுக்குள்ளே அவசரப்படறது... உச்சிக் குடுமிக்கு நெருப்பு வச்ச மாதிரி உசிரை எடுக்கிறது?'' கேட்டுக் கொண்டே வந்து கதவு திறந்தவளை அய்யாக் குட்டி கலவரப்படுத்தினான்.

''ஆத்தாவ்... வெளியிலே வந்து பாரு... நெலமை புரியாம நிக்கிறியே... ஊருக்கு ஊரு கலவரமாம்... ஒருத்தரையொருத்தரு வெட்டிச் சாய்ச்சிக்கிட்டுக் கெடக்குறாங்களாம்.. இங்கேயும் வந்துடும் போல.. தேவானைக்கா, கொழந்தை ராசுவக் கூட்டிக்கிட்டு... சட்டி முட்டியக் கட்டிக்கிட்டு சட்னு கெளம்பாத்தா... போலீசு அங்கினதாம் முகாம் போட்டிருக்கு நம்ம பெரிய கண்மாயிக்கு வடக்கால... வெரசாக் கெளம்பு... வண்டியக் கட்டிட்டு வந்திடறேன்...'' அவன் சொன்னது உறைக்காமல் அதிர்ந்து போய் நின்றாள். 'உண்மையத்தான் சொல்றானா? பாவிப் பயல்களா... எவனோ எதுவோ சொல்லிட்டுப் போறானே... ஆளாளுக்குக் கத்தியும், அருவாளும் தூக்கிக்கிட்டு வெட்டிப் போட்டா எல்லாஞ் சரியாகப் போய்டுமா... ஆரு இவனுகளுக்குச் சொல்றது?'

சத்தம் கேட்டுத் தேவானை எழுந்து வந்தாள். ''என்ன அப்படியே செலையாச் சமைஞ்சிட்டே? ஆரு வந்தா.... ஏன் வெளியே ஒரே ரகளையாயிருக்கு...?''

கிழவி அவளைப் பார்த்தாள். ''என்னத்தைச் சொல்றது நான்... கலவரம் பத்திக்கிச்சாம்... மூட்டை முடிச்சக் கட்டிக்கிட்டு கண்மாயிக்கு வடக்கால போயிடணுமாம்...'' ஒப்பாரியாகச் சொன்னாள். தேவானையையும் பயம் பற்றிக் கொண்டு விட்டது. ''கொழந்தராசு... எந்திரிடா... நா என்ன பண்ணுவேன் இப்ப... போன மனுஷனையும் இன்னுங் காணாமே.. எத எடுத்துக்குறது... எத வுட்டுட்டுப் போறது... கடவுளே... ஏண்டா எங்களை வதைக்கிறே... பொம்பிளைப் புள்ளைங்க என்ன செய்வோம்....?''

அய்யாக்குட்டி வெளியில் கத்தினான். ''ஆத்தாவ்... வந்திடுங்க... சீக்கிரம்... எல்

லாரும் பொறப்பட்டாச்சி...''

என்னென்ன எடுத்தது, எதெது விட்டுப் போனது ஒன்றும் புரிபடாமல் கைக்கு வந்ததை எடுத்துக் கொண்டு கொழந்தை ராசுவையும் இழுத்துக் கொண்டு வண்டியில் போய் ஏறப் போனாள் தேவானை.

''ஏன்ட்டே... நம்ப இடேரி வெளியிலே நிக்குதுல்ல'' கிழவி தயக்கமாய்க் கேட்டதும் திரும்பி முறைத்தாள்.

''அதையும் என் கழுத்துல கட்டிக்கவா... நல்லா வந்து சேர்ந்திருக்கே எனக்குன்னு... மனுஷனுக்கே வழியக் காணோம் இதிலே... மாட்டுக்கு வேற...''

வண்டியில் ஏற்கெனவே கூட்டம். நெருக்கடி. குழந்தைகள், தட்டுமுட்டுச் சாமான்கள். எல்லாம் பெண்கள். இரண்டு ஆண்கள் அரிவாளோடு வண்டிக்கு இருபுறமும் காவலாக.

ஒருத்தன் அதட்டினான் தேவானையை: ''வண்டிலே ஏறுங்க... ஒங்க சண்டையை அப்புறமா வச்சுக்கலாம்...''

கிழவியைத் தாங்கலாக ஏற்றி விட்டார்கள். அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள் மிரட்சியாக. எங்கேயோ இடந்தெரியாமல் புறப்பட்டு விட்ட மாதிரி நெஞ்சுக்கூடு அடித்துக் கொண்டது. 'இரும்பவும் இங்க வருவேனா?'

பின் கட்டில் நின்றிருந்த இடேரி 'ம்பா' என்றது அலறலாய். கிழவிக்குக் கொப்புளித்து வந்தது கண்ணீர். 'ராசேந்திரன் எப்ப வருவானோ? சண்டையிலேயும் பொல்லாப்புலேயும் எங்க நிக்கிறானோ? புள்ள வரவாணாம்! இப்ப... வர வாணாம்.'

போதுமான போலீஸ் இல்லையாம். தகவல் போய் வருவதற்குத் தாமதமாகுமாம். அதுதான் ஊருக்கூர் காவல் போட்டாலும் பாதுகாப்புப் போதாது என்று போலீஸ் முகாமிட்டிருக்கும் இடத்துக்கே வரச் சொல்லி விட்டார்களாம். காலனி காலனியாய்க் குழந்தைகளும், பெண்களும் ஊர்வலம் புறப்பட்டனர். கொஞ்சம் பயந்த ஆண்களும் மறைந்து மறைந்து பின் தொடர்ந்தனர். துணிச்சலான ஆண்கள் குடிசைகளுக்குக் காவலாய் நின்றுவிட்டனர். மனிதன் மிருகமாகும் போது கோழைத்தனம் என்ன? துணிச்சல் என்ன? எல்லாம் அழிவுக்குத்தான்!

ஒருவழியாக எல்லாம் ஓய்ந்து, எத்தனையோ உயிர்களைக் குடித்தபின்தான் வன்முறை அரக்கன் இருப்தியான மாதிரித் தோற்றம் காட்டித் திரும்பிப் போனான். மறுபடியும் எப்ப வருவானோ? மனிதநேயம் தான் பதில் சொல்ல வேண்டும்.

பொன்னுத்தாயும், தேவானையும், குழந்தை ராசுவும் திரும்பி வந்த போது குடிசை எரிந்து போயிருந்தது. இதுவரைக்கும் மழையையும், வெயிலையும், குளிரையும் தாங்கிக் கொண்டு பலவீனமானாலும், பலசாலி மாதிரி நின்றிருந்தது, பலியாகிப் போயிருந்தது. அடுக்கி வைக்கப்பட்ட ஓடுகள் நொறுங்கிச் சிதறிப் போய்க் கிடந்தன, அவர்கள் கண்ட கனவு மாதிரி.

இடேரி நின்ற இடத்துக்குத்தான் கிழவி ஓடிப் போனாள். குடல் தள்ளிச் செத்துப் போயிருந்தது அது. எங்கும் இதே நிலை தான். துயரம்தான் விரவிப்போய்... ராசேந்திரன் வந்ததும் குழந்தை ராசுவைக் கட்டிக் கொண்டான். தேவானை விம்மினாள்.

''ஆத்தா எங்க?'' என்றவன் கிழவியை நெருங்கி ''ஆத்தாவ்...'' என்றதும், ''அல்லாம் போயிடிச்சி... ராசா... நீயிருக்கே... நீயிருக்கே உசிரா... அது போதும்..... அது போதும்...'' கிழவி அழ ஆரம்பித்தாள்.


அன்று நல்ல யோசனை; இன்று அதுவே வேதனை!

கரும்புப் பயிரை ஒருவித வண்டு தாக்கியதால் விவசாயிகளுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது ஆஸ்திரேலியாவில். எனவே, வண்டுகளை ஒழித்துக் கட்ட cane toad என்ற ஒரு வகை ராட்சதத் தவளைகளை இறக்குமதி செய்தது அரசாங்கம். கரும்பு வயல்களில் விடப்பட்ட இத் தவளைகள் வண்டுகளைக் கபளீகரம் செய்து விட்டன.

ஆனால், விஞ்ஞானிகள் 1932இல் வழங்கிய இந்த யோசனை தற்போது பெரிய விபரீதத்தையே விளைவித்துள்ளது! இறக்குமதி செய்யப்பட்ட தவளைகளுள் ஒவ்வொரு பெண் தவளையும் சுமார் நாற்பதாயிரம் முட்டைகளை இட, இப்போது திரும்பிய பக்கமெல்லாம் தவளைகள்! இத் தவளைகளின் நாளமில்லாச் சுரப்பிகளிலிருந்து வெளிப்படும் bufotenine என்ற விஷப் பொருள், நாய், பூனை போன்ற விலங்குகளையும் கைக் குழந்தைகளையும் கூடக்கொல்லும் அளவிற்கு வீரியம் படைத்ததாம்! போதாக்குறைக்குப் போதையூட்டும் தன்மை வேறு படைத்ததாம் இந்த நச்சுப் பொருள்.

இப்போது ஆஸ்திரேலிய அரசு, ''தவளைகளை ஒழித்துக் கட்ட நூறு வழிகள்'' என்று கையேடு தயாரித்து விநியோகித்து வருகிறது. தவளை ஒழிப்பு இயக்க அதிகாரி ஒருவருடைய கூற்றுப்படி, டெட்டால் போன்ற கிருமி நாசினியைத் தவளைகள் மீது கொட்டுவதே அவற்றை அழிக்க மிகச் சுலபமான முறை. ''ஆனால் ஜீவ காருண்யம் கருதி அவற்றை ஐஸ் பெட்டிகளில் வைத்து விடலாம். பனிக்காலம் வந்து விட்டதாக எண்ணி அவை தூங்கி விடும்; தூக்கத்திலேயே உறைந்து போய்ச் செத்து விடும்'' என்கிறார் இவர்.

நன்றி: நியூஸ் வீக்.



கர்வம்

அருணா திடீரென்று ரேடியோவை நிறுத்திவிட்டாள். நான் திடுக்கிட்டுச் சொன்னேன், ''அடேடே, ஏன் நிறுத்திட்டே? பாட்டு நன்றாயிருக்கிறதே?''

அருணா வராந்தா பக்கம் சுட்டிக்காட்டி ஜாடையாகச் சொன்னாள், ''கேளுங்க.''

இதற்குள் எனக்கும் கேட்டுவிட்டது. அதே பாட்டு இன்னும் துல்லியமாக, இன்னும் இனிமையாகக் காற்றில் மிதந்து வந்தது. இவ்வளவு நேரம் 'நன்றாக' இருந்த பாட்டு இப்போது 'மனத்தை மயக்குவதாக' ஆகிவிட்டது. அந்தப் பாட்டிசையில் உடம்பே சிலிர்த்தது.

''ரத்னா வீட்டு ரேடியோகிராம். ரொம்ப விலையுயர்ந்ததாக்கும்!'' அருணா சொன்னாள்.

''விலையுயர்ந்தது'' என்று சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ரேடியோகிராம் எவ்வளவு விலையுயர்ந்தது என்பது ஒலிபரப்பின் தரத்திலேயே தெரிந்து விட்டது.

ஆனால் அருணாவின் பேச்சைக் கேட்டு மனங்கசந்து விட்டது. பாட்டுக் கேட்கும் பரவசம் ஒரு கணத்தில் மறந்து விட்டது. இப்போதெல்லாம் அருணாவின் இந்த மாதிரிப் பேச்சு எனக்குக் கட்டோடு பிடிப்பதில்லை. ''ரொம்ப விலையுயர்ந்ததாக்கும்'' என்ற வார்த்தைகளுக்குள் அவள் பேசாத வார்த்தைகள் அடங்கியிருந்தன. — ''நீங்க பிரயோசனமில்லே. அந்த மாதிரி விலையுயர்ந்த ரேடியோகிராமை உங்களாலே வாங்க முடியாது!''

நான் ஒன்றும் சொல்லவில்லை. நான் உள்ளூர அடக்கிக் கொண்ட எரிச்சல் ஏதாவதொரு சாக்கில் கோபமாக வெளிப்படத் துடித்தது.

அருணா கொஞ்சங் கொஞ்சமாக மாறிக் கொண்டு வருகிறாள் என்று எனக்குத் தோன்றியது. அவள் என்னை உதவாக்கரை என்று நினைக்கிறாள். முன்பும் அவள் இந்த மாதிரிப் பேசியிருக்கிறாள். சில மாதங்களுக்கு முன் நாங்கள் ஒரு கலியாணத்துக்குப் போய்விட்டுத் திரும்பி வரும்போது அவள் சொன்னாள்: ''ராணி அத்தையோட மாட்டுப் பெண்ணைப் பார்த்தீர்களா...? என்னோடது மாதிரிதான் டிசைன், ஆனால் அதிலே முத்து நிறைய!''

அன்று நான் சிரித்துவிட்டேன். அவள் குறிப்பிட்டது நெக்லஸை. ஆனால் நெக்லஸ் என்ற வார்த்தையை அவள் உச்சரிக்கவேயில்லை, என் ஊகத்துக்கு விட்டு விட்டாள். அவளுடைய பேச்சால் எனக்கு எரிச்சல் ஏற்பட்டது உண்மை. இந்த ரேடியோகிராம் விஷயத்தால் அந்த எரிச்சல் இன்னும் வலுத்தது.

முன்பெல்லாம் அருணா இப்படி இல்லை... அல்லது நான்தான் காதல் மயக்கத்தில் அவளுடைய இந்தக் குணத்தைக் கவனிக்கத் தவறிவிட்டேனோ?

என் திருமணத்துக்கு முன்னால் ஒரு நாளின் நினைவு இன்றும் பசுமையாக இருக்கிறது...

''அடேடே, என்ன ரொம்ப குஷியா இருக்கீங்க? ரொம்ப நல்ல செய்தி போலேயிருக்கு!'' அருணா உற்சாகமாகக் கலகலத்தாள்.

''ஆமாம் அருணா! ரொம்ப நல்ல செய்தி! எனக்கு வேலை கிடைச்சுடுத்து!''

கொஞ்ச நேரம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்து விட்டு அருணா கேட்டாள், ''சம்பளம் என்னன்னு சொல்லலியே!''

''இருநூற்றி முப்பது ரூபாய்.'' ஆனால் இதில் எண்பது ரூபாய் பஞ்சப்படி என்பதை நான் சொல்லவில்லை. என் மனம் உற்சாகத்தில் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தது.


இது எங்கள் கலியாணத்துக்கு முன்பு. அப்போது நாங்கள் கனவுகள் கண்டு கொண்டிருந்தோம். கண் கண்ணின் தாகத்தைத் தீர்த்து வைத்தது. பேச்சு கலர் கலராகப் பட்டங்கள் விட்டது.

''ரொம்ப விலையுயர்ந்த ரேடியோகிராம்'' — வார்த்தைகள் நினைவுக்கு வந்ததும் எரிச்சல் பொங்கி வழிந்தது. கூடவே இதுவும் நினைவுக்கு வந்தது. — அன்று சம்பளம் பற்றிக் கேட்ட பின் சற்று நேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்துவிட்டு அருணா வருத்தத்தோடு கேட்டாள்: ''ஏன் இந்த ஆபீசிலே மட்டும் சம்பளம் இவ்வளவு குறைச்சல்?''

அப்போது அவள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை என்பது எனக்கு இப்போது புரிகிறது. சம்பளத்தைப் பற்றியே நான் கவலைப்படவில்லை அப்போது. நான் அப்பாவின் பேச்சைக் கேட்டு சான்யால் பாபுவைப் பார்த்திருந்தால் அப்பாவின் பழைய ஆபீசிலேயே நல்ல சம்பளத்தில் ஒரு வேலை கிடைத்திருக்கும். அப்பாவே அந்தக் காலத்தில் எவ்வளவோ பேருக்கு வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறார்.

நான் சிரித்தவாறே அருணாவுக்குப் பதில் சொன்னேன். ''இது ஒண்ணும் சிபாரிசிலே கிடைத்த வேலையில்லை. நூற்றைம்பது பேர் பரீட்சை எழுதினாங்க. அவங்களிலேருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது பேரில் நான் ஒருத்தனாக்கும்!''

அதாவது, நான் மற்றவர்கள் மாதிரி இல்லை என்பதை அவளுக்கு உணர்த்த விரும்பினேன் நான். நான் எனக்கு உண்மையாக



இருக்க விரும்பினேன். என் சொந்தக் காலில் நிற்க விரும்பினேன். என் தன்மானம் அளித்த கர்வம் என்னை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்தது.

இப்போது என் வாழ்க்கைத்தரம் படிப் படியாக உயர்ந்திருக்கிறது. நல்ல ஃப்ளாட் டில் வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இவளுக்கு என்ன குறை இப்போது?

அருணாவின் எந்த ஆசையையும் தீர்த்து வைக்காமலிருக்க எனக்குப் பிடிக்காது. இதை ஏன் அவள் மறந்து விடுகிறாள் என் பதுதான் எனக்குப் புரியவில்லை. அவள் பேராசைக்காரி என்றும் நான் நினைக்க வில்லை. நாங்கள் எங்கள் மூன்று குழந்தை களின் எதிர்காலம் பற்றிப் பேசும் போது அவர்களைச் சாதாரண மனிதர்களாக வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் கருத் தொன்றியிருந்தோம்.

ஆனால் பூஜைத் திருவிழாவுக்காகக் குழந் தைகளுக்குத் துணிமணிகள் வாங்கும் போது நிதானந்தவறி நடந்து கொண்டு விட்டாள் அருணா — மினு, முன்னா இருவருக்கும் ஆளுக்கொரு ஃப்ராக், எழுபது — எண்பது ரூபாய் விலையில் தைக்கக் கொடுத்து விட் டாள்.

நான் ஏற்கெனவே திணறிக் கொண்டிருந் தேன். பூஜை சமயத்தில் எப்போதுமே பணக் கஷ்டந்தான். நான் வேலைசெய்வது அரசாங்க அலுவலகத்தில். எனக்கு போனஸ் கிடையாது.

''என்ன இப்படிப் பண்ணிட்டே?'' என் றேன் அவளிடம். அவள் தன் குற்றத்தை ஒப் புக் கொண்டிருந்தால் எனக்கு இவ்வளவு கோபம் வந்திருக்காது. ஆனால் அவளு டைய குணம் என்னவென்றால், தான் குற்றம் செய்து விட்டோம் என்ற உணர்வு ஏற்பட் டால் அவள் என்மேல் எரிந்து விழுவாள்.

அதைத்தான் இப்போதும் அவள் செய் தாள்; எரிச்சலுடன் சொன்னாள், ''அப் படீன்னா இந்தக் குடியிருப்பிலே இருக்க வேண்டாமே! ஏதாவது ஒரு சேரியிலே போய்க் குடியிருக்கலாமே...! ருனு, நீபா இவங்களெல்லாம் நல்ல நல்ல ஃப்ராக் போட் டுக்கிட்டுத் திரியற போது நம்ம மினு, முன்னா

வங்காள மூலம்:

ரமாபத சௌதுரி

தமிழாக்கம்:

சு. கிருஷ்ணமூர்த்தி

மட்டும் மட்டமான ஃபிராக் போட்டுக்கிட்டு இருக்கணுமா?''

சங்கடமாகி விட்டது எனக்கு. இந்த மாதிரி சமயங்களில் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் அழுகையொன்று நெஞ்சுக்குள்ளிருந்து பீறிட்டுக் கிளம்புவது போலிருக்கும். அப்படியானால் நான் இதுவரை வாழ்ந்து வந்த முறை தவறானதா? நான் எப்படியாவது இன்னும் பணம் சம்பாதிக்க முயற்சி செய்திருக்க வேண்டுமா?

நான் ஈனசுரத்தில் பதில் சொன்னேன், ''நான் என்ன செய்வேன் சொல்லு! இன்னும் நிறைய வாங்க வேண்டியது இருக்கு.''

அருணா என்னைத் திருப்பிக் கேட்டாள், ''மத்தவங்களாலே எப்படிச் செலவு செய்ய முடியறது? ருனு, தீபாவோட அப்பா...?''

அருணா வாயைத் திறந்து சொன்னாலும் சரி, சொல்லா விட்டாலும் சரி, ''அவங்களாலே எப்படி முடியறது?'' என்ற இந்தக் கேள்வியை நான் அடிக்கடி கேட்டுக்கொண்டு தானிருக்கிறேன். கேட்கக் கேட்க என் கையாலாகாத்தனத்தைப் பற்றி என் மேலேயே எனக்கு ஆத்திரம் வளர்ந்து கொண்டு வருகிறது.

ஒருநாள் கோபத்தோடு கத்தினேன், ''என்னோட ஒவ்வொரு காசும் உழைச்சுச் சம்பாதிச்சதாக்கும்!''

அருணா கேட்டாள், ''சரி, அவங்கதான் பிஸினெஸ் பண்றாங்க, கறுப்பிலே பணம் சம்பாதிக்கறாங்க. ரத்னாவோட வீட்டுக்காரரும் உங்க மாதிரி வேலை பார்க்கிறவர் தானே! அவராலே மட்டும் எப்படி முடியறது?''

அந்த மனிதர் லஞ்சம் வாங்குகிறாரோ என்னவோ? இல்லாவிட்டால் இவ்வளவு தாராளமாக எப்படிச் செலவு செய்ய முடியும்?

ஆனால் இதையெல்லாம் அருணாவிடம் எப்படிச் சொல்வது?

ஒருநாள் சினிமா பார்த்து விட்டு வந்து கொண்டிருந்தோம். பின்னாலிருந்து யாரோ கூப்பிட்டார்கள் — ''ஹிரண்மய் அண்ணா!''

திரும்பிப் பார்த்தேன். நாங்கள் முன்பு குடியிருந்த பகுதியில் எங்கள் அண்டை வீட்டுக்கார ஜீவன்!

''வண்டியிலே ஏறுங்க, உங்களை வீட்டிலே கொண்டு போய் விடறேன்.''

அவன் தன் வண்டியில் எங்களை ஏற்றிக் கொண்டு வந்து வீட்டில் சேர்ப்பித்தான்.

அவன் போன பிறகு அருணா சொன்னாள், ''அந்த ஜீவன் இப்போ கார் வாங்கியிருக்கான்னு என்னாலே நம்பவே முடியல்லே!''

எனக்கும்.

அவள் பேச்சைக் கேட்டு எனக்கு உடம்பெல்லாம் எரிந்தது. நான் மனத்துக்குள் சொல்லிக்கொண்டேன், ''அருணா, என்னை என்னோடொத்த யாராவது ஒருவனோடு போட்டி போட விடு. ரத்னா வீட்டு ரேடியோகிராம், ருனு — தீபாவோட ஆடம்பரம், ஜீவனோட கார், ராணி அத்தையின் மாற்றுப் பெண்ணோட நெக்லெஸ்... எல்லாத்தையும் நீ தராசின் ஒரு தட்டிலே போட்டு விட்டு என்னை மறு தட்டிலே போட்டு நிறுத்திப் பார்க்கறே! நான் அவங்களிலே ஒருத்தர் மாதிரி ஆக மட்டும் முயற்சி செய்து பார்க்கலாம், எல்லார் மாதிரியும் ஆக முடியுமா?''

அவர்களில் யார் மாதிரியும் ஆக முடியாது என்று எனக்குத் தெரியும். தெரிந்திருப்பதால் தான் அருணாவின் பேச்சைக் கேட்டு நான் கையாலாகாதவன் என்ற உணர்வு ஏற்படுகிறது எனக்கு.

ஓரோர் நாள் நான் நினைப்பதுண்டு. திடீரென்று எதிர்பாராத விதமாக ஒரு காரியம் செய்து அருணாவை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டும். அப்படிச் செய்ய வாய்ப்பு எனக்கு இருக்கிறது. அதைச் செய்தால் அருணாவின் பல ஆசைகளை என்னால் நிறைவேற்றி விட முடியும். ஆனால் அப்புறம் நான் எனக்கு உண்மையாக இருக்க மாட்டேன்; அருணாவின் நோக்கிலும் எனக்கு மதிப்பிருக்காது.

இவ்வாறு நான் எனக்குள் குமுறிக் கொண்டிருந்த போது அந்த நிகழ்ச்சி நேர்ந்து விட்டது.

வெகு நாட்களாக ஆபீஸில் பிரயாணப்படியில் ஒன்று பாசாகாமல் இருந்தது. அது திடீரென்று ஒரு நாள் பாசாகிக் கையில் பணம் வந்தது. அப்போது அருணாவின் ஞாபகம் வந்தது. எட்டு வயதுப் பையன் பிஜுவின் ஞாபகம், மினு, முன்னாவின் ஞாபகம் வந்தது. அருணா குறைப்படுவது நியாயந்தான் என்று தோன்றியது. நியூ மார்க்கெட்டுக்குப் போய் அவளுக்காக ஒரு நல்ல புடைவை வாங்கினேன். குழந்தைகளுக்குச் சீன உணவு வகைகள் ரொம்பப் பிடிக்கும். அவர்களுக்காகச் சீன ஓட்டலில் இரண்டு மூன்று வகைத் தின்பண்டங்கள் வாங்கிக் கொண்டேன்.

டாக்சியில் போய் இறங்கி எல்லாரையும் வியப்பிலாழ்த்த வேண்டும் என்று நினைத்து

''ஆனாலும் அந்தக் காய்கறிக்காரனுக்கு இவ்வளவு திமிர் உதவாது...''

''ஏன்... என்ன சொன்னான்?''

''புடலங்காய் நல்லா இருக்குமில்லே'ன்னு கேட்டதுக்கு, 'அது சமைக்கிறதைப் பொறுத்தது'ன்னு சொல்லிட்டுப் போறானே!''

— சீர்காழி ஸ்ரீராம்.



அவ்வாறே செய்தேன்.

வீட்டுக்குள் நுழைந்ததும் அருணா சொன்னாள், "இன்னிக்குக் கோக்கனோட அம்மா வந்திருந்தா."

எனக்குப் புரியவில்லை. "கோக்கனோட அம்மாவா? யாரு?"

பிஜு, மினு, முன்னா எல்லோரும் ஆரவாரம் செய்து கொண்டு ஓடி வந்தார்கள். புடைவைப் பொட்டலத்தையும் தின்பண்டங்களையும் பிரித்துப் பார்த்தார்கள். இவற்றில் எந்த விதமான அக்கறையும் காட்டவில்லை அருணா. அவள் சொன்னாள், "கோக்கனோட அம்மாவை இதுக்குள்ளே மறந்துட்டீங்களா?"

இப்போது எனக்கு ஞாபகம் வந்தது.

அருணா என் சட்டையை வாங்கி ஸ்டாண்டில் மாட்டியவாறு சொன்னாள், "அவளைப் பார்த்து ரொம்ப நாளாச்சு. அன்னிக்கு ராணி அத்தையோட வீட்டிலே பார்த்ததுதான்..." பிறகு தொடர்ந்து பேசிய அவளது குரலில் குற்றஞ்சாட்டும்தொனி ஒலித்தது. "நாம் வீடு கிடு கட்டறோமான்னு கேட்டா. வீடு கட்டுங்க. எவ்வளவு நாள்தான் வாடகை வீட்டிலே இருப்பீங்கன்னு கேட்டா."

இதைக் கேட்டதும் வெடித்து விட்டேன் நான். காரணம், என் மனக் கண்ணில் கோக்கன் குடும்பத்தின் புதிய வீடு தோன்றியது.

நான் கத்தினேன், "உன்னை வேண்டிக்கறேன், அருணா, வாயை மூடு! நீ என்னை வெறுக்கறேன்னு எனக்குத் தெரியும். உன் பேச்சைக் கேட்டுக் கேட்டு நானே என்னை வெறுக்க ஆரம்பிச்சுட்டேன்...."

இறுதியில் என் கோபம் என் காதுக்கே அழுகை போலத் தொனித்தது. அப்படியும் என்னால் ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. நான் கத்தினேன், "அவங்களோட என்னை ஒப்பிடாதே! அவங்க அப்பா பிஸினெஸ் பண்றார். அவர் அவங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கார்... நான் என் சொந்தக் காலிலே நிற்கிறேனாக்கும்!"

அருணா திகைத்துப் போய் விட்டாள். எனக்கு இவ்வளவு கோபம் வந்து அவள் பார்த்ததில்லை. என் கத்தலைக் கேட்டு அவளுக்கு எரிச்சலேற்பட்டிருக்க வேண்டும். என் ஆத்திரத்தைக் கிளப்பி விடத்தானோ என்னவோ சொன்னாள், "சொந்தக்காலில் நின்னுக்கிட்டே எவ்வளவோ பேர் வீடு கட்டிக்கிறாங்க. சுசாந்த அண்ணா...."

நான் நிதானமிழந்து விட்டேன். பழைய குளவி காதுகளில் ரீங்காரம் செய்யத் தொடங்கி விட்டது — "நீ உதவாக்கரை, நீ கையாலாகாதவன்!"

நான் அப்படியே நாற்காலியின் மேல் உட்கார்ந்து விட்டேன். எனக்குக் கோபம் பொங்கி வந்தது. நான் கத்தினேன். "நீ எப்போதும் என்னை மத்தவங்களோட ஒப்பிட்டுப் பார்த்துக்கிட்டே வந்திருக்கே! என்னாலே என்ன பண்ண முடியல்லே, என்ன கொடுக்க முடியல்லேங்கறதையே எப்பப் பார்த்தாலும் சொல்லிக்கிட்டு வந்திருக்கே....! உன்கிட்டேதான் அப்படி என்ன இருக்கு, சொல்லு...! நீ எப்பவாவது உன்னை அவங்களோட ஒப்பிட்டுப் பார்த்திருக்கியா?"

இந்த வார்த்தைகளைச் சொன்னதுமே நான் அவ்வாறு பேசியதற்காகப் பச்சாத்தாபப்பட்டேன். இந்த மாதிரி கடுமையாக அவளிடம் பேச நான் ஒருபோதும் விரும்பியதில்லை. அவளுடைய இந்தப் பலவீனமான இடத்தில் அவளை இப்படித் தாக்க நினைத்ததில்லை. காரணம், என் உறவினர்கள், தோழர்களின் பார்வையில் அவள் எப்படித் தோற்றமளித்தாலும் அவளுடைய கறுப்பு நிறம் எனக்கு அழகாகத்தான் தோன்றியது.

நான் நினைத்திருந்தேன், அவள் கோபத்தில் பொங்கியெழுவாள், எங்கள் உறவில் பெரிய விரிசல் ஏற்பட்டு விடும் என்று.

அதற்குப் பதிலாக அவள் சிரித்துக் கொண்டே என்னருகே வந்தாள். நான் கண்களைத் தாழ்த்திக் கொண்டேன்.

அவள் என் தலைமுடியைக் கை விரல்களால் கோதிக் கொண்டே அமைதியான குரலில் சொன்னாள், "என்கிட்டேயா? என்கிட்டே என்ன இருக்குன்னு கேக்கறீங்களா...? என்கிட்டே இருக்கறது வேறே யார்கிட்டேயும் இல்லே!"

அவளுடைய விரல்களின் ஸ்பரிசத்தில், அவளுடைய குரலில் ஏதோ ஒன்று என்னை என்னவோ செய்தது. நான் அவளுடைய கையை என் உள்ளங்கைக்குள் பிடித்து வைத்துக் கொண்டு சிரிக்க முயன்றவாறு கேலியாகக் கேட்டேன், "உன்கிட்டே என்னதான் இருக்கு, சொல்லேன்! அழகா, நல்ல குணமா, அல்லது நிறைய பணமா?"

அருணா இனிமையாகச் சிரித்தாள். "என்கிட்டே இருக்கறது வேறே யார்கிட்டேயும் இல்லே!"

"என்னதான் இருக்குங்கறதை வாயைத் திறந்து சொல்லேன்!"

அருணா தன் இரு கைகளையும் விரித்துக் கொண்டு சொன்னாள், "இவ்வ்வளவு பெரிய கர்வம்....! நீங்க என்னுடையவர் என்கிற கர்வம்....!"

"எல்லாரும் டி.வி.யைத் திட்டுறாங்க... நீங்க மட்டும் பாராட்டுறீங்களே?!"

"நான் ரேடியோ ஸ்டேஷன் டைரக்டர்... டி.வி. மட்டும் இல்லாட்டி எல்லாரும் ரேடியோவையல்ல திட்டுவாங்க... அதான்!"

— சீர்காழி ஸ்ரீராம்.



பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 38

நடித்தது நாடகமா?

வாள் தவறித் தரையில் விழுந்த போது எழுந்த ஒலியுடன் நந்தினியின் சோகம் ததும்பிய மெல்லிய சிரிப்பின் ஒலியும் கலந்தது.

அவள் பரபரப்புடன் ''ஐயா! தெய்வத்தின் சித்தம் வேறு விதமாயிருக்கிறது. வாள் இங்கேயே கிடக்கட்டும். தாங்கள் உடனே போய் மறைந்து கொள்ளுங்கள்!'' என்றாள்.

அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வந்தியத் தேவன் குனிந்து வாளை எடுக்கப் போனான். அதன் கூரிய நுனிப் பகுதியைப் பிடித்துத் தூக்க முயன்றான்.

அதே சமயத்தில் அந்த வாளின் பிடியை ஒரு காலினால் மிதித்துக் கொண்டாள் நந்தினி.

''வேண்டாம்! இளவரசர் காதில் வாள் விழுந்த சத்தம் கேட்டிருக்கும். இங்கே வாள் இல்லாவிட்டால் அவர் மனத்தில் சந்தேகம் உண்டாகும். ஏற்கெனவே, தங்கள் மீது அவருக்குச் சந்தேகம். போய் விடுங்கள்! முன்னொரு தடவை மாயமாய் இங்கிருந்து மறைந்தது போல் இந்தத் தடவையும் மறைந்து போய் விடுங்கள்!'' என்றாள்.

வந்தியத் தேவன் வாளின் முனையைப் பிடித்து எடுக்க முயன்றதில் அவன் கையில் சிறு காயம் உண்டாயிற்று. அவன் வாளை விட்டுவிட்டு நிமிர்ந்தான். அவன் உள்ளங் கையில் இலேசாக இரத்தம் கசிந்ததை நந்தினி பார்த்தாள்.

''நான் உமக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவேன். என் கையால் என் உடன்பிறந்தானைக் கொல்ல மாட்டேன். நீர் தப்பித்துக் கொள்ளும். உம்மை இங்கே அவர் கண்டு விட்டால்....!''

''போய் விடுங்கள்! உடனே போய் விடுங்கள்!'' என்று மணிமேகலையும் சேர்ந்து கெஞ்சினாள்.

காலடிச் சத்தம் மேலும் நெருங்கிக் கேட்டது.

வந்தியத் தேவன் வேண்டா வெறுப்பாக யாழ்க் கருவிகளின் களஞ்சியத்தை நோக்கி விரைந்து சென்றான். களஞ்சியத்தின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று மறைந்தான்.

காலடிச் சத்தம் வெகு சமீபத்தில், வாசற் படிக்கருகில் கேட்டது.

வந்தியத்தேவன் மறைந்த இடத்தை வியப்புடன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மணிமேகலையைப் பார்த்து, ''தங்காய்! நீயும் மறைந்து கொள்! கட்டிலின் திரைகளுக்குப் பின்னால் மறைந்து கொள்! நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது அவருக்குத் தெரியாமல் இங்கிருந்து போய் விடு!'' என்றாள் நந்தினி.

மணிமேகலை கட்டிலின் திரைச் சீலைக்குப் பின்னால் மறைந்த மறுகணத்தில் ஆதித்த கரிகாலனும் கந்தமாறனும் உள்ளே வந்தார்கள்.

கரிகாலன் சுற்றுமுற்றும் பார்த்துக்

அமரர் கல்கி

கொண்டே நந்தினியை நெருங்கினான். கட்டிலின் திரைச் சீலை அசைந்ததை அவன் கவனித்தான். ஆனால், கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

நந்தினிக்கு அருகில் வந்ததும் தரையிலே கிடந்து ஒளிவிட்டுக் கொண்டிருந்த வாளைப் பார்த்தான். பின்னர், நந்தினியின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

நந்தினியின் நெஞ்சை ஊடுருவிய அந்தப் பார்வையின் தீட்சண்யத்தைப் பொறுக்க மாட்டாமல், வாளை எடுக்கும் பாவனையாக அவள் குனிந்தாள்.

நந்தினியின் நோக்கத்தை அறிந்து அவளை முந்திக் கொண்டு கரிகாலன் வாளைக் கையில் எடுத்துக் கொண்டான். அதன் அடிப் பிடியிலிருந்து கூரிய நுனிவரையில் கூர்ந்து பார்த்தான். நுனியில் புதிய இரத்தக் கறை இருப்பதையும் பார்த்துக் கொண்டான்.

பின்னர் நந்தினியை நோக்கி, "தேவி! நாங்கள் வரும்போது கேட்ட சத்தம் இந்த வாளின் சத்தந்தான் போலிருக்கிறது. தங்கள் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்திருக்கிறது! எங்களை வரவேற்பதற்குக் கையில் வாளேந்தி ஆயத்தமானது போலத் தோன்றுகிறது" என்றான்.

"வீரம் மிக்க இளம் புலிகளையும் தீரத்திற் சிறந்த வாலிப சிங்கங்களையும் வரவேற்பதற்குரிய முறை அதுவேயல்லவா?" என்றாள் நந்தினி.

"மூர்க்கப் புலிகளுக்கும் சிங்கங்களுக்கும் கூரிய நகங்களும் பற்களும் வேண்டும். ஆனால் துள்ளித் திரியும் புள்ளி மானுக்கு அவை தேவையில்லையென்று தானே கடவுள் தரவில்லை?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"மானும் தன் கொம்புகளை உபயோகிக்க வேண்டிய தேவை நேரிடலாம் அல்லவா? தனக்குக் கொம்புகளை அளித்த கடவுளிடம் கலைமான் நன்றி செலுத்தும் சந்தர்ப்பமும் நேரிடலாம் அல்லவா? கருணை கூர்ந்து அந்த வாளை என்னிடம் கொடுத்து விடுங்கள்!" என்று மன்றாடினாள் நந்தினி.

"இல்லை; இல்லை! தங்கள் கைகளுக்கு இது ஏற்றதன்று. மலர் கொய்யவும் மாலை புனையவும் பிரம்மதேவன் படைத்த தளிர்க் கரங்களினால் வாளை எப்படிப் பிடிக்க முடியும்?" என்றான் கரிகாலன்.

"கோப்பெருமகனே! இந்த ஏழையின் கைகள் ஆர்வத்துடன் மலர் கொய்து ஆசையுடன் மாலை புனைந்த காலம் உண்டு. அந்த மாலையைச் சூடுவதற்குரியவர் எப்போது வருவார் என்று காத்திருந்து காத்திருந்து ஏமாந்த காலமும் உண்டு. அவ்விதம் பகற் கனவு கண்டு வந்த காலம் போய் எத்தனையோ யுகங்கள் ஆகி விட்டன. இப்போது இந்தத் திக்கற்ற அநாதையின் கரங்கள் வாளைத் துணை கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது, ஐயா! அந்தத் துணையையும் தாங்கள் என்னிடமிருந்து பறித்துக் கொள்ளாதீர்கள்!" என்றாள் நந்தினி.

"தேவி! இது என்ன பேச்சு? தங்களையா திக்கற்ற அநாதையென்று சொல்லிக் கொள்ளுகிறீர்கள்? தங்கள் காலால் இட்ட பணியைத் தலையால் வகித்து நிறைவேற்றுவதற்கு எத்தனை வாலிப வீரர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்? இது தங்களுக்குத் தெரியாதா?" என்றான் கரிகாலன்.

"தப்பித் தவறி என் கால் அத்தகைய தூர்த்தர்களுடைய தலையிலே பட்டு விட்டால் அந்தக் காலை வெட்டிக் கொள்ள வேண்டியதாயிருக்கும், ஐயா! அதற்கேனும் வாள் அவசியம் அல்லவா?"

"ஐயோ! இது என்ன கர்ண கடூரமான பேச்சு? பாதச்சிலம்பு கலீர் கலீர் என்று ஒலிக்க அரண்மனை மாட கூடங்களில் அன்னமும் நாணும் நன்னடை பயிலவேண்டிய கால்களை வெட்டுவதா? இந்த வார்த்தைகள் பெரிய பழுவேட்டரையரின் காதில் விழுந்தால் அவர் உள்ளம் என்ன பாடு படும்?"

"ஐயா! அவரைப்பற்றிக் கவலைப் படுவோர் யார்? அந்தக் கிழச் சிங்கம் ஒரு கர்ஜனை செய்தால் அதைக் கேட்டு நடுங்கி ஓடிப் பதுங்கிய வாலிபப் புலிகள் இப்போது எவ்வளவு தைரியமாக வெளி வந்து நடமாடுகின்றன? அவர் கொள்ளிடத்து வெள்ளத்தில் போய் விட்டார் என்ற செய்தியைக் கேட்ட பின்னர் அல்லவா வாலிபப் புலிகளுக்கு இவ்வளவு துணிச்சல் வந்து விட்டது? அந்தப் புலிகள் என்னிடம் ரொம்பவும் நெருங்கி விடாமல் பார்த்துக் கொள்வதற்காக இந்த ஆயுதத்தை வைத்திருந்தேன். குப்பையில் கிடந்த என்னை உலகமறிய அழைத்து வந்து அரண்மனை வாழ்வும் அரச போகமும் அளித்த மகாபுருஷரின் கௌரவத்தைக் காப்பதற்காக இந்த வாளின் உதவியைக் கோரினேன். தாங்கள் சற்று முன்னால் சொன்னது போல், மலர் கொய்ய வேண்டிய கரங்களினால் வாள் சுழற்றப் பயின்றேன்...."

"தேவி! உண்மையில் அதற்காகத்தானா? இந்தவாளைத்தாங்கள் பெட்டியில்வைத்துப் பூஜை செய்து வந்ததும், இதைத் தங்கள் மலரினும் மென்மையான கன்னங்களோடு சேர்த்துக் கொஞ்சிக் குலாவி வந்ததும், பெரிய பழுவேட்டரையரின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகத்தானா? அல்லது தங்களைப் பார்த்து அசட்டுச் சிரிப்புச்

சிரித்துக்கொண்டு நெருங்கும் நீர்மூடர்களை நெருங்க வொட்டாமல் தடுப்பதற்குத் தானா? வேறு நோக்கம் ஒன்றுமில்லையா?"

"வேறு என்ன விதமான நோக்கம் இருக்க முடியும், ஐயா?"

"ஏன்? வேறு எத்தனையோ நோக்கம் இருக்க முடியும்! பழிவாங்கும் நோக்கம் இருக்கலாம். தாங்கள் அடிபணிந்து கை கூப்பிக் கேட்டுக் கொண்ட வேண்டுகோளைப் புறக்கணித்துத் தங்கள் உள்ளத்தில் அழியாத புண்ணை உண்டாக்கிய பாதகனைக் கொன்று சபதம் முடிக்கும் நோக்கம் இருக்கலாம்!"

நந்தினி தலையைக் குனிந்து கொண்டு ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள். பின்னர், இளவரசனை நிமிர்ந்து நோக்கி, "கோமகனே! அம்மாதிரி எண்ணமும் ஒரு சமயம் எனக்கு இருந்தது உண்மைதான். அதற்காகவே இந்த வீரவாளைப் பூஜை செய்து வந்தேன். எப்போது அந்த வேளை வரும் என்று காத்துக் கொண்டிருந்தேன். ஆனால் வேளை வந்த போது என் கரங்களில் வலிவு இல்லாமல் போய் விட்டது; நெஞ்சில் உறுதியில்லாமலும் போய் விட்டது. இனி இந்த வாளை என் கற்பையும் என் கணவரின் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்ள மட்டுமே உபயோகப்படுத்துவேன். கருணை செய்து அதை இப்படிக் கொடுங்கள்!" என்றாள்.

"தேவி! அந்தப் பொறுப்பை நான் வகிக்கக் கூடாதா? தங்களுக்கோ, தங்கள் கணவருக்கோ, தீங்கு எண்ணிய பாதகனைத் தண்டிக்கும் கடமையை நான் நிறைவேற்றக் கூடாதா?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"தங்களால் அது இயலாத காரியம். இந்தத் திக்கற்ற அநாதை ஸ்திரீயின் நிமித்தம் தங்கள் ஆருயிர் நண்பர்களைத் தண்டிக்க முடியுமா?"

"ஏன் முடியாது? நிச்சயமாய் முடியும்! நந்தினி! நீ அன்றைக்கு ஏரித் தீவில் வந்தியத்தேவனைப் பற்றிக் கூறியதையெல்லாம் அப்போது நான் பூரணமாக நம்பவில்லை. பின்னால், கந்தமாறன் சொல்லியதிலிருந்து அவ்வளவும் உண்மைதான் என்று அறிந்தேன். அந்தப் பாதகனை நீ மன்னித்தாலும் நான் மன்னிக்கச் சித்தமாயில்லை. அவன் எங்கே என்று சொல்!... சொல்ல மாட்டாயா?... வேண்டாம்! என் கண்கள் குருடாகி விடவில்லை!... இதோ பார்!" என்று ஆத்திரத்துடன் ஆதித்த கரிகாலன் கர்ஜனை செய்து கொண்டே கட்டிலை மூடியிருந்த திரைச் சீலையை நோக்கி அடி எடுத்து வைத்தான்.

நந்தினி அவன் காலைத் தொட்டு எழுந்து மண்டியிட்டுக் கரங்களைக் குவித்துக் கொண்டு "கோமகனே! வேண்டாம்! வேண்டாம்!" என்றாள்.

"நந்தினி! உன் கருணையை வேறு காரியங்களுக்கு வைத்துக் கொள்! என் நண்பனைப் போல் நடித்துச் சதி செய்யும் சண்டாளனிடம் கருணை காட்ட வேண்டாம்!" என்று சொல்லிய வண்ணம் ஆதித்த கரிகாலன் நந்தினியை மீறிக் கொண்டு மேலே நடந்தான்.

நந்தினி பிரமித்துத் திகைத்தவள் போல் நாலாபுறமும் பார்த்து விழித்தாள். இத்தனை நேரமும் வாசற்படிக்கு அருகில் சிலையைப் போல் நின்று கொண்டிருந்த கந்தமாறனைப் பார்த்து, "ஐயோ! அவரைத் தடுங்கள்!" என்று அலறினாள்.

கந்தமாறனாகிய சிலைக்கு உயிர் வந்தது. ஆனால் அவன் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. இலேசாக ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்து விட்டு மீண்டும் சிலையாக மாறி விட்டான்.

கரிகாலன் ஒரு கையினால் வாளை ஓங்கிய வண்ணம் கட்டில் திரைச் சீலையின் அருகில் சென்று, இன்னொரு கையினால் திரையை விலக்கினான்.


உள்ளே, கையில் சிறிய கூரிய கத்தியுடன் தோன்றிய மணிமேகலை, 'கிறீச்' என்று சத்தமிட்டாள்.

ஆதித்த கரிகாலன் ஓங்கிய வாளுடன் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்று விட்டுப் பின்னர் அந்த வாளினால் கட்டில் திரைச் சீலையைக் கிழித்தெறிந்தான்.

"ஆகா! இந்தப் பெண் புலியா இங்கே நிற்கிறது? அப்பப்பா! இதன் நகங்கள் மிகக் கூர்மையாயிற்றே?" என்று கூறி 'ஹா ஹா ஹா' வென்று சிரித்தான்.

பின்னர், கந்தமாறனைப் பார்த்து, "நண்பா! உன் தங்கையை அழைத்துப் போய் அவள் தாயாரிடம் ஒப்புவித்து விட்டு வா! இவள் வயிற்றில் எத்தனை புலிக் குட்டிகள் பிறக்குமோ தெரியாது! இவள் இந்த வீர பாண்டியனுடைய வாளுக்கு இத்தனை நேரம் இரையாகிச் செத்திருந்தால் சோழ நாடு எத்தனை வீரப் புதல்வர் புதல்விகளை இழக்கும்படி நேர்ந்திருக்கும்?" என்றான்.

சற்று முன் உண்மையிலேயே பெண் புலி போல் சீறிய மணிமேகலை ஆதித்த கரிகாலனின் வார்த்தைகளைக் கேட்டு நாணம் அடைந்தாள். கந்தமாறன் அவளை அணுகி அழைப்பதற்குள், அவளாகவே அந்த அறையிலிருந்து செல்ல ஆயத்தமாகி விட்டாள்.



அண்ணனும் தங்கையும் அங்கிருந்து போனதும், கரிகாலன் நந்தினியைப் பார்த்து, "தேவி! ஒரு நாடகம் நடித்து அவர்கள் இருவரையும் போகச் செய்து விட்டேன். இனிமேலாவது நம் உள்ளத்தைத் திறந்து உண்மையைப் பேசலாம் அல்லவா?" என்றான்.

நந்தினி உண்மையான வியப்புடன் கரிகாலனை நோக்கி, "ஐயா! தாங்கள் நடித்தது நாடகமா? அப்படியானால், அது ஆச்சரியமான நடிப்புத்தான்! நானும் அதை உண்மையென்றே நம்பி ஏமாந்து போனேன்!" என்றாள்.

"நந்தினி! நடிப்பிலே உனக்கு இணை இந்த உலகிலேயே இல்லை என்பது என் எண்ணம். நீயே ஏமாந்திருந்தால், என் நடிப்புத் திறமையை அவசியம் மெச்சிக் கொள்ள வேண்டியதுதான்! ஆனாலும், நான் வாளை ஓங்கிக் கொண்டு மணிமேகலை மறைந்திருந்த இடத்தை நோக்கிப் போனபோது, நீ என்னைத் தடுக்கவில்லையே? அது ஏன்? என் மீது சுமந்துள்ள பல குற்றங்களுடன் ஸ்திரீ ஹத்தி தோஷமும் சேரட்டும் என்று எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தாயா?" என்று கேட்டான் கரிகாலன்.

"சிவ சிவா! இந்த உலகத்திலேயே இன்றைக்கு அந்தப் பெண் ஒருத்தியிடந்தான் நான் உண்மையான அன்பு கொண்டிருக்கிறேன். அவளும் சாகட்டும் என்று சும்மா பார்த்துக் கொண்டிருப்பேனா? திரையை நீக்கியதும் தாங்களே தெரிந்து கொள்வீர்கள் என்று எண்ணினேன்..."

கரிகாலன் சிரித்தான்.

"இந்தச் சிரிப்பின் பொருள் விளங்கவில்லை!" என்றாள் நந்தினி.

"மணிமேகலையை நான் கொல்லுவதற்கு நீ சொன்ன காரணமே போதும்!" என்றான் கரிகாலன்.

"இன்னும் விளங்கவில்லை!"

"நீ யாரிடமாவது அன்பு கொண்டாய் என்றால், அவனோ அவளோ என்னுடைய பரம விரோதியாகி விடுவார்கள். இது உனக்குத் தெரியாதா?"

"தெரியும்; அத்தகைய துரதிர்ஷ்டசாலி நான் என்று தெரியும். ஆனாலும் தங்கள் குரோதம் கள்ளங்கபடமறியாத இந்த இளம் பெண் வரையில் செல்லும் என்று நான் கருதவில்லை!"

"அல்லது உன் நோக்கம் வேறுவிதமாகவும் இருக்கலாம். நான் மணிமேகலையைக் கொன்று விட்டால், அதற்காகக் கந்தமாறன் என்னைப் பழி வாங்குவான் என்று எண்ணியிருக்கலாம். அல்லது நான் அவளைக் கொல்லுவதற்குள் அவள் கையிலிருந்த சிறிய கத்தியை எறிந்து என்னைக் கொன்று விடுவாள் என்றும் கருதியிருக்கலாம்....."



"ஐயையோ! இது என்ன? எப்படிப்பட்ட பயங்கரமான கற்பனைகள்!"

"கற்பனையா? என்னுடைய பயங்கரமான கற்பனைகளைக் காட்டிலும் பயங்கரமான நோக்கத்தை நீ உன் மனத்தில் வைத்திருக்கிறாய்! உண்மையைச் சொல்! என் உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் தீயை மேலும் வளர்க்க வேண்டாம்! என்னை எதற்காக இந்தக் கடம்பூர் அரண்மனைக்கு வரச் சொன்னாய்? எதற்காகப் பழுவேட்டரையரைத் தஞ்சைக்குப் போகும்படி செய்தாய்? சோழ சாம்ராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொடுத்துச் சமரசம் செய்து வைப்பதற்காகவோ, எனக்கும் மணிமேகலைக்கும் திருமணம் செய்வித்துக் கண்டுகளிப்பதற்காகவோ இத்தனை முயற்சியும் செய்ததாகச் சொல்லாதே! அந்தக் கதைகளையெல்லாம் நான் நம்ப மாட்டேன். நம்பியிருந்தால், இங்கு வந்திருக்கவும் மாட்டேன்..."

"பின் எதற்காக இங்கு வந்தீர்கள், கோமகனே! என்ன நம்பிக்கையுடன் இந்த இடத்துக்கு வந்தீர்கள்?"

"நம்பிக்கையா? எனக்கு ஒருவித நம்பிக்கையும் கிடையாது. என் உள்ளத்தில் நிரம்பியிருப்பதெல்லாம் நிராசையும் அவநம்பிக்கையுந்தான். இந்த நாட்டை விட்டும்,



இந்த உலகத்தை விட்டுமே, நான் போய் விட விரும்புகிறேன். அதற்கு முன்னால் உன்னை ஒரு தடவை பார்த்து விடைபெற்றுப் போகலாம் என்றுதான் வந்தேன். ஒரு சமயம் என்னிடம் நீ ஒரு வரம் கோரினாய். காலில் விழுந்து மன்றாடிக் கேட்டுக் கொண்டாய். கையெடுத்துக் கும்பிட்டு இரந்தாய். என் ஆத்திரத்தினாலும் மூர்க்கத் தனத்தினாலும் நீ கோரியதை நான் கொடுக்கவில்லை. பிறகு ஒவ்வொரு கணமும் அதை நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்கு ஏதேனும் பரிகாரம் உண்டானால், அதைச் செய்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். நந்தினி! சொல்! எந்த விதத்திலாவது அதற்கு நான் பரிகாரம் செய்ய முடியும் என்றால், சொல்!''

இவ்வாறு இரக்கம் ததும்பும் குரலில் கூறிய கரிகாலனைப் பார்த்துநந்தினி,''கோமகனே! அதற்குப் பரிகாரம் ஒன்றும் இடையாது. இறந்தவர்கள் இறந்தவர்கள்தான்! இறந்தவர்களைப் பிழைக்கச் செய்யும் சக்தி இந்த உலகில் யாருக்கும் இடையாது. கதைகளிலே காவியங்களிலே சொல்கிறார்கள். நாம் பார்த்ததில்லை'' என்றாள்.

''இறந்தவர்களைப் பிழைக்கச் செய்ய முடியாது- அது உண்மைதான்! ஆனால் உயிருக்கு உயிர் கொடுத்துப் பரிகாரம் தேடலாம் அல்லவா?... இதோ பார்! என்னிடம் இனியும் மறைக்க வேண்டாம். இங்கு நீ எதற்காக வந்தாய், என்னை எதற்காக வரச் சொன்னாய், என்னத்திற்காகப் பழுவேட்டரையரைத் தஞ்சைக்கு அனுப்பினாய் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது என்று எண்ணாதே! நீயும் நானும் சின்னஞ் சிறுவர்களாயிருந்த நாளிலிருந்து உன் மனத்தில் எழும் எண்ணங்களை அறியும் சக்தி எனக்கு உண்டு. எனக்கு ஆத்திரம் ஊட்டி நீசத்தனமான செயல் புரியும்படி செய்வதற்காகவே வீர பாண்டியனுடைய உயிருக்காக நீ மன்றாடினாய். என் பக்கத்திலிருந்து என்னை வதைத்துக் கொண்டிருப்பதற்காகவே பெரிய பழுவேட்டரையரை நீ மணந்து தஞ்சைக்கு வந்தாய். நான் காஞ்சியில் நிம்மதியுடன் இருப்பது உனக்குப் பொறுக்கவில்லை. அதனாலேயே இந்தக் கடம்பூர் அரண்மனைக்கு வரச் செய்தாய். வீர பாண்டியனுடைய வாளினால் என்னைக் கொன்று பழி முடிக்கும் நோக்கத்து

னேயே நீ இவ்விடத்துக்கு வந்திருக்கிறாய். அந்த உன்னுடைய நோக்கத்தைத் தடையின்றி நிறைவேற்றிக் கொள்! அதற்காகவே கந்தமாறனையும் அவன் தங்கையையும் அப்புறப்படுத்தினேன். இதோ! இந்த வாளைப் பெற்றுக் கொள்! உன் பழியை முடித்துக் கொள்!'' என்று கூறிக் கரிகாலன் வாளை நீட்டினான்.

நந்தினி வாளை வாங்கிக் கொண்டாள். வாளைப் பிடித்த அவளுடைய கைகள் நடுங்கின. பின்னர் அவள் உடம்பெல்லாம் நடுங்கியது. கண்களில் கண்ணீர் ததும்பியது. இதயத்தைப் பிளக்கும் சோகக் குரலில் விம்மலும் தேம்பலும் கலந்து வந்தன.

''நந்தினி! இது என்ன அதைரியம்? இந்த மனத் தளர்ச்சி ஏன்? நீ பட்டர் குடும்பத்தில் வளர்ந்தவள்; ஆனால் வீர மறக் குலத்தில் பிறந்தவள் அல்லவா? ஆட்டு மந்தையில் வளர்ந்தபடியால் சிங்கக்குட்டி தன் இயல்பை இழந்து விடுமா? இதோ பார்! உன் அந்தரங்கத்தை நான் அறிவேன். உன் பழியை முடிப்பதற்குக் கந்தமாறனையோ, பார்த்திபேந்திரனையோ, வந்தியத் தேவனையோ நீ ஏவி விட வேண்டாம். அவர்கள் மீது எனக்குக் கோபத்தை உண்டாக்கவும் வேண்டாம். உன் சபதத்தை நீயே நிறைவேற்றிக் கொள்! உன் பழியை உன் கையினாலேயே முடித்துக் கொள்! யாராவது இங்கே மறுபடியும் வந்து தொலைந்து விடலாம். கந்தமாறன் தன் தங்கையை அன்னையிடம் சேர்ப்பித்து விட்டுத் திரும்பி வருவான். பார்த்திபேந்திரனும் சம்புவரையரும் திரும்பி வரும் நேரமும் ஆகி விட்டது. அவர்களுடனே என் பாட்டன் மலையமானும் வந்தாலும் வரலாம். பழுவேட்டரையர் கொள்ளிடத்து வெள்ளத்தில் போயிருப்பார் என்றும் நான் நம்பவில்லை. அவரும் திடீரென்று வந்தாலும் வரக்கூடும். உன் பழியை முடித்துச் சபதத்தை நிறைவேற்றிக் கொள்ள இதைக் காட்டிலும் நல்ல சந்தர்ப்பம் வரப் போவதில்லை. என்னைக் கொல்லுவதினால் எனக்கு நீ எவ்விதத் தீங்கும் செய்தவளாக மாட்டாய்! பேருதவி செய்தவளாவாய்!'' என்றான்.

நந்தினி பொங்கி வந்த விம்மலை அடக்கிக் கொண்டு, ''கோமகனே! தங்களிடம் நான் எதையும் மறைக்கவும் இல்லை; மறைக்க விரும்பவும் இல்லை. நான் இங்கு வந்ததின் நோக்கம் பற்றித் தாங்கள் கூறியதெல்லாம் உண்மைதான். தங்களை இங்கு வரச் சொன்னதின் நோக்கமும் அதுதான். ஆனால் சந்தர்ப்பம் நேர்ந்திருக்கும் சமயத்தில் என் கைகளில் வலுவு இல்லை; என் நெஞ்சிலும் தைரியம் இல்லை. தாங்கள் என்னைத் தேடிவரும் காலடிச் சத்தம் கேட்டவுடனேயே என் கையிலிருந்த வாள் நழுவிக் கீழே விழுந்து விட்டது. இதோ பாருங்கள்! வாளைப் பிடித்திருக்கும் என் கரங்கள் நடுங்குவதை!'' என்றாள்.

''ஆம், ஆம்! அதைப் பார்த்துக் கொண்டு தானிருக்கிறேன். ஆனால் அதன் காரணந்தான் எனக்குத் தெரியவில்லை. உன் நெஞ்சம் ஒரு சமயம் எவ்வளவு உறுதியடைந்திருந்தது என்பதை நான் அறிவேன். தேவேந்திரனுக்காக வஜ்ராயுதத்தைச் செய்து கொடுத்த பிறகு அதில் மீதமான உலோகத்தைக் கொண்டு பிரம்மதேவன் உன் இருதயத்தைப் படைத்திருக்க வேண்டும் என்று நான் எண்ணுவதுண்டு. அப்படிப்பட்ட உன் நெஞ்சு இவ்விதம் இளகிவிட்டதன் காரணம் என்ன?....''

''தங்கள் தோழர் வந்தியத்தேவர் சொன்ன செய்திதான் காரணம்!''

''ஆகா! நீயும் நானும் உடன் பிறந்தவர்கள் என்று அவன் கண்டுபிடித்துக் கொண்டு வந்த செய்தியைத்தானே சொல்லுகிறாய்? அன்றைக்கு ஏரிக்கரைத் தீவில் நாம் பேசிக் கொண்டிருந்த போது நீ அதை நம்பவில்லையென்று சொன்னாயே? நம்மை மறுபடியும் பிரித்து வைப்பதற்காக யாரோ செய்திருக்கும் சூழ்ச்சி என்று கூறினாயே?''

''நான் அதை நம்பக் கூடாது என்றுதான் பார்த்தேன். அதற்காக எவ்வளவோ பிரயத்தனம் செய்தேன். ஆனால் இன்று அவர் கூறிய வேறொரு செய்தி என் நெஞ்சுறுதியை அடியோடு குலைத்து விட்டது.''

''ஆகா! அது என்ன? இன்னும் ஏதாவது புதிய கற்பனையா? புதிதாக வேறு என்ன கூறினான்?''

''என்னைப் பெற்ற அன்னையைப் பற்றிச் சொன்னார். அவரை இலங்கைத் தீவில் பார்த்ததாகக் கூறினார். அதை நான் நம்ப மறுப்பதற்குக் காரணம் எதுவும் இல்லை. கோமகனே! முன்னொரு தடவை நான் ஒரு வரம் கேட்டேன். அதைத் தாங்கள் கொடுக்கவில்லை. அதற்காக இன்று வரை வருத்தப்படுவதாகச் சொன்னீர்கள். இன்று மறுபடியும் ஒரு வரம் கேட்கிறேன். இதையாவது கொடுப்பீர்களா?''

''வரம் இன்னது என்று குறிப்பிட்டுக் கேட்டால், கொடுக்க முடியும் முடியாது என்று சொல்கிறேன்.''

''கோமகனே! வீர பாண்டியனுடைய மரணத்துக்குப் பழி வாங்குவதாக நான் சபதம் செய்தது உண்மைதான். மீன் சின்னம் பொறித்த இந்தப் பாண்டிய குலத்து வாளினால் ஒன்று தங்களைக் கொல்லுவேன். அல்லது என்னை நானே கொன்று கொண்டு மாய்வேன் என்று சபதம் எடுத்துக் கொண்டேன். தங்களைக் கொல்வதற்கு என் நெஞ்சிலும் துணிவு இல்லை; என் கைகளிலும் வலிவு இல்லை. என்னை நானே கொன்று கொண்டு தங்கள்

முன்னாலேயே மடியலாம் என்று எண்ணினால், அதற்குப் போதிய பலம் என் கைகளில் இல்லை. அரைகுறையாக முயன்று, என் உயிர் போகா விட்டால் என்ன செய்வது என்று பயமாயிருக்கிறது. ஐயா! என் சபதத்தை நிறைவேற்றுவதற்கு உதவி செய்யுங்கள்! இந்த வாளைத் தாங்களே வாங்கிக் கொண்டு தங்கள் கையினால் என்னை வெட்டிக் கொன்று விடுங்கள்! அப்போது என் சபதம் முடிந்து விடும். இந்த ஜன்மத்தில் மட்டுமின்றி இனி வரும் பிறவிகளிலும் தங்களிடம் நன்றியுள்ளவளாவேன்!''

இவ்விதம் கூறிக் கொண்டே நந்தினி நீட்டிய வாளை மறுபடியும் ஆதித்த கரிகாலன் வாங்கிக் கொண்டான்.

''ஹா ஹா ஹா'' என்று அந்த அரண்மனை முழுதும் எதிரொலி செய்யும்படி பயங்கரமாகச் சிரித்தான்.

(தொடரும்)

அருள்வாக்கு

பழக்கம் எப்படி வரும்? ஈச்வர க்ருபையில்தான் வரும். 'அந்தக் க்ருபை எப்படி வரும்?' என்றால் அதற்காகத்தான், அதை வருவித்துக் கொள்வதற்காகத்தான், இரண்டு 'எக்ஸ்ட்ரீம்'களாக அநுஷ்டானங்களை சாஸ்திரங்கள் ஏற்படுத்திக் கொடுப்பது. நமக்குத் தெரிந்த நிலையில் ஒரு எக்ஸ்ட்ரீமாக பண்டிகை, போஜனம், பாட்டு, கூத்து ஆகியவற்றையும் தினுசு தினுசுகளில் அபருசி கண்ட நம் மனஸுக்கு ஏற்றபடி அநேக தெய்வங்கள் ஆகியவற்றையும் ஒரு பக்கம் சொல்லிக் கொண்டே, அதே ஸமயத்தில் இன்னொரு எக்ஸ்ட்ரீமான உண்ணாத உறங்காத பேசா நிலையையும் நிர்குண ஏக பரமாத்மாவையும் ஞாபகப்படுத்திக் கொண்டேயிருப்பது. இப்படி இரண்டு எக்ஸ்ட்ரீம்களையும் மாறி மாறி அப்பியாசம் செய்கிறதாலேயே, தராசின் இரண்டு தட்டுகளிலும் 'வெயிட்'களைப் போடுவதால் அது ஸம நிலைக்கு வருகிற மாதிரி மனஸு ஸமத்துக்கு வந்து, அதோடு வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் மாடரேஷன் வந்து விடும்.

ஒரு கயிற்றை ''தொய்யாமல் நில்லு'' என்று வெறுமனே விட்டால் அது நிற்குமா? அதை இரண்டு பக்கம் இரண்டு கழியை நட்டு இரண்டு கோடிக்குமாக இழுத்துக் கட்டினால்தானே ஸம நிலையில் தொய்யாமல் நிற்கும்? அப்படித்தான் தானாக ஸமநிலைக்கு வராத நம் வாழ்க்கை முறையை அப்படிப் பண்ணவே இரண்டு கோடியாக இரண்டு வித எக்ஸ்ட்ரீம்களில் அநுஷ்டானங்களைக் கொடுத்துக் கட்டிப் போட்டிருக்கிறது. நேராக மாடரேஷனுக்குப் போகத் தெரியாததால், எக்ஸ்ட்ரீம்களை ஸமயாநுஷ்டானத்தில் கொடுத்து, அதன் வழியாக வாழ்கின்ற முறை மாடரேஷனில் போகும்படி பண்ணியிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



கோர்ப்பச்சேவ்



வெள்ளிக்கிழமை இரவு பத்தரை மணி. ஸ்ரீநிவாசன், அப்பா, கீதா மூவரும் 'தி வோர்ல்ட் திஸ் வீக்' பார்த்துவிட்டு, 'கோர்பசேவ் – புஷ் ஆயுதக் குறைப்புப் பேச்சு வார்த்தை பற்றி 'கமெண்ட்' அடித்த படி சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். பேச்சு திசை மாறியது.

அப்பா கேட்டார், ''என்ன ஸ்ரீநிவாஸா, திங்கட்கிழமை போக வேண்டியதுதானே?''

''பார்க்கலாம்பா.''

''என்ன பார்க்கலாம்? நீதானே இன்ஜி னியரிங் படிக்கணும்னு இரண்டு வருஷ மாய்ச் சொல்லிக்கிட்டிருக்கே...?''

''நேராக் கிடைக்கலையே அப்பா. பரி தாப்பப் பட்டுத்தானே கொடுத்திருக் கான். எனக்கு வேண் டாம்ப்பா, இந்த சீட்...''

விஷயம் இதுதான் –

தலையில்...

போட்டிக் கதை — 11
(அறிமுக எழுத்தாளர்)

பிளஸ் டூ முடித்த ஸ்ரீநிவாஸனுக்கு இஞ்சினியரிங் காலேஜில் இடம், மூன்றே மார்க்கு வித்தியாசத்தில் கிடைக்காமல் போய், இப்போது ஊனமுற்றோருக்கு ஒதுக்கப்பட்ட இடம் கிடைத்திருந்தது. அதை ஏற்றுக் கொள்ளத்தான் திங்கட்கிழமை போக வேண்டும்.


அப்பா தொடர்ந்தார்: "அப்படியில்லை, ஸ்ரீநிவாஸா! உன் மத்த நண்பர்கள் சிகரெட்டும் பீரும்தான் த்ரில்னு நினைக்கறச்சே, ஒரு கஷ்டமான கணக்கைச் செய்து முடிக்கிறதுதான் பெரிய த்ரில்னு நீ நினைக்கறே. படிக்கணும்ங்கிற உன் உள்ளுணர்வை மதிக்கணும். வந்திருக்கிற வாய்ப்பை உதறித் தள்ளிடாதே."

"எனக்கு அந்த உள்ளுணர்வு இருக்குன்னு நீங்க நம்புறீங்க இல்லையா? உங்க நம்பிக்கை வீண் போகாது — நான் எப்படியும் நிறையப் படிப்பேன். ஆனா இந்த சீட் வேணாம்பா..."

"நல்லா யோசி, ஸ்ரீநிவாஸா!"

ஸ்ரீநிவாஸன் தூங்கிப் போனான்.

சனிக்கிழமை காலை — நண்பன் வீட்டுக்குப் போய், பத்து கேம் டேபிள் டென்னிஸ் விளையாடி விட்டு உட்கார்ந்தான், ஸ்ரீநிவாஸன். ஆறு ஆட்டங்களில் அவன் வெற்றி பெற்றிருந்தான்.



"ஸ்ரீநிவாஸன்! சும்மாத்தான் கேக்கறேன். நடக்கும் போதெல்லாம் சாய்ஞ்சு சாய்ஞ்சு நடக்க ஒரு மாதிரி இல்லையா?" — திடீரென்று கேட்டான் நண்பன்.

ஸ்ரீநிவாஸன் அலட்டிக் கொள்ளாமல் பதில் சொன்னான்: "சான்ஸே இல்லை. இப்ப, கோர்பசேவ் புஷ்கிட்டே பேசும் போதெல்லாம் தன் தலையில காக்காய் எச்சம் மாதிரி இருக்குன்னு நினைச்சுக்கிட்டேவா பேசுவார்! வேறெவ்வளவோ முக்கியமான யோசனைகள் இருக்கும். அது போலத்தான். நடக்கும் போது என்னென்னவோ யோசனை. இதைப் பத்தி ஞாபகமே வராது!"

"இருந்தாலும் எதிர்ல வர்றவன் உன் மூஞ்சியைப் பார்க்காம காலைப் பார்த்தால்? ஊஹும்... பாவம்தான்..."

"ம்ப்ச்! எனக்கு அது தெரியவே தெரியாது... சரி, நான் கிளம்பறேன்."

"ஏண்டா?"

"இல்லை. நான் அப்புறம் வர்றேன்."

மன உளைச்சலில் வேகமாக நடந்தான்.

'இவன் என்ன பரிதாபப்பட வேண்டியிருக்கிறது? இவனுக்கு என்ன தெரியும் என் யோசனைகளைப் பத்தி? ஆண்டாள் திருப்பாவை அனுபவிக்கத் தெரியுமா? அய்ன் ராண்ட் நாவல் புரியுமா? மொழியையும் கடந்த உன்னத இசையோட செய்தி புரியுமா இவனுக்கு? 'பாவாடை நனையுது, பலானது போகுது'னு யாராவது அவதாரம் பாடினா, 'ஆ'னு கேட்பான். டி.டி.யிலே சொல்லிச் சொல்லி ஐந்து கேம் தொடர்ந்து இவனைத் தோற்கடிப்பேன். இவனால என்னைத் தோற்கடிக்க முடியுமா? இருந்தாலும் இவன் பரிதாபப்படுவான் நான் நொந்துக்கணும் — வெம்பி உடைஞ்சு போகணும்.'

மனத்துக்குள் புழுங்கியபடி வீட்டுக்குள் நுழைந்தபோது அம்மா ஆச்சரியமாய்க் கேட்டாள்: "என்ன ஸ்ரீநிவாஸா, இவ்வளவு சீக்கிரம் வந்துட்டே?"

"ஆமாம்மா. இன்னிக்கு என்ன டிபன்?"

"என்ன வேணும்?"

லேசாய்ச் சிரித்துக்

ஷ்யாமா

கொண்டே சொன்னான், "என்ன, முதல்ல தக்காளி சூப், அப்புறம் பட்டர்நான் + காஜு ஸேவி, சீஸ் புலவ், கடைசியில ஸ்ட்ரா பெரி ஐஸ்க்ரீம். எப்படி என் ஆர்டர்!"

அக்கா கீதாவும் அவனும் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். அம்மா தனக்கு எதுவும் புரியலை என்பது போலத் தலையசைத்தாள்.

"ஒண்ணும் இல்லை, அம்மா! நான் போய் அரிசிப் பொரி வாங்கிட்டு வர்றேன். பால்ல போட்டு, சர்க்கரை போட்டுச் சாப்பிடலாம்."

அவன் கடைக்குப் போனபின் அம்மா கீதாவைக் கேட்டாள், "காஜுன்னா என்ன?"

"காஜுன்னா முந்திரிம்மா. அவன் சொன்ன ஐட்டத்துக்கு நூறு ரூபாய் ஆகும்!"

அரிசிப் பொரி சாப்பிடும் போது அம்மா வேலையை முடித்துக் கொண்டு வந்தாள்.

"ஸ்ரீநிவாஸா, நீ இஞ்சினியரிங் படிச்சா, நீ, உன் பிள்ளை எல்லாரும் காஜுவா சாப்பிடலாம். நானே பண்ணித் தர்றேன்."

"சே! சே! நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்மா. இதோ! அரிசிப் பொரிதான் உடம்புக்கும் நல்லது. நன்னாவும் இருக்கு."

"நான் நிஜமாத்தான் சொல்றேன். அந்த ஸீட் வேண்டாம்னு சொன்னியாமே?"

"அம்மா! படிப்புக்கும் மனத்துக்கும் நீ நினைக்கிற அளவுக்குச் சம்பந்தம் இல்லைம்மா. அப்பா எவ்வளவு படிச்சு இருக்கார்? தமிழ், ஸம்ஸ்க்ருதம், இங்கிலீஷ் மூணுலேயும் ஆயிரம் புத்தகங்கள் படிச்சிருப்பார். ஆனாலும் எளிமையா இருக்கணும், படிப்பைக் காசாக்க வேண்டியதில்லைன்னு இருந்துட்டார்."

"நீ தியாக புத்தின்னு நினைச்சு மதிக்கிறே. மத்தவர்கள் எல்லாம் அப்படி நினைக்கலியே."

"அம்மா, நான் பணம் பண்ணாம இருக்கப் போறதில்லை. நிறையப் பணம் சம்பாதிப்பேன். ஆனா அப்பா உனக்குத் தந்த நிம்மதி, சந்தோஷம் இந்தப் பணத்தால கிடைக்காது. அதையும் நீயே பாரேன்... நான் கட்டாயம் சம்பாதிப்பேன். அதுக்கு வேண்டிய வித்தையெல்லாம் கத்துப்பேன். அதுக்கு இஞ்சினியரிங் ஒரு நல்ல வழிதான். ஆனா வேற வழிகளும் இருக்கு."

"இது இப்ப கைல கிடைச்சிருக்கிற வழி..."

"பார்க்கலாம்மா."

ஞாயிறு காலை.

வேறொரு நண்பனோடு செஸ் விளையாடிக் கொண்டிருந்தான், ஸ்ரீநிவாஸன்.

"ஸ்ரீநிவாஸன்! உனக்கு இஞ்சினியரிங் ஸீட் கிடைச்சுடுத்தாமே..." என்றான் நண்பன்.

"சுவாரசியமில்லாமல், "ம்" கொட்டினான் ஸ்ரீநிவாஸன்.

"நீ கால் நல்லா இல்லாம போனதை நினைச்சு சந்தோஷப்படறியா?"

கோபக்கேள்விக் குறியோடு ஸ்ரீநிவாஸன் முகத்தை நிமிர்த்தினான்.

"இனிமே உனக்கு இதே மாதிரி மேல் படிப்பு, வேலைக்கெல்லாம் கூடக் கவலை இல்லை."

ஸ்ரீநிவாஸன் வேகமாக எழுந்தான். கால் முக்காலியைத் தட்ட, செஸ் காய்களெல்லாம் கீழே விழுந்தன. நேரே வெளியே போனான்.

'இவன் வாயில் நாக்கிற்குப் பதிலாகக் கையில் இயந்திரத் துப்பாக்கி இருக்கலாம். அந்த அளவுக்குக் காழ்ப்புணர்ச்சி! ஐயோ!

தன்னலம் எல்லாரிடமும் இருக்கிறது. எனக்கும்தான் ஐஸ்க்ரீம் சாப்பிட வேண்டும். ஆனால் இங்கே தன்னலத்தை விடப் பொறாமை பூதாகாரமாய் இருக்கிறது.

கால் ஊனம் கஷ்டம் இல்லை. அதை வைத்துத் தன்னம்பிக்கையை வேரறுத்து விடுவார்கள் போலிருக்கிறதே! எனக்கு ஒரு துணை பற்றுக் கோடு வேண்டும் — படிப்பு வேண்டும்.

பரிதாபப்பட்டுக் கொடுத்தான் என்று ஏன் நினைக்க வேண்டும்? எனக்கு மறுக்கப் பட்டது எப்படியோ கிடைத்து விட்டது என்று நினைத்துக் கொள்ளலாமே. நான் விட்டு விட்டால் என்ன லாபம்? இவனே, ஏமாளி என்றும் சொல்லுவான். அதைவிட என் பரந்த மனசோடு இந்தப் படிப்பை வைத்துக் கொண்டு என்னால் முடிந்ததை இவர்களுக்கே செய்வேன். அதைப் பார்த்து இவன் மாறட்டும். இவனைப் போன்ற பிறர் மாறட்டும்.'

இரவு 'ஜெஸ்ஸி ஓவன்ஸ்' முடிந்தவுடன் டியூஸைப் பட்டென்று அணைத்தாள் கீதா. அப்பா சிரித்துக் கொண்டே ஸ்ரீநிவாஸனைப் பார்த்தார்.

"அப்பா, நாளைக்குக் கார்த்தால போகலாம் அப்பா."

"வாவ்!" என்றாள், கீதா. "இதுதான் சரியான முடிவு. விஷ் யு குட் லக்! ஆனா ஒண்ணு சொல்றேன். இனிமே எதிர்கால நாட்களுக்கு உன் மண்டைக் குடைச்சல் பத்தியோ, காலைப் பத்தியோ யோசிக்கவே கூடாது. உன் யோசனையெல்லாம் இனிமே படிப்பு, படிப்பு, படிப்புதான், ரைட்?"

"ரைட்!"

அரசியல்வாதி: நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இருண்ட இந்தியாவை வெளிச்சத்துக்குக் கொண்டு வர, ஆளுக்கொரு டார்ச் லைட் இலவசமாகக் கொடுப்போம் என்பதை அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்!

— எஸ். முகம்மது ஆகப்.



இரண்டாவது சூரியன்

15

சுருட்டை முடி. உள்ளங்கைக்கு அடங்காத பின்னல். டீச்சர்ஸ் ரூமில் பிரித்து, உதறி, சீவிக் கொள்ளும் போது ஹா என்று வியக்காதவர் இல்லை. இரண்டு கைகளையும் உயர்த்திக் கொண்டை போட்டுக் கொள்கிற முயற்சியில், சாவித்திரியின் உடம்பு முழுவதும் இளமை தெரியும். அழகு கொஞ்சும்.

எவனுக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ என்று தோன்றும்.

''எதுக்குடி இந்தப் பாழாப் போற டீச்சர் உத்தியோகம் உனக்கு. எங்கியாவது சினிமா டிராமான்னு சேராம...'' யாரோ சொன்னார்கள்.

''சைய்... இருக்குங்கறதுக்காக இறைச்சிடறதா. உயர ஷெல்ப்ல கண்ணாடி ஜார்ல இருக்கிற ஸ்வீட்தான் அட்ராக்ஷன். கூறு கட்டி விக்கற கமர்கட்டா மாறலாமா? சினிமாக்குப் போனா கூறுகட்டி வித்துருவாங்க'' — சாவித்திரி பதில் சொன்னாள்.

''நாலு பேர் பாராட்டுவாங்களேன்றதுக்குச் சொன்னேன்.''

''நான் சொல்றதும் அதான். உயர, கண்ணாடி ஜார்ல இருந்தாத்தான் பாராட்டு வாங்க. ரோட்ல அவனவன் முழி பிதுங்கப் பார்க்கிறது தெரியாதா. பஸ்ல கண்டக்டர் எழுந்து எனக்கு ஸீட் தரான்னா ஏன்னு புரியாதா. 'யாரு அதுன்னு' தெரிஞ்சவனைத் தெரியாதவன் விசாரிக்கிறது எனக்கும் கேட்கும். அவங்க இந்தப் பள்ளிக்கூடத்துல, இத்தனையாவது டீச்சர். எம்.ஏ. ஸோஷியாலஜி. எம்.பில் செய்யறாங்கன்னா, அப்படியான்னு சோகமாயிடறான். ரொம்ப உயரம்னு அண்ணாந்து பார்க்கறான். நான் வெறும் அழகு மட்டும் இல்லை; டீச்சர்! நான் படிச்சவ. அது ஷெல்ஃப். நான் டீச்சர். ஒரு கண்ணாடி ஜார். பார்த்துட்டு ஆம்பிளைங்க ஜொள்ளு ஒழுகப் போய்டுவாங்க. நான் கமர்கட் இல்லை. சுத்தமான பண்டம். நான் திருவிழா கமர்கட்டா ஆகவும் விரும்பலை. ஓ.கே.''

'சாமர்த்தியசாலி!' என்று பேச்சுக் கேட்டதும் தோன்றிற்று. தான் தன் நிலை புரிந்திருக்கிறது என்று பட்டது. ஆனால் இந்த ஸ்வீட்டியும் நைவேத்யம் ஆகவில்லை. யாரோ திருட்டுத்தனமாய்த் தொட, திட்டமிட்டுத் திருட, இன்று கண்ணாடி ஜார் உடைந்து, தரையில் கிடக்கிறது! தற்கொலைக்கு முயன்ற பெண்ணை, ஒரு டீச்சரை, பள்ளி மறுபடி சேர்க்குமா. கிரிமினல் குற்றமில்லையா. இனி உயர ஷெல்ஃபுக்கு அர்த்தமுண்டா?

'சாவித்திரி! உன்னைப் பெருக்கிக் குப்பைல போட்டுருவாங்கடி' — உள்ளே மனசு பதறிற்று.

''மேடம் ப்ளீஸ் லெட் அஸ் கோ அண்ட் ஹெல்ப் சாவித்திரி'' பானுமதி கெஞ்ச,

தலைமையாசிரியை யோசித்தாள்.

''அட்லீஸ்ட் எனக்கு இரண்டு மணி நேரம் பர்மிஷன் கொடுங்க, நான் மட்டுமாவது...''

''நானும் வரேன் பானுமதி.''

உடனே ஓர் ஆட்டோ பிடித்து அரசு ஆஸ்பத்திரிக்குப் போனார்கள்.

''மேடம், ப்ளீஸ் இங்கே நில்லுங்க. நான் போய் எங்கே அட்மிட் ஆயிருக்கான்னு விசாரிச்சுக்கிட்டு வரேன்.'' ஆட்டோவுக்குக் காசு கொடுத்து விட்டு உள்ளே ஓடினான்.

'எந்தன் கனிவான பாடல், முடிவாகும் முன்னே கனவான கதை கூறவா, பொங்கும் விழி நீரை அணை போடவா...' — உள்ளே ஓடும்பொழுதே மனசு பாட்டுச் சொல்லி அழுதது.

''தற்கொலைன்னா எப்படி?'' வார்ட் பாய் கேட்டான். ''நெருப்பு வச்சுக்கிச்சா? அந்த ஆஸ்பத்திரி வேற கட்டடம். பாய்சனா...? மேல... மாடிலேர்ந்து விழுந்து, இல்லை கிணத்துல குதிச்சுன்னா, இடது பக்கம் கோடியிலே... ட்ரெயினு, லாரின்னு குறுக்க விழுந்துருச்சுன்னா அநேகமா பூட்ட கேஸ். நேரே மார்ச்சுவரி போங்க.''

''ஸ்லீப்பிங் பில்ஸ்ன்னு சொன்னாங்க.''

''ஆது சாப்ட்டு யாரும் போறதில்லை! மாடில ட்ரை பண்ணுங்க.''

''எமர்ஜன்ஸி வார்ட்ல இருப்பாங்களா?''

''ட்ரை பண்ணுங்க.''

''இன்டென்ஸிவ் கேர் யூனிட் எங்க இருக்கு?''

பாலகுமாரன்

''நேரே போய் லெஃப்ட்ல. உள்ள வுட மாட்டாங்களே. எப்படிப் போவே...?''

பானுமதி எப்படியாவது என்று யோசித்து நேரே ஓடினாள். உள்ளே விட மறுத்தார்கள். ''சாவித்திரின்னு யாராவது..?''

''பதினேழு கேஸ் காலைலேர்ந்து இன்டன்ஸிவ் கேருக்கு வந்துருக்கு. எனக்கு ப்ராப்ளம்தான் முக்கியமே தவிர பேர் இல்லை. டோன்ட் டிஸ்டர்ப் மீ. என்குவைரில கேளு...'' நர்ஸ் சீறி விழுந்தாள்.

ஆடுகால் தசை ஆடிற்று.

''என்குவைரி எங்கே இருக்கு...?'' கேள்விக்குப் பதில் சொல்ல ஆள் இல்லை.

தேடலாம். வேகமாய்த் திரும்பினாள். கிட்டத்தட்ட இடித்துக் கொள்கிற அண்மையில் ஆள் வரத் தடுமாறி விலகினாள்.

''டீச்சர் குட் ஈவினிங்.''

அந்த ஆள், வனிதாவின் அங்கிள்.. ஐயோ இவன் பெயர் என்ன ... பரத்.. பரத்வாஜன்.

''என்ன பிரச்னை டீச்சர். நான் மோட்டார் சைக்கிளோட ஸிக்னலுக்கு நின்னுக்கிட்டு இருந்தேன். நீங்க ஆட்டோல யாரோ ஒரு அம்மாவோட இறங்கி உள்ள ஓடினீங்க. ஏதோ ஸீரியஸ் போலன்னு நினைச்சுக்கிட்டு வண்டி நிறுத்திட்டு வந்தேன். என்ன பிரச்னை டீச்சர்.

இதைச் சொல்லலாமா? இவர் ஒரு மாணவியின் உறவினர். இது பள்ளிக்கூடத்தின் அவமானம். ஒரு டீச்சர் தற்கொலை முயற்சி செய்வது பள்ளியின் அவமானம்தானே. சொல்லலாமா? வேறு வழி? இந்தச் சமுத்திரத்தில் எப்படி என்னால் தேட முடியும்.

''சாவித்திரின்னு ஒரு டீச்சர் தற்கொலை முயற்சி செய்துக்கிட்டாங்களாம். போன் வந்தது...''

''அடடே. எப்போ?''

''போன் ஒரு அரைமணி முன்னாடி வந்தது. முயற்சி எப்போன்னு... நான் இங்கே எல்லார் கிட்டேயும் கேட்டேன். யாரும் சரியா கைட் பண்ணாம கத்த விடறாங்க.''

''வெய்ட் எ மினிட். என் பிரண்ட்ஸ் நாலைஞ்சு பேர் இங்கே டாக்டர். நாம கேட்கிறதை விட, அவங்க கேட்டா டக்குன்னு சொல்லிடுவாங்க. என் கூட வாங்க.''

டாக்டர்கள் ஓய்வெடுக்கும் அறைவிசாரித்துத் தேடிப் போனான். பானுமதி பின்னால் ஓடினாள். தள்ளு கதவு மூடியிருந்தது. ஒரு கணம் தயங்கினான். பளிச்சென்று தள்ளி ஷூ தேய உள்ளே போய் நின்றான். இரண்டு மூன்று டாக்டர்கள் திரும்பிப் பார்த்தார்கள். தள்ளு கதவு, இறந்தவர்களின் உறவினர் போல் தன்னைத்தானே அடித்துக் கொண்டது. கிறீச்சிட்டது. நாற்காலியில், தலையைப் பின்னே சாய்த்துத் தூங்கிய ஓர் இளம் டாக்டரைத் தட்டி எழுப்பினான்.

பானுமதியும் உள்ளே போனாள்.

டாக்டர் நிதானமாய் விழித்துப் பார்க்க, பரத் குனிந்தான்.

''மாணிக்கவாசகம் ஓர் அவசரமான விஷயம். தெரிஞ்சவங்க, தற்கொலை முயற்சி — போன் வந்தது.''

''வாடா சோம்பேறி எப்படி இருக்கே இளம் டாக்டர் கொட்டாவி விட்டார்.''

''நல்லா இருக்கேன். கொஞ்சம் ஹெல்ப் பண்ணு கண்ணா.''

''உனக்குப் பண்ணாதியா. யாரு தற்கொலை?''

''லேடி. சாவித்திரின்னு பேரு...''

''உன் ஆளா?''

''ப்ச்சு. மாணிக்கவாசகம். எனக்குத் தெரிஞ்சவங்களுக்குத் தெரிஞ்சவங்க. இவங்க ஃப்ரெண்ட். இவங்க டீச்சர்.'' பள்ளிக்கூடப் பெயர் சொன்னான்.

''அப்படியா? என்ன செய்யணும்?''

''எங்க இருக்காங்கன்னு தெரியலை.




ஆஸ்பத்திரி முழுக்கச் சுத்திட்டோம்.''

''சுத்தினா கண்டுபிடிக்க முடியுமா? ஆஸ்பத்திரி வாசல்ல ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கும். தற்கொலைன்னு கொண்டாந்தவுடனே, அங்கே அரை மணி போட்டுத்தான் உள்ளே அனுப்புவாங்க. அந்த அரை மணில போகாத உயிரை... வேணாம் நானே சொல்லக் கூடாது. போய் போலீஸ் ஸ்டேஷன்ல விசாரி.''

''கொஞ்சம் இங்கேயே இருங்க டீச்சர். நான் போய் முழு விவரமும் விசாரிச்சுக் கிட்டு வரேன். நீங்க அலைய வேணாம்.''

பானுமதி நகர்ந்து வெளியே வந்தாள்.

''டாக்டரம்மா! டாக்டரம்மா! உடனே வாங்கம்மா.... வந்து எங்குழந்தையப் பாருங்கம்மா. வலிப்பு வந்திடுச்சும்மா அதுக்கு. உனக்குக் கோடி புண்ணியம்...'' யாரோ முப்பது வயதுக்காரி கும்பிட்டு, அழுது பானுமதியின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.



''ஐய்யயோ... நான் டாக்டர் இல்லை. அவங்க உள்ளே இருக்காங்க.''

''கொஞ்சம் கூப்பிடுங்கம்மா. இருந்தாப்பல இருந்து விலுக்கு விலுக்குன்னு வெட்டி இழுக்குதே. கொஞ்சம் கூப்பிடுங்கம்மா.''

பானுமதி தயங்கினாள்.

கதவு திறந்து, அந்த இளம் டாக்டர் வெளியே வந்தான்.

''என்ன?''

''குழந்தைக்கு வயித்துப் போக்குன்னு கொண்டாந்தேங்க. உள்ளே சேர்க்கச் சொல்லிட்டாங்க. ஊசி போட்டாங்க. இப்ப வெட்டி வெட்டி இழுக்குதுங்க. நர்ஸு பொம்பளை கூட நிக்குது. டாக்டர் வரணும், டாக்டர் வரணும்னுது...''

''யாரு டாக்டரு?''

''தெரியலையே. வெள்ளைக் கோட்டு போட்டுக்கிட்டுக் கொத்துக் கொத்தா வந்து நிறைய டாக்டருங்க பார்த்தாங்க. யாருன்னு நா சொல்லுவேன்.''

''அவங்க படிக்கிற பசங்க. யாரு டாக்டரு?''

''தெரியலையே!''

''எங்க வார்ட்?''

''ஊசி குத்தற இடத்துக்கு நேர்பின்னாடி.''

''என்னா நெம்பர்?'' அதட்டினான்.

''தெரியலையே. எனக்குப் படிக்கத் தெரியாது ராஜா. உன்னை என் குல தெய்வமா வச்சுக் கும்புடுவேன். உன்னிய பெத்தவ நல்லா இருக்கணும் பெருமாளே. என் குழந்தைய.. என் குழந்தைய...'' அவள் விம்மினாள் பானுமதிக்குத் தலை சுழன்றது.

அந்த டாக்டர் அவளோடு விரைவது பார்த்துக் கொண்டிருந்தாள்.

பின்னால் போகலாமா? பரத் வந்து தேடினால்? இவர் எந்த வார்ட் போனார்? ஊசி குத்துகிற இடத்துக்குப் பின்னாடி... எந்த வார்ட், தெரியவில்லையே?

பேந்தப் பேந்த நின்றாள்.

''டீச்சர்!'' பின்னால் குரல் கேட்கத் தூக்கி வாரிப் போட்டது.

''இருக்காங்க. இன்டென்ஸிவ் கேர் யூனிட்டிலே. கே. சாவித்திரி. வயசு இருபத்தி ஆறு. கிருஷ்ணன்றவர் அட்மிட் பண்ணியிருக்காரு. ஆனா ஸ்லீப்பிங் பில்ஸ் இல்லை. மூட்டை பூச்சி மருந்து. முக்கால் பாட்டில் குடிச்சுட்டாங்க...''

''ஐயோ!''

''டாக்டர் எங்கே?''

''இப்ப யாரோ ஸீரியஸ்னு கூப்பிட்டுப் போனாங்க.''

''டாக்டரை நான் கண்டுபிடிக்கிறேன். அதான் உங்க டீச்சரான்னு பார்த்து முதல்ல கன்ஃபார்ம் பண்ணுங்க. கம்,'' விரைவாய்க் கடந்தான். பானுமதி தொடர்ந்தாள்.

அவன் இன்டென்ஸிவ் கேர் கதவு சட்டென்று திறந்து உள்ளே போனான். அவள் வர விட்டான். கதவு மூடினான்.

வாசலில் ஷூ கழற்றினான். மறுபடி ஒரு கதவு திறந்தான். நர்ஸ் எதிர்ப்பட்டாள்.

''டாக்டர் மாணிக்கவாசகம்...'' என்றான்.

''கே. சாவித்திரி வேர் இஸ் ஷி...'' வேகமாய் விசாரித்தான்.

''கடைசி பெட்.''

விரைவாய் நடந்தான். பானுமதி தொடர்ந்தாள்.

திரைகள் மூடிய, அறை போன்ற அமைப்பில் சாவித்திரி கலைந்து கிடந்தாள். கற்றை முடி பிரித்துப் போடப்பட்டுத் தலையைச் சுற்றித் தோகை போல் கிடந்தது.

''இவங்கதானா...?''.

தலையாட்டினாள், சாவித்திரி! சாவித்திரி... உள்ளே நெகிழ்ந்து கண்ணில் ஜலம் பொங்கி வார்த்தை தடுமாறிற்று.

''ஸ்ஸ". வந்துருங்க. டாக்டரைப் பிடிப்போம்'' அதே வேகத்தில் வெளியே வந்தார்கள்.

டாக்டர் மாணிக்கவாசகம்..

ஊசி செருகி மருந்து ஏற்ற, நர்ஸ் உதறும் குழந்தையின் கால்களை அழுந்தப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

ஊசியை எடுத்து பேஸினில் போட்டு விட்டு நாடித்துடிப்பு கவனித்துக் கொண்டிருந்தார். திரும்பினார்.

''என்ன பரத்?''

''கண்டுபிடிச்சுட்டோம். கொஞ்சம் நீ வந்து பார்க்கணும்.''

''வர்றேன்.''

''அவசரம் மாணிக்கவாசகம்.''

''அப்ப இது அவசரம் இல்லையா? இந்தக் குழந்தை செத்துப் போனால் பரவாயில்லையா?''

''அப்படிச் சொல்லலை கண்ணா...''

''யார் அது?''

''அவங்கதான் டீச்சர். பேஷண்ட் சினேகிதம். உன் நிலைமை எனக்குப் புரியுது. கொஞ்சம் சீக்கிரமா வந்தா...

பதிலே பேசவில்லை. நாடியிலேயே முழுக் கவனமும் இருந்தது.

உலுக்கல் மெல்லக் குறைந்தது. சளக் சளக்கென்று நெஞ்சு குழிந்தது. அந்தப் பெண்மணி எட்டிப் பார்த்தாள். டாக்டர் ஸ்டெத் எடுத்து மார்பில் பல இடங்களில் அவசரமாய் மாற்றி மாற்றி வைத்தார். மெல்லக் காதிலிருந்து கழற்றினார்.

''செத்துப்போச்சு.சொல்லிடுங்க.'' எழுந்திருந்தார்.

''ஐயா!'' அந்தப் பெண்மணி கலவரமாய் உள்ளே வந்தாள். ''ஸிஸ்டர் சொல்லிடுங்க... வா, பரத், போகலாம். எங்கே பேஷண்ட்?''

''இன்டென்ஸிவ் கேர் யூனிட்ல.''

''அடி என் ராஜாத்தி...'' கதறல் கட்டடம் பிளந்தது. பானுமதி யாரோ அடித்துத் துரத்தியது போல் வெளியே ஓடி வந்தாள். பரத் வெகு தொலைவில் டாக்டரோடு போய்க் கொண்டிருந்தான்.

ஓட முடியாது கால்கள் நடுங்கின.

அவர்கள் இருவரும் உள்ளே போய் விட்டார்கள். அருகே உள்ள பெஞ்சில் உட்கார்ந்தாள்.

'சாவித்திரி, சாவித்திரி, சாகாதடி! மகா பாவி, சாகாதடி! உன்னைக் கண்ணாடி ஜார் ஸ்வீட்டுன்னு சொல்லிட்டு, குப்பையாப் போகாதடி, ப்ளீஸ்! எவனோ ஏமாத்திட்டானுட்டு உன்னை அழிச்சுக்காதடி. உன் தலைமுடியையும், இளமையையும் எவன் வார்த்தைக்கோ மயங்கி அழிச்சிடாதடீ. எல்லாத்தையும் விட உன் படிப்பு சாவித்திரி... நீ ஒரு டீச்சர். எம்.ஏ. ஸோஷியாலஜி. சாவித்திரி ப்ளீஸ். உன்னை இப்படி மாற்றியது யார்? ஏன் இப்படி ஆனாய்?

பொருளோடு வாழ்வு உருவாகும்போது
புகழ்பாட பலர் கூடுவார் — அந்தப்
புகழ் போதையாலே எளியோரின் வாழ்வை
மதியாமல் உரையாடுவார் — ஏழை
விதியோடு விளையாடுவார். — அன்பை
மலிவாக எடைபோடுவார். — எந்தன்
கனிவான பாடல் முடிவாகுமுன்னே
கனவான கதை கூறவா — பொங்கும்
விழிநீரை அணை போடவா.

— பானுமதி நெஞ்சு பாட்டுப் பாடிற்று. அடக்க முடியாமல் கண்ணீர் வந்தது.

(தொடரும்)



அகமதாபாதில் அதிசய மனிதர்

நன்கப்பாய் தவே அகமதாபாதைச் சேர்ந்தவர். தொண்ணூறு அடி உயரத்தில் கயிறு கட்டி அதில் சைக்கிள் ஓட்டி, சர்க்கஸ் செய்து காண்பித்தார். எத்தனை நேரம்? நான்கு நாட்கள்! எதற்காக இந்தச் சாகசம்?

தொழுநோயாளர்களுக்கு உதவிட.

இந்தச் சாகசத்தைப் பார்த்த மக்கள் அளித்த நிதி உதவி ஒரு லட்சம் ரூபாயை எட்டியது.

— சாமி

சங்கிலித் திருடன் முதல் ஆட்டோ சங்கர் வரை!

வீட்டு வாசலில் "அம்மா" என்று அழைக்கும் குரல் கேட்கும். வீட்டுப் பெண்கள் வெளியே வந்து பார்க்கும்போது, குரலுக்குரியவரின் கை நீண்டு, அவர்கள் கழுத்துத் தாலிக் கொடியைக் கண் இமைக்கும் நேரத்தில் பறித்துக் கொள்ளும். பெண்கள் சுதாரித்துக் கொள்வதற்குள் திருடன் ஓடியே போய்விடுவான்.... இதே பாணியில் பத்து நாட்களுக்கு ஒரு முறை என்று இருபத்தோரு தாலித் திருட்டுக்கள் நடந்து விட்டன, சென்னை ம்யிலாப்பூரில்... இத் தருணத்தில்தான் குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் ந. மிர் சவுக்கத் அலி மயிலாப்பூருக்கு மாற்றலாகி வந்தார்.

ஓர் இரவு ஒன்பது மணியளவில் சவுக்கத் அலி டூட்டி முடிந்து வீட்டுக்குப் புறப்படுகையில் ஸ்டேஷனுக்குப் போன் வந்தது — தாலித் திருடன் மீண்டும் கைவரிசையைக் காட்டியிருந்தான். சம்பவம் நடந்த வீட்டிற்கு விரைந்தார் சவுக்கத் அலி.

பல பெண்களைப் போலின்றி அந்த சி.ஐ.டி. நகர் பெண்மணி திருடன் வந்ததும் பதறவோ ஸ்தம்பிக்கவோ செய்யாமல், தமது தம்பியைக் கூவி அழைத்திருந்தார், உதவிக்கு. இருவரும் சேர்ந்து திருடனின் சட்டையைப் பற்றி, அவனை நிறுத்த முயன்ற போது அவன் திமிறிக்கொண்டு ஓடி விட்டிருந்தான். சட்டை கிழிந்து, ஒரு துண்டுப் பகுதி அவர்கள் கையில் சிக்கிவிட்டது. தாலிக் கொடியும் அறுந்து போய்ப் பெண்ணின் புடைவை மடிப்புகளில் தங்கி விட்டது. கட்டம் போட்ட அந்தச் சட்டைத் துணியைத் தடயமாக வைத்துக் கொண்டு அப் பகுதியில் நடமாடிய கட்டம் போட்ட சட்டைக்காரர்களையெல்லாம் வளைத்து விசாரிக்கத் தொடங்கினர், சவுக்கத் அலியும் அவரது போலீஸ் படையினரும். தாலித் திருடன் தனது ஒரு முயற்சியில் தோல்வியுற்றால் வெற்றி கிடைக்கும் வரை விடாமல் முயற்சி செய்வான் என்பதை அவனது கடந்த கால நடவடிக்கைகளிலிருந்து அனுமானித்திருந்தனர். அதற்கேற்றார்போல் அந்த வட்டாரத்திலேயே ஒரு கட்டம் போட்ட சட்டைக்காரன் சவுக்கத் அலி வசம் சிக்கினான்.

* இ. ஜி. ராஜசேகரன் நாயரிடம் பாராட்டுப் பெறுகிறார் மிர் சவுக்கத் அலி.

பிடிபட்டவன் 'ஆ ஊ' என்று கத்தி, ரகளை செய்தான் என்பதால் சவுக்கத் அலி எச்சரிக்கை அடைந்தார். ஆனால் வெளிச்சத்தில் அவன் சட்டையைப் பார்த்த போது அதில் கிழிசல் இல்லை; கையிலிருந்த துண்டுத் துணியினின்றும் வேறு பட்டது! எனினும் பிடிபட்டவன் மிகவும் திமிறி ரகளை செய்ததால் அவனை விடாமல் பிடித்துக் கொண்டிருந்தார். அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களை உதவிக்கு அழைத்தார். அவர் மஃப்டியில் இருந்ததால் அவர் போலீஸைச் சேர்ந்தவர் என நம்ப மறுத்து, யாரும் உதவிக்கு வரவில்லை! இறுதியில் அப் பகுதியிலிருந்த உயர் போலீஸ் அதிகாரி வீட்டில் காவலுக்கு இருந்த கான்ஸ்டபிள் ஒருவரின் உதவியுடன் கட்டம் போட்ட சட்டைக்காரனைக் கட்டிப்போட்டார்.

அதே சமயத்தில் ஒரு பெண்மணி தமது தாலி திருடு போய் விட்டதாகப் புலம்பியபடி தெருவில் ஓடி வந்தார்! கட்டுப்பட்டுக் கிடந்தவனைக் கண்டதும் "இவன் தான்! இவன் தான் என் தாலியைத் திருடினான்!" என்று அடையாளம் காட்டியதுடன், "தன் கிழிஞ்ச சட்டையை எங்க வீட்ல கழட்டிப் போட்டுட்டு ஒரு நல்ல சட்டைய வேற திருடிப் போட்டுக்கிட்டான் ஸார்!" என்றார்.

பிடிபட்டவனின் பாக்கெட்டைத் துழாவியபோது அப்பெண்ணின் தாலிக் கொடி அகப்பட்டது!

"வந்தவாசியைச் சேர்ந்த பூங்காவனம் என்ற அத்திருடனை அழைத்துக் கொண்டு ஊரெல்லாம் சுற்றி அலைந்து அவன் திருடிய தாலிகளுள் பலவற்றை மீட்டதோடு அவற்றை உரியவர்களிடமும் சேர்த்தேன்" என்று கூறுகிறார் இன்ஸ்பெக்டர் சவுக்கத் அலி.

இது நடந்தது 1978 இல்..... 1983—84 இல் சென்னையை ஆட்டிப்படைத்த முகமூடிக் கொள்ளையர்களைப் பிடிப்பதில் முக்கிய பங்கு வகித்த சவுக்கத் அலி, தற்போது ஆராய்ந்து வருவது — ஆட்டோ சங்கர் வழக்கை!

சந்திப்பு: ப்ரியன்



திறந்த கதவுகள்

ராஜ்கோகுல்

"எக்ஸ்யூஸ் மீ சார்...! எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் எங்கே இருக்கு தெரியுமா....?"

"எனக்குச் சரியாத் தெரியலை மேடம். நானும் அங்கேதான் போகணும். வாங்க விசாரிச்சுக்கிட்டே போவோம்..."

— சங்கர்ராஜுவும், சியாமளாவும் ஒருவருக்கொருவர் இப்படித்தான் அறிமுகம் ஆனார்கள்.

"அதோ நாலு ரோடு தெரியுது, பாருங்க... அதிலேருந்து லெஃப்டிலே போங்க. பெரியார் மாளிகைன்னு போர்டு போட்டிருக்கும். அதுக்குள்ளேதான் இருக்கு...."

அந்தப் பெரியவர் காட்டிய பாதையில் நடந்தார்கள்.

எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸில் அவர்களுக்குப் புதிய அனுபவங்கள் காத்திருந்தன!

பெரிய கூட்டம் காத்திருந்த ரூமை நோக்கி இருவரும் நடந்த போது, "படிச்சு முடிக்கிறதுக்குள்ளேயே ஜோடி சேர்த்துடுங்க...! இதுக்கு ஒண்ணும் குறைச்சலில்லே..." என்று பியூன் குரலைத் தாழ்த்திக் கமெண்ட் அடித்தான். சுருக்கென்று தைக்க, சரேலென்று திரும்பிய சங்கர்ராஜ் அவனை எரித்து விடுவதைப் போல வெறித்தான்.

"சரி, சரி வாங்க..." சமாதானப்படுத்துவது போல் சியாமளா முணுமுணுக்க, "அறிவு கெட்டவன்.." என்று திட்டியவாறே திரும்பி நடந்தான்.

அறை, பட்டதாரிகளால் நிரம்பியிருந்தது.

கடைசியில் கிடந்த பெஞ்சில் அவன் உட்கார, கொஞ்சம் இடைவெளி விட்டு அவளும் உட்கார்ந்தாள்.

காத்திருந்தார்கள். முக்கால் மணி நேரத்துக்குப் பிறகு ஆளுக்கு ஒரு கவர் போன்ற அட்டையும், ஒரு சிறிய கார்டும் கொடுத்தார்கள். அதில் பெயர், சாதி, பிறந்த தேதி, படிப்பு... என்று எல்லாவற்றையும் பூர்த்தி செய்யச் சொன்னார்கள். சான்றிதழ்களைச் சரிபார்த்தார்கள்.

"இப்ப நீங்களெல்லாம் போகலாம்... மதியம் மூணு மணிக்கு வந்து ரிஜிஸ்தரேஷன் கார்டை வாங்கிட்டுப் போயிடுங்க..." என்று அறிவித்து விட்டுப் போய் விட்டார்.

வெளியே வந்தார்கள்.

"அப்போ வீட்டுக்குப் போயிட்டு மூணு மணிக்கு வர்றீங்களா மிஸ்டர் சங்கர்...?" சியாமளா கேட்டாள்.

"அதுதான் யோசிக்கிறேன்.. எப்படி என் பெயர் தெரிந்தது, உங்களுக்கு...?"

"அதுதான் ரிஜிஸ்ட்ரேஷன் கார்டிலே எழுதினீங்களே? நான் இதை எதிர்பார்த்து, கையோட டிபன் கொண்டு வந்து விட்டேன்..."

"நானும் பக்கத்திலேயே ஒரு ஹோட்டல் பார்த்துச் சாப்பிட்டு வந்துடறேன்.. ஆமாம்... உங்க பேரு?"

"நான் கார்டிலே எழுதும் போது நீங்க பார்க்கலையா...?" என்று சிரித்தாள்.

"இல்லையே..." அவன் அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

"சியாமளா... கே. சியாமளா... எதுக்கு ஹோட்டலுக்குப் போறீங்க... ஆட்சேபணையில்லேன்னா, இந்த டிபனை ஷேர் பண்ணிச் சாப்பிடுவோம்..."

அதிகம் பழக்கம் இல்லாத ஓர் ஆணிடம் இவ்வளவு தைரியமாக, கள்ளங்கபடமில்லாமல், கலகலப்பாக இவளால் எப்படிப் பேச முடிகிறது? அவன் ஆச்சரியப்பட்டான். 'பிகு' செய்யாமல் அவள் யதார்த்தமாகப் பேசிய விதம் அவனை மிகவும் கவர்ந்து விட்டது.

வயசான பெரிய புளிய மரத்தின் நிழலில் கிடந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து, அவள் கொண்டு வந்திருந்த எலுமிச்சை சாதத்தை மிச்சம் வைக்காமல் சாப்பிட்டார்கள். ஆபீஸிற்குள் போய்த் தண்ணீர் குடித்து விட்டு மீண்டும் மரத்தடி நிழலுக்கே வந்தார்கள்.

"இன்னிக்கு ரிஜிஸ்டர் பண்ணியிருக்கோமே, எப்பங்க வேலை கிடைக்கும்...?"

"நாலு அஞ்சு வருஷமாவது ஆகும் மிஸ்டர் சங்கர்...."

"நாலு வருஷமா...?" அவன் அதிர்ந்தான்.

"என்ன நீங்க உலகம் தெரியாத ஆளா

இருக்கீங்க...?'' அவள் கடிந்து கொண்டாள்.

அப்படியே பேச்சு நீண்டு கொண்டே இருந்தது. சினிமா, அரசியல், பத்திரிகை என்று...

மூன்று மணிக்குக் கார்டை வாங்கிக் கொண்டார்கள்.

நல்ல நண்பரைப் பெற்ற மகிழ்ச்சியோடு இருவரும் எதிர் எதிர்த் திசைகளில் பிரிந்து சென்றார்கள்.

''ஹலோ சங்கர்...! நீங்களுமா இங்கே வேலைக்குச் சேர்ந்திருக்கீங்க..?'' அவள் முகத்தில் ஆச்சர்ய சந்தோஷம்.

''ஹலோ....'' கொஞ்சம் யோசித்து விட்டு ''சியாமளா... நீங்களா?'' என்றான்.

டவுன் ஹாலில் திடீர் திடீரென்று 'பாம்பே பஜார், சூப்பர் பஜார்'ன்னு ஜவுளிக் கண்காட்சி முளைக்கும். அப்படியொரு கண்காட்சியின் விற்பனை ஆட்களாகத்தான் இருவரும் சந்தித்துக் கொண்டார்கள். மாதம் முந்நூறு ரூபா சம்பளம். மூணு மாசம் வரை ஓடும்.

கூட்டம் அதிகமில்லாத நேரத்தில் அவர்களுக்குப் பேசுவதற்கு நிறையவே அவகாசம் கிடைத்தது.

''அப்பா இல்லே. சின்ன வயசிலேயே போயிட்டாராம். வயசான அம்மா. ஒரு தம்பி. ப்ளஸ் ஒன் படிக்கிறான் ஸ்ரீரங்கம்



ஸ்கூல்லே...''

''எனக்கு ஒரு தங்கை ப்ளஸ் டூ முடிச்சிட்டு, வீட்டிலே இருக்கா. பென்சன் வாங்குறார் அப்பா. அம்மாவுக்குப் பணக்கார வியாதி — மூட்டுவலி...''

பல விஷயங்களையும் பரிமாறிக் கொண்டார்கள். நட்பும் நெருக்கமும் அதிகமானது. கிடைக்காத வேலையும், குடும்பப் பொறுப்புகளும் எச்சரித்துப் பயமுறுத்தின.

''என்னை உங்களுக்குப் பிடிக்க வைச்சது எது?'' அவள் கேட்டாள் ஒரு நாள்.

''உன் கள்ளம் கபடமில்லாத, கலகலப்பான அதே சமயத்தில் யதார்த்தமான பேச்சு. பிரச்னையைக் கண்டு பயந்து நடுங்காமல், அலட்டிக்காமல் அணுகும் உன் தைரியம்... அப்புறம் கடைசியா உன்னோட எளிமையான அழகு....''

''மூணாவது இடம்தானாக்கும்...? நான் அவ்வளவு அழகில்லேன்னு சொல்லாமச் சொல்றீங்களாக்கும்?'' — பொய்ச் சிணுங்கல் சிணுங்கினாள்.

''அப்புறம் என்ன தேவதைன்னு நினைப்பாக்கும்? அதிருக்கட்டும், உனக்கு என்கிட்டே பிடிச்சது?''

''முதல் முதல்லே, எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸிலே அந்த பியூன் கமெண்ட் அடிச்சப்போ சடார்னு திரும்பி முறைச்சீங்களே ஒரு முறை! — கண்ணகி மதுரையை எரிச்ச மாதிரி, ஓர் எரி — பார்வையாலே... அந்தச் சம்பவம்தான் உங்களை எனக்குப் பிடிக்க வைச்சது... வேறே ஒண்ணுமில்லே...''

''வேறே ஒண்ணுமில்லேன்னா...? நான் ரொம்ப அசிங்கமா இருக்கேன்னு சொல்ல வர்றியாக்கும்? பரவாயில்லை....'' — அவன் சிரித்துக் கொண்டான்.

''ரொம்ப சிரிக்காதீங்க. வேலை கிடைச்சதும் சிரிக்கக் கொஞ்சம் மிச்சம் வைச்சுக்குங்க....''

வேலையைப் பற்றிப் பேச்சு வந்ததும் அவன் முகம் சுருங்கிப் போனது.

எப்போ ஒரு நிரந்தர வேலை கிடைக்கிறது...? எப்போ நாம் கல்யாணத்தைப் பத்தி நினைக்கிறது? இருவரது மனங்களும் தனித்தனியே கவலையில் ஆழ்ந்தன. சில விநாடிகள் சோகமான மௌனம்.

''சரி... ஒரு அக்ரிமெண்ட் போட்டுக்குவோம்.....''


'என்ன?' என்று கண்களாலேயே கேட்டு விட்டு அவளைப் பார்த்தான்.

''நம்ம இரண்டு பேரிலே யாராவது ஒருத்தருக்கு வேலை கிடைச்சவுடன், நாம நேரா ரிஜிஸ்தர் ஆபீஸுக்குப் போறோம்... சரியா...?''

''அதெப்படி...? எனக்கு வேலை கிடைச்சாத்தானே கல்யாணத்தைப் பத்தி...''

''ஓஹோ...? 'மேல் ஷாவினிஸ'மாக்கும்? நீங்க மட்டும் சம்பாதித்து, நான் வீட்டை நிர்வகிக்கலாம்... ஆனால் நான் மட்டும் சம்பாதித்து, நீங்க வீட்டில் இருந்து பார்த்துக்கக் கூடாதோ...?'' — அவள் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னேற்றத்திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மை ஒரு தடையாக இருந்திருந்தால்........

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண்டும், அதற்கு ஆங்கிலத்திலேயே பதிலளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

பல புத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டுபோதும்...ஆமாம்!

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், தயக்க மின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத் திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல்களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற்கொள்ளலாம்.

"நேர்முகப்பயிற்சியும் உண்டு."

என்ன?.....எங்கே கிளம்பி விட்டீர்கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17.

NAGA

''ஓ.கே., ஓ.கே... அக்ரீட்...!'' என்றான், அவனும் சிரித்துக் கொண்டே.

காலம் வேகமாக ஓடி விட்டது.

சங்கர் — சியாமளாவின் காதலுக்கு வயது நான்காகி விட்டது! நிரந்தரமான வேலை தான் இருவருக்குமே கிடைக்கவில்லை!

எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் மூலம் இது வரை சுமார் இருபது இடத்துக்கு இண்டர் வியூவுக்குப் போய் விட்டார்கள் இருவரும்! முடிவுதான் 'நெகட்டிவ்' ஆகவே இருந்து கொண்டிருந்தது. ''ஒரு கிளார்க் வேலை கூட வாங்கிக் கொடுக்கத் துப்பில்லாமல் எதுக்கு எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸின்னு வைச்சிருக்காங்க? இழுத்து மூடிப் பூட்டிட்டுப் போக வேண்டியதுதானே! இத்தனை லட்சம் பேர் வேலை இல்லாமத் தவிக்கிறாங்கன்னு கணக்குக் காண்பிக்கவா, ஆபீஸ் நடத்துறாங்க...'' இப்படி ஓராயிரம் முறை பொருமியிருப்பான் சங்கர்.

இருவரும் கடைசியாகச் சந்தித்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகி விட்டது.

அந்தச் சிறிய கல்யாண மண்டபம் மங்கள ஒலிகளால் நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. கல்யாணம் சங்கரின் தங்கைக்குத் தான்!

''வா! வா! சியாமளா! எங்கே வராம இருந்துடுவியோன்னு பயந்து கிடந்தேன்.'' சங்கருக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை.

''இப்ப என்ன பண்ணுறே சியாமளா...? பார்த்தே ஒரு மாசமாச்சு...''

''பரவாயில்லையே என் பேரைக் கூட நினைவிலே வைச்சிருக்கீங்களே..?''

''கோவிச்சுக்காதே. தங்கையின் கல்யாண வேலை... நகர முடியலை.. சரி, சரி உள்ளே போ, அப்புறம் பேசுவோம்...''

''இது சியாமளா... ஸ்ரீரங்கம்... என்னோட ஃப்ரெண்ட்...'' என்று அறிமுகம் செய்து வைத்த போது, அவனுடைய அம்மா 'விஷயத்தை' ஒருவாறு ஊகித்து விட்டாள். அப்பா ஒரு சந்தேகப் பார்வை பார்த்தார்.

தாலி கட்டிய பின், பந்தி நேரத்தில் கிடைத்த சிறு இடைவெளியில் சங்கர் ஒரு புலம்பு புலம்பித் தீர்த்து விட்டான் —

''எனக்கு ஒரு நல்ல வேலை கிடைக்கும்கிற நம்பிக்கையே போயிடுச்சு சியாமளா.. நடு ராத்திரியிலே போய், இந்த எம்ப்ளாய்மெண்ட் ஆபீசையெல்லாம் தீ வைச்சுக் கொளுத்திடலாம்னு தோணுது...''

''மனசைத் தளர விடாதீங்க சங்கர். நான் இப்ப சில பிள்ளைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கிறேன். வேலை கிடைக்கலேன்னா பரவாயில்லே. வேற ஏதாவது 'டிரை' பண்ணுவோம். சொந்தமாக ஏதாவது தொழில் தொடங்கிட வேண்டியதுதான். நான் கூட ஒரு நர்சரி ஸ்கூல் துவங்கலாம்னு யோசிக்கிறேன்...'' அவள் அவனைச் சமாதானப்படுத்த முயன்றாள். அவனோ மீண்டும் புலம்பினான்.

''அதுக்கெல்லாம் சில ஆயிரமாவது வேணுமே? எவன் தர்றேங்கிறான்...''

''டோண்ட் பி செல்பிஷ்... முயற்சி பண்ணினா நிச்சயம் கிடைக்கும்...'' அவள் விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டாள்.

அடுத்த வாரத்தில் ஒருநாள்...

''ஹேய் சங்கர்! என்ன இது சர்ப்ரைஸ் விசிட்...?'' — குதித்தாள் சியாமளா. ''எப்படி வீட்டைக் கண்டுபுடிச்சீங்க...?''

''வாங்க தம்பி'' என்றாள் அவளது அம்மா.

''எனக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வந்துடுச்சு சியாமளா. இதோ! முசிறியிலே புதுசா ஒரு எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் திறந்திருக்காங்களாம். அதிலே ஜூனியர் அசிஸ்டெண்டா போஸ்டிங் போட்டிருக்காங்க. நாளைக்கே ஜாயின் பண்ணப் போறேன்...'' மூச்சு விடாமல் பேசினான். அவன் முகம் முழுதும் சந்தோஷம்!

''கங்க்ராஜ்லேஷன்ஸ் சங்கர்...!'' சந்தோஷம் அவளையும் தொற்றிக் கொண்டது.

''பார்த்தீங்களா சங்கர்! எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸையெல்லாம் இழுத்து மூடணும்னு ஆயிரம் தடவையாவது திட்டியிருப்பீங்க! உங்களுக்காகவே புதுசா ஓர் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸைத் திறந்து, அதிலே உங்களுக்கு வேலை குடுத்திருக்காங்க! நம்ம நாட்டிலே வேலை வாய்ப்பைப் பெருக்க இதுவே நல்ல வழியாத்தான் படுது! ஊருக்கு ஊர், கிராமத்துக்குக் கிராமம் ஒரு எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸைத் திறந்துட்டா, கணிசமான பேருக்கு வேலை கிடைச்சுடுமே...!'' — அவளது நையாண்டிப் பேச்சைப் புரிந்து கொள்ளும் மனநிலையில் அவன் இல்லை! அவனது மனம் ரிஜிஸ்டர் ஆபீஸை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது! ''வர்றேன் சியாமளா! அடுத்த வாரம் அப்பா அம்மாவோட வர்றேன்'' என்றான் உற்சாகமாக!



அரசியலவாதி 1: நம்ம தலைவருக்குத் தேசிய நோக்கை விட, சர்வதேச நோக்கு அதிகம்!

அரசியல்வாதி 2: எப்படிச் சொல்றீங்க?

அரசியல்வாதி 1: 'நாங்க ஆட்சிக்கு வந்தால் நைல் நதியையும், கங்கை நதியையும் ஒன்றாக இணைப்போம்'னு அறிக்கை விட்டிருக்காரே!

— எஸ். முகம்மது யூசுப்.

மாப்பிள்ளை



அகம்பாவியும் அசல் பாவியுமான பணக்காரி ஒருத்திக்கும் குடும்பப் பற்றும் பாசமும் கொண்ட புத்திசாலி ஏழை இளைஞருக்கும் ஒரு சவால். உசந்தது எது? பணமா, பாசமா? இதே தலைப்பில் எப்பவோ ஒரு படம் பார்த்த ஞாபகம் வருகிறதா? தப்பில்லை. இது அதனுடைய திருத்தப்பட்ட பதிப்புத்தான்.

'என் மூக்கு மேல விரல் வச்சு என்னை அடையாளம் காட்டினாளே...' என்று ஒரு நூறு முறையாவது நூறு விதமாய்ப் புழுங்கி அமலாவை ரஜினி தாக்க வருவதாகட்டும்; அதைத் தொடர்ந்து அமலா மனம் நெகிழ்ந்து அப்புறம் மகிழ்ந்து ரஜினியைக் காதல் டாவு கட்ட வர, ரஜினி ஜகா வாங்கி ஒதுங்க, அமலா விதவிதமாய் டிரெஸ் பண்ணிக் கொண்டு வந்து காரில் தொடர்ந்து விரட்ட, கடைசியில் தாங்க முடியாமல், ஆற்றில் விழுந்து சாகும்படி அமலாவை ரஜினி உதாசீனப்படுத்த, அமலா அதை மெய்யாக்க முயல, ரஜினி பாய்ந்து காப்பாற்றி, காதலுக்குப் பச்சைக் கொடி காட்டும் பரவசமாகட்டும்; பணக் கொழுப்பின் உச்சாணித் திமிரில் நின்று ஸ்ரீவித்யா சவால் விடும் ஒவ்வொரு மோதலிலும் எதிர் சவால் விடுகிற அமைதியான தன்னம்பிக்கையாகட்டும் சூப்பர்தான்.

அமலாவின் அந்தத் தனி முத்திரை:— அதிர்ச்சி, திகைப்பு, தன்னிரக்கம் இவற்றை சும்மா ஒரு புருவ நெரிப்பிலும் விழி விரிப்பிலும் மட்டுமே எண்ணமாய் வெளிப்படுத்தி விடுகிறார்! ஆனால் ஏதோ மேனாட்டு இறக்குமதி என்கிற மாதிரி இதிலே பிகினி ட்ரெஸ் உள்பட மேற்கத்தி உடைகளுடன் செக்ஸ் அப்பீல் ஓவர்தான். இன்னொரு சின்ன அட்வைஸ்: இதுக்கு மேல் டயட் கண்ட்ரோல் வேண்டாமே!

ஏறக்குறைய நகை ஸ்டாண்டாய் வரும் ராஜராஜேஸ்வரி ஸ்ரீவித்யா என்ன சொல்கிறார், எது செய்கிறார் என்ற திசையில் மனசைக் கொண்டு செலுத்தவே சற்றுந் திணற வேண்டியிருக்கிறது. காரணம் இப்படியொரு குரோத பாவத்துக்கு அவர் இதுவரை இரையானதில்லை. என்னவோ அந்தப் பாந்தமான முகத்துக்கு வில்லிப் பூச்சுப் பொருந்தவில்லை.

ரவிக்கு ஏதோ ஜால்ரா பாத்திரம். ஸ்ரீவித்யாவின் வஞ்சக செகரட்டரி. ஜால்ரா ஓசையாய் அவர் 'நீ' என்று உச்சரிக்கும் விதம்: நீட்!

கேடித் தோழர்களாய்க் கூட்டுச் சேரும் வினு சக்ரவர்த்தியும், எஸ். எஸ். சந்திரனும் ஸ்ரீவித்யாவின் சித்தப்பாவும் அவரது செகரட்டரியும் என்று செப்பிக் கொண்டு செவிமலர் சுற்றிச் சிரிக்க வைக்கப் பார்க்கிறார்கள். ஏதோ கடனே என்று சிரித்து வைக்கிறோம்.

கடைசிக் கட்டத்தில் ஜெய்சங்கர் கொஞ்சம் போல் வந்தாலும் ஏகப்பட்ட முடிச்சுக்களை அவிழ்க்கும் முக்கிய பாத்திரமாய், பொறுமையால் பொல்லாங்கை வென்று விடலாம் என்ற நீதி புகட்டும் எடுத்துக் காட்டாய் வந்து நெஞ்சத்தைத் தொட்டு விட்டுப் போகிறார்.

சுறுசுறு நிகழ்ச்சிகளால் பலம் தேடிக் கொள்ளும் ரகம் இந்தப் படம். உதாரணமாய்:— ரஜினியின் வீடு நுழைந்து பெண் கேட்பதாய்ப் பேர் பண்ணிக் கொண்டு சொந்த நாற்காலியை அந்த வீட்டில் கொண்டு வந்து போட்டுக் கால் மேல் கால் போட்டு அமர்ந்து ஸ்ரீவித்யா குத்தலும் கிண்டலுமாய்ப் பேசும் தோரணையும் அவரைத் தூக்கியெறிந்து ரஜினியின் தாய் சாடும் விளாசலும்.

பாடல்கள் சுகம். காமெரா இதம்.

அமர்ந்தவரை அசர விடாமல் கூர்ந்து கவனிக்கச் செய்திருக்கிறார் மாப்பிள்ளை.

— பி. எஸ். எஸ்.



பழைய வேட்பாளர்கள்: புதிய வாக்காளர்கள்!

சுஜாதா: பல பத்திரிகைகளில், குறிப்பாக ஹிந்துவில் இதுவரை வெளிவந்திருக்கிற பல தஸ்தாவேஜுகளைப் பார்த்தால், போஃபர்ஸ் பேரத்தில் கமிஷன் பெறப்பட்டிருக்கிறது என்பது புரிய வரும். வேறு ஏதாவது ஜனநாயக நாட்டில் இதுபோன்று நடந்திருந்தால் பிரதமர் பதவியில் இருப்பவர் எப்போதோ ராஜினாமா செய்திருப்பார்!

வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் முதல் முறையாக வோட்டுப் போட இருக்கும் 18 — 21 வயதினரில் நால்வரை அழைத்து நாட்டு நடப்பு பற்றி விவாதிக்கச் சொன்ன போது...

சுஜாதா (சென்னை, கல்லூரி மாணவி): நாம் எல்லோரும் முதல் முறையா வோட்டுப் போடப் போறோம். நாட்டை யார் தலைமை வகித்து நடத்திச் செல்லப் போகிறார்கள் என்று தேர்தல் முடிவு சொல்லும். இந்தத் தேர்தல் உள்ளூர்ப் பிரச்னைகளில் ஒரு மாறுதலையும் விளைவிக்கப் போவதில்லை. ஆகையால் தேச நலனை மனத்தில் வைத்து நாம் செயல்பட வேண்டும்.

ரங்கநாதன் (சென்னை, கல்லூரி மாணவர்): ராஜீவ் காந்திக்கும் தேசிய முன்னணிக்கும் நடக்கும் போட்டி இது. காங்கிரஸின் ஒரே தலைவராக ராஜீவ் இருக்கிறார். ஆனால் தேசிய முன்னணியின் ஒரே தலைவர் யார் என்று சொல்ல முடியுமா? தப்பித் தவறி தேசிய முன்னணி ஜெயித்தால் யார் பிரதமராவார்கள்? அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் ஒவ்வொருவரும் பிரதமராகத் துடிக்கிறார்கள். 'நாங்கள் ஜெயித்தால் இவர்தான் பிரதமர்' என்று சொல்லி வோட்டுக் கேட்கக் கூடிய தைரியம் இன்னும் அவர்களுக்கு வரவில்லை.

கருணாநிதி (நிலவுடைமையாளர், விவசாயி, செங்கல்பட்டு மா. வ.): இப்போது எதற்காக ராஜீவ் காந்தியை வெறுக்கணும்?

சுப்பிரமணியம் (விவசாயத் தொழிலாளி செங்கை மா. வ.): கிராமத்துலே இந்த போஃபர்ஸ் பிரச்னையைப் பற்றி யாரும் கவலைப்படலை. நிறைய பேருக்கு அது பற்றித் தெரியுமா என்பதே சந்தேகம். ஆனால் பஞ்சாயத்து ராஜ் மசோதா மூலம் மக்களுக்கு ராஜீவ் காந்தி செய்யவிருந்த நல்ல செயல்களை எதிர்க்கட்சியினர் தடுத்துவிட்டனர் என்பது புரிகிறது. மேலும், ஜவாஹர் திட்டம் மூலம் பஞ்சாயத்துக்கு நேரடியாகப் பணம் வந்து, வேலை நடந்திருக்கு. அது தவிர, தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கியோர் ஆகியோருக்குத் தொழில் நடத்த

• டி. எஸ். ரங்கநாதன்



• எல். சுஜாதா



வங்கிக் கடன் உதவிகள் செய்யப்பட்டுள்ளன. அதனால் பெரும்பாலான கிராம மக்கள் காங்கிரஸுக்குத்தான் வோட்டுப் போடுவார்கள்.

ரங்கநாதன்: தேசிய முன்னணித் தலைவர்கள் ஆட்சிக்கு வந்தால் எவ்வளவு நாள் ஒற்றுமையுடன் ஆட்சி நடத்துவார்கள் என்பது சந்தேகம். எதிர்க்கட்சிகளில் பாரதிய ஜனதா நல்ல கட்சிதான். ஆனால் மதத்தையொட்டி அந்தக் கட்சி செயல்படுகிறது. மதச் சார்புள்ள கட்சிகள் ஆபத்தானவை.

கருணாநிதி: தற்போது தமிழகத்தில் நிலவும் அரிசிப் பிரச்னை; ரேஷன் கடைகளில் மண்ணெண்ணெய், பாமாயில் போன்றவை கிடைக்காதது; பஸ் கட்டண உயர்வு போன்றவை தி. மு. க. வைப் பாதிக்கும். மிகச் சுலபமாகக் காங்கிரஸ் தமிழ் நாட்டில் வெற்றி பெறும்.

சுஜாதா: பல அத்தியாவசியப் பொருட்களை மத்திய அரசுதான் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒதுக்கித் தர வேண்டும். ஆனால் எதிர்க்கட்சி ஆட்சி இங்கு நடப்பதால் பாமாயில், மண்ணெண்ணெய், சர்க்கரை போன்றவை தமிழகத்துக்கு மிகக் குறைந்த அளவில் அளிக்கப்படுகின்றன. இதுதான் பிரச்னை!

சுப்பிரமணியம்: கிராமமக்கள் அவ்வளவு தூரம் யோசிக்க மாட்டார்கள். யார் பிரபலமானவர் என்று பார்த்து, கிராமத்தில் வோட்டுப் போடுகிறார்களே தவிர, போஃபர்ஸ் ஊழல், இலங்கைப் பிரச்னை போன்ற பிரச்னைகளின் அடிப்படையில் யாரும் வோட்டுப் போடுவதில்லை.

சுஜாதா: ஆனால் விலைவாசி உயர்வு கிராம மக்கள் உள்பட அனைவரையும் பாதிக்கும் விஷயம். வி. பி. சிங் நிதியமைச்சராக இருந்த போது பல பொருளாதாரத் திட்டங்கள், வரி விலக்குகள் கொண்டு வந்தார். இதன் விளைவு மிகவும் அற்புதமாக இருந்தது. நல்ல பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்தி, விலைவாசியைக் கட்டுப்படுத்தும் ஆட்சி வேண்டுமானால் வி. பி. சிங்குக்குத் தைரியமாக வோட்டுப் போடலாம்.

ரங்கநாதன்: ராஜீவ் அமைச்சரவையில் சிங் இருந்தபோது செய்த காரியங்களின் விளைவாகப் பெறப்படும் பாராட்டு ராஜீவுக்குத்தான் போய்ச் சேருகிறது.

சுஜாதா: வி. பி. சிங் மகன் மீது கூட பல குற்றச்சாட்டுக்கள் இப்போது கூறப்பட்டுள்ளன. ஆனால் "வழக்குப் போடுங்கள்; சந்திக்கத் தயார்" என்று பதில் கொடுத்தும் அரசு யோசிக்கிறதே, அதுதான் வேடிக்கை!

சுப்பிரமணியம்: யார் பதவிக்கு வந்தாலும் லஞ்சம் இருக்கத்தான் போகிறது! தேசிய முன்னணி வந்தால் இப்போது ஒருவர் அடிப்பதற்குப் பதிலாகப் பத்து பேர் சேர்ந்து கொள்ளையடிப்பார்கள்!

சுஜாதா: 1977 — இல் ஜனதா அரசு ஆட்சிக்கு வந்தது. கிட்டத்தட்ட இரண்டு வருஷங்கள் ஆட்சியில் இருந்தது. அப்போது விலைவாசிகள் மிகவும் கட்டுப்பாட்டுக்குள் இருந்ததாகவும், ஹோட்டல்களில் ஒரு ரூபாய்க்குச் சாப்பாடு போடப்பட்டதாகவும் கூறுவார்கள். ஏற்கெனவே ஒரு முறை இருக்கும் அனுபவத்தினால், இந்த முறை தேசிய முன்னணி பதவிக்கு வந்தாலும், சண்டையில்லாமல் செயல்படுவார்கள் என்று நம்பலாம்.

சுப்பிரமணியம்: எங்கள் கிராமத்தில் பல பெரியவர்கள், காங்கிரஸுக்கு வோட்டுப் போடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பல படித்த இளைஞர்கள் யோசிக்கிறார்கள். குழப்பம் இல்லாத எதிர்க்கட்சிக் கூட்டணி அமையுமானால் அதற்கு வோட்டுப் போடலாம். அதற்குச் சாத்தியமில்லாத நிலையில் ராஜீவுக்கு வோட்டுப் போடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

கருணாநிதி: ராஜீவ் காந்திக்கு உள்ள பெரிய அனுகூலம் இந்திரா காந்தியின் மகன்; நேருவின் பேரன் என்பது. இவர்கள் பெயரைச் சொன்னால், கண்ணை மூடிக் கொண்டு 'கை'ச் சின்னத்தில் முத்திரையிடுபவர்கள்தான் பெரும்பாலான கிராம மக்கள். வாக்காளர்கள் தெளிவு பெறும்படி பலமான பிரசாரம் செய்ய வேண்டும். ஆனால் எதிர்க்கட்சிகள் அதுபோலத் திட்டமிட்டுப் பிரசாரம் செய்வதாகத் தெரியவில்லை! ஆக இருப்பதில் சிறந்தவர் யார் என்று பார்க்கும் போது ராஜீவ்தான் தெரிகிறார்.

சுஜாதா: இந்தத் தேர்தலில் மக்கள் ராஜீவுக்குப்பாடம்புகட்டினால்தான் அவர்செய்த தவறுகளுக்குச் சரியான தண்டனையாக இருக்கும். மீண்டும் அவர் பதவிக்கு வந்தால், 'தாம் குற்றமற்றவர்' என்று மக்களே தீர்ப்பு அளித்துவிட்டதாகப் பேச ஆரம்பித்து விடுவார். புதிதாக வோட்டுப் போட இருக்கும் இளைஞர்கள், இவை எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுவது நல்லது.

தொகுப்பு: தில்லப்பா
படங்கள்: சுபா

• ஜி. சுப்பிரமணியம்



• ஜி. கருணாநிதி




ஏழாவது இரவு
கதை: அர்ணா நாயுடு
சித்திரம்:
3
மோட்டார் சைக்கிள் விரைந்தது.
பின் சீட்டில் அமர்ந்திருந்த ரஞ்சனா விழுள் லேசான குழப்பம்.
அவள் எடுத்த முடிவு சரிதானா? அவனால் இந்த மர்மத்தை ஊடுருவி உண்மையைக் கண்டுபிடிக்க முடியுமா? போதிய ருசுக்களுடன் வசுமதியின் மரணத்துக்குக் காரணமானவனை வெளிக்கொணர்ந்து நிரூபிக்க முடியுமா?
காற்றில் கலைந்த முடியைச் சரிசெய்து கொண்டாள். தலையைத் திருப்பி அவன் முதுகைப் பார்த்த போது, 'இவனை எந்த அளவுக்கு நம்பலாம்?' என்ற கேள்வி எழுந்தது.
மௌனமாகக் கண்களால் விடுத்த அழைப்பைப் புரிந்து கொண்டு இப்படி அழைத்துச் செல்கிற இவன் எந்தத் தொலையுக்கு உதவ முன்வருவான்? – யோசனை ஓடியது.
சிக்னலுக்காக வண்டியை நிறுத்தியவன் கேட்டான்.
எங்கே தங்கியிருக்கீங்க?
தூரத்து உறவுக்காரங்க ஒருத்தர் வீட்டுல.
எங்கே போகணும், என்ன செய்யணும்னு எதுவுமே நீங்க சொல்லலையே! ஒரு ஓட்டல்ல உட்கார்ந்து காபி சாப்பிட்டே பேசலாமா?
செய்யலாம். ஆனா... உங்களுக்கு இப்போ வேற வேலை எதுவும் இல்லையே? இதனால இடைஞ்சல் ஒண்ணும் இல்லையே?
மிஸ் ரஞ்சனா! நான் மனசு திறந்து சொல்றேன். வசுமதி மேல நான் உயிரையே வச்சிருந்தவன். அவளுக்காக எல்லாத்தையும் உதறிட்டு உங்களுக்கு உதவத் தயாரா இருக்கேன்.

சொன்ன போது அவன் குரல் தழுதழுத்தது. பலர் பார்க்க அந்த இடத்திலேயே அழுது விடுவான் போலிருந்தது. சிரமத்தோடு அடக்கிக் கொண்டான்.

பச்சை விழ, வண்டியைக் கிளப்பினான். மேற்கொண்டு பேசாமல் சாலையில் கவனத்தைச் செலுத்தினான்.

வசுமதியின் நினைவு நெஞ்சினுள் கிளர்ந்தெழுந்து. அது கொண்டு வந்த துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள, அவன் மேற்கொண்டு பேசாமல் இருந்தது ரஞ்சனாவுக்கு வசதியாக இருந்தது.

ஆமாம். துக்கத்துக்கு இடம் கொடுத்து மனசைக் குழப்பிக் கொள்ளக் கூடாது. எல்லாவற்றிலும் அவள் தெளிவாகவே இருக்க வேண்டும். அப்போதுதான் எடுத்துக்கொண்ட காரியத்தைச் செய்து முடிக்க இயலும்...

தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

வண்டி டிரைவ்-இன் ஓட்டலினுள் நுழைந்து சென்று நின்றது. இறங்கி ஒரு மேசையை நோக்கி நடந்தார்கள்.










உங்களில் யார் கண்ணன்?

மதிவண்ணன்



- குழந்தைகளே!
திறந்த கண்களில் தெரியும்
  தித்திப்புக் கனவுகளே!
நீங்கள் பிறந்து
ஆண்டுகள் சிலவே
ஓடியிருக்கலாம்!
ஆனால்
நூற்றாண்டு காணும்
நேருவின் நேசர்கள் நீங்கள்!

- முழுநிலவாகப் போகிற
மூன்றாம் பிறைகளே!
உங்களின் தோற்றம்
நேருவை நினைவூட்டுகிறது.
ஆனால்
இளமைவானின் எழுச்சிப் புறாக்களே,
தோற்றத்தை நம்பி நீங்கள்
தோற்றுப் போய் விடாதீர்கள்!
வேஷத்தையும்,
கோஷத்தையும் நம்பி
மோசம் போன தேசம் இது!

- உங்களில் சிலரை
சிவகாசியில் சிக்கவைத்து
ஒளிமயமான தீபாவளிக்கு அல்லவா
உத்தரவாதம் தரச் செய்து விட்டோம்!
திரிகளாகக் கருகுவதா
தேன் அரும்புகள்?



- கல்விக்குச் செல்லும் சிலரோ
வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறீர்கள்.
நாகரிகம் மிக்க நர்சரிப் பள்ளிகள்
இந்தியர்கள் பெற்ற
ஆங்கிலேயர்களாக
உங்களை மாற்றுகின்றன!

- இத்தனைக் குழந்தைகளில்
ஊழல் கம்சனை ஒழிக்கும்
கண்ணனாக யார்
காட்சி தரப் போகிறீர்கள்?
ஆம்!
ஆசிய ஜோதியின்
அன்பைப் பெற்ற குழந்தைகளே!
பண்டிதர் இருந்த போது கேட்டது
பஞ்ச சீலம்!
இன்று பாரெங்கும் கேட்பது
லஞ்ச ஓலம்!

- நேருவால்
'கண்டுபிடிக்கப்பட்ட இந்தியா'வை
நாளை நடத்தப் போகிற
நாயகர்களே நீங்கள்தான்!
ஆனால்
அதற்குள் அதை
கடத்தப் போகிறவர்களிடமிருந்து
காப்பாற்ற வேண்டும்!

மேலட்டை வண்ணப்படம், புகைப்படங்கள்:
யோகா



வி.பி.சிங்குக்கு ஏற்பட்ட தடங்கல் எதை உணர்த்துகிறது?

* கே. ஆர். தேவேந்திரன், வேலூர்.

? நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க இருக்கும் இந்த நேரத்திலாவது தமிழக இ-காங்கிரஸின் கோஷ்டிப் பூசல்கள் மறைய வாய்ப்பு உண்டா?

! கோஷ்டிப் பூசல் என்று ஒன்று இருப்பதால்தான் காங்கிரஸ் என்ற ஒன்று தமிழகத்தில் இருப்பதே தெரிகிறது: நீர் அதுவும் மறைந்து விட வேண்டும் என்றால் எப்படி!

* ஆர். வேலுமணி, கடலூர்.

? சினிமா நடிகர், நடிகையர்தான் தேர்தலில் நிற்கத் தகுதியானவர்கள் என்ற நிலை உருவாகியுள்ளதே...?

! 'விளம்பரத்தாலே உயர்ந்தவர் வாழ்க்கை நிரந்தரமாகாது' என்ற கண்ணதாசன் பாடல் நினைவு வருகிறது. இங்கே 'வாழ்க்கை' என்பதன் பொருள் 'சாதனை' அல்லது 'செயல்பாடு' எனக் கொள்க.

* மு. சிவஞானமுருகன், ஸ்ரீவைகுண்டம்.

? உதிர்ந்த ரோமங்கள் திரும்ப ஒட்டிக் கொண்ட அதிசயம் பற்றி...?

! கறந்த பால் திரும்பவும் மடியில் புகுந்து கொண்ட போது உதிர்ந்த ரோமம் ஒட்டிக் கொண்டதில் அதிசயமில்லை. சுயநல அரசியலில் இதுவும் நடக்கும், இன்னமும் நடக்கும்!

* ஜெயாப்ரியன், காரைக்குடி.

? உண்மையான வருமானத்தைக் குறைத்துச் சொல்லி, இலவச அரிசி வாங்கி, விலைக்கு விற்கும் சுயவர்களைத் திருத்த அரசு நடவடிக்கை எடுக்காதா?

! இலவசத் திட்டங்கள் மக்களின் ஆசையை வளர்த்து நல்லவர்களையும் கெடுக்கும். பொருளாதாரமும் பாழ்படும். மறுபரிசீலனை தேவை.

* கே. எல். குமணன், கல்லிடைக்குறிச்சி.

? தேசிய முன்னணியைக் 'கங்காரு' என்றும், 'கங்காரு வயிற்றுப் பையிலிருந்து கங்காருக்குட்டி தாவி வெளியேறி விடுவதைப் போல தி. மு. க. வும் தேசிய முன்னணியை விட்டு வெளியேறிவிடும்' என்றும் ப. சிதம்பரம் கூறியுள்ளாரே?

! அப்படி நேர்ந்தாலும் நேரலாம்; ஆனால் அ.தி.மு.க. கங்காரு வயிற்றுப் பையிலிருந்து தமிழக காங்கிரஸ் குட்டி கங்காரு வெளியேறவே செய்யாது! வளர்ச்சி இருந்தால்தானே!

* பி. வி. சீனிவாசன், பின்னத்தூர்.

? குண்டுராவ் மீண்டும் இ. காங்கிரஸில் சேர்ந்துள்ளாரே?



! 'ஆயா ராம், கயா ராம்' படலம் காங்கிரஸில் தொடர்கதை என்பது ஒருபுறமிருக்க, வீரேந்திர பாட்டீலுக்கு ஏற்கெனவே தலைவலி; இப்போது திருகு வலியும் சேர்ந்து கொண்டது!

* ஏ. டி. பூவராகவன், விருத்தாசலம்.

? ஜனதா தளத்துக்குச் சக்கரம் சின்னம் ஒதுக்கப்பட்டதிலிருந்து டி. வி. யில் சக்கரம் வராத மாதிரி பார்த்துக் கொள்கிறார்களாமே?

! வருவாய் அளிக்கும் 'வீல்' விளம்பரங்களைக் கூட வேண்டாம் என்று டீ.வி. பயந்து போய் மறுத்து விடலாம். ஆனால் நாட்டில் உள்ள லட்சோப லட்ச வண்டி வாகனங்களிலும் இயந்திரங்களிலும் உள்ள சக்கரங்களை உடைத்தா போட்டு விட முடியும்?

* எஸ். ராஜா, அயன்புரம்.

? 'புரட்சித் தலைவியின் உருவில் அண்ணாவைப் பார்க்கிறேன்' என்று வலம்புரி ஜான் கூறியிருப்பது பற்றி...?



* கங்காரு உவமை



! அவர்தான் 'வார்த்தைச் சித்தர்' ஆயிற்றே! புரட்சித் தலைவி உருவில் அண்ணாவை மட்டுமென்ன, எம்.ஜி.ஆர்., பெரியார், காந்தி, காமராஜ், இந்திரா முதலிய எல்லாரையும் பார்ப்பார்!

* தா. சந்திரன், ஈரோடு.

? தேர்தல் நடப்பதன் மூலம் சாதாரணக் குடிமகனுக்கு என்ன நன்மை கிடைக்கிறது?

! தன்னை ஆளப் போகிறவர்களைத் தானே தேர்ந்தெடுக்கும் உரிமை கிடைக்கிறதே, போதாதா? தவறு இழைப்பவர்களையும் குற்றம் புரிகிறவர்களையும் சட்டத்தால் தண்டிக்க முடியாமல் போகும் போது கூடப் பதவி நீக்கம் என்ற அவமானத்தின் மூலம் தண்டிக்கிற வாய்ப்பு கிடைக்கிறதே, காணாதா?

* புலவர் இர. கி. பூபதி, வெ. வலசை.

? பார்ப்பார புத்தியை மாத்தவே முடியாதா? அதாங்க, செல்வகுமார் (29.10.89 கல்கி இதழ்) கேள்விக்குத் தராசு பதிலைத்தான் குறிப்பிடறேன்... கூட இருந்தே குழியும் பறிக்குறீரே?

! கல்கி, கட்சிப் பத்திரிகை அல்ல. எனவே, கூட இருந்து குழி பறிப்பது என்ற பிரச்னை எழவில்லை. நட்புப் பத்திரிகை எனில் எல்லாக் கட்சிகளுக்கும் நண்பன் தான். தவறைச் சுட்டிக் காட்டி நல்லதை எடுத்துச் சொல்லும் நண்பன். 'நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு' என்ற குறள் வாசகத்தைக் கடைப்பிடிப்பது பார்ப்பாரப் புத்தி என்றால், அத்தகைய புத்தியைப் பெற்றிருப்பதற்காக நான் பெருமைப்படுகிறேன். இது புலவருக்குப் புரியாமல் இருக்கலாம்; கலைஞருக்குப் புரியும்.

* ஜான் பாண்டியன் ரூபோ, திருச்சி.

? ஆலடி அருணாவுக்குக் கலைஞர் 'டிக்



கெட்' கொடுத்திருக்கிறாரே. இது எதைக் காட்டுகிறது?

! போஃபர்ஸ் ஊழல் விஷயத்தில், நாடாளுமன்றக் கூட்டுக் குழுவில் இருந்து எதிர்ப்புக் குரல் எழுப்பி, மாற்றுக் கருத்தைப் பதிவு செய்த தீரத்துக்கு அளிக்கப்பட்ட பரிசாகக் கருதலாம்!

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

ஆர். ரத்தினசாமி,
ஆசிரியர், கே. வி. கே. பள்ளி,
பி. புளியம்பட்டி, — 638 459.

* ஆர். ரத்தினசாமி, புளியம்பட்டி.*

? எந்த அலையும் இல்லாத இந்தத் தேர்தல் சுவாரஸ்யமாக இருக்குமா?

! அதர்மத்தை, லஞ்ச ஊழலை, எதேச்சாதிகாரத்தை, பொய்ப் பித்தலாட்டத்தை விரட்டி அடிக்கும் தார்மிக அலை வீசும் தேர்தலாக இதனை நடத்திக் காட்டுவது மக்கள் கையில் இருக்கிறது!

*** ஜி. நீலா, மன்னார்குடி.**

? கே. வி. பந்த் ராஜினாமா செய்வாரா?



! ராஜினாமா செய்தால் காங்கிரஸ் கட்சிக்குள் எந்த ஜமீந்தாரி முறையை எதிர்த்து அவர் போர்க் கொடி உயர்த்தினாரோ அந்த ஜமீந்தாரி முறைக்குப் பணிந்து போனதாகக் கருதப்படலாம் என்று தயங்குகிறார் போலும்! காங்கிரஸ் கட்சி உருப்பட வேண்டுமென்றால் அதன் தலைமைப் பதவியிலிருந்து விலகுமாறு ராஜீவை மற்ற காங்கிரஸ் தலைவர்களே கேட்டுக் கொள்வது ஒன்றுதான் வழி. அதன் பிறகு அதனை மெய்யான ஜனநாயகப் பாதைக்குத் திருப்ப வேண்டும்.

*** வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சாவூர்.**

? வி. பி. சிங் வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய முடியாமல் தடங்கல் செய்யப்பட்டது எதை உணர்த்துகிறது?

! அந்தச் சதித் திட்டத்துக்குக் காரணம், அதிகார மமதை மட்டுமல்ல; எங்கே வி.பி. சிங் தலைமையில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்று விடுமோ என்ற பயமும் சேர்ந்ததால் உருவான சதி அது!

வல்லமை தாராயோ?

3

"வேணாம்'' என்றான் அரவிந்த்.

''என்ன வேணாம்?'' என்றான் கிருஷ்ணன்.

''ஈவினிங் பேட்டி கொடுக்கறப்போ நீ இங்கே இருக்க வேணாம். எதாச்சும் வால்தனம் பண்ணுவே நீ. எசகு பிசகா கேட்பே. வர்றவங்க என்னைத் தப்பா நினைச்சுக்குவாங்க.''

''இல்லைப்பா. வம்பு பண்ணாம இந்த ஜன்னல் அருகே அமைதியா உக்காந்திருக்கேன். வந்தனா குரல் கேட்டிருக்கேன். அதை வச்சி ஃபிகரை ஒரு மாதிரி யூகிச்சு வச்சிருக்கேன். என் யூகம் கரெக்ட்டான்னு பார்க்கணும்னு ஒரு க்யூரியாசிடி'' என்ற கிருஷ்ணன் சிகரெட் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டினான்.

''ஏமாந்துடப் போறே கிருஷ்ணா. டெலிபோன் எக்ஸ்சேஞ்ச்ல வேலை பார்த்தான் ஒரு ஃபிரண்டு. இன்னொரு எக்ஸ்சேஞ்ச்ல வேலை பார்க்கற பொண்ணோட குரல்லயே மயங்கிப் போய்... என்ன ஆச்சுன்னா லவ் பண்ணவே ஆரம்பிச்சுட்டான். ரொம்ப நாள் போன்லயே லவ் பண்ணி, கல்யாண தேதி எல்லாம் முடிவு பண்ணி நேர்ல சந்திச்சா, இவனுக்குச் சப்புன்னு போயிடுச்சு. குரலை வச்சி இவன் ஒரு மாதிரி கற்பனை பண்ணி வச்சிருந்திருக்கான். ஆனா பின்வாங்காம கல்யாணம் பண்ணிக்கிட்டான். அந்த மாதிரி அந்த வந்தனா கொண்டை போட்டுக்கிட்டு, கண்ணாடி போட்டுக்கிட்டு, குண்டா, வெத்தலை மென்னுக்கிட்டே வந்து எங்கே துப்பறதுன்னு கேக்கப் போறாங்க பாரு...''

— சிரித்த அரவிந்த் அந்தத் தனியார் நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டர். டெல்லியில் இருக்கும் ஓர் அண்ணனும், சிங்கப்பூரில் உள்ள எஸ்டேட்டுகளைப் பார்த்துக் கொள்ளும் மற்றொரு அண்ணனும் முக்கிய டைரக்டர்கள். தயாள் அண்ட் கம்பெனி நிறுவனத்தின் ஸ்தாபகர் இந்த மூவரின் அப்பா நரசிம்மன். அந்த அறையின் ஒரு சுவரில் ஐந்தடிக்கு இரண்டடி லைஃப் சைஸ் கறுப்பு — வெள்ளை படத்தில் ஜரிகை மாலையுடன் நிரந்தரமாகப் புன்னகை செய்து கொண்டிருந்தார்.

அரவிந்தின் பங்களாவில் வாட்ச்மேன், சமையல்காரன், தோட்டக்காரன், கார் டிரைவர் என்று ஒரு படை உண்டு. ஆனால் இவர்களைச் சரியாக நிர்வகிக்க ஒரு எஜமானியம்மா இனிமேல்தான் வர வேண்டும்.

டெல்லி அண்ணன் ராஜசேகர் ஒவ்வொரு தடவை போனில் பேசும் போதும், ''என்னப்பா எதாச்சும் காரணம் சொல்லிக்கிட்டுத் தள்ளிப் போட்டுக்கிட்டே இருந்தா என்ன அர்த்தம்? காலா காலத்தில பண்ணிக்க வேணாமா?'' என்று நச்சரித்து, நச்சரித்து, போன மாதம் இவன் க்ரீன் சிக்னல் தரவே...

இரண்டு வாரங்கள் முன்பு போன் செய்து, ''அரவிந்த், நாளைக்குப் புறப்பட்டு வா. இங்கே ஸ்மால் இண்டஸ்ட்ரி வச்சிருக்கார் யோகானந்தன்னு. அவர் பொண்ணு ஹேமா, எம்.பி.ஏ. படிச்சிருக்குது. உனக்கு ரொம்ப பொருத்தமா இருக்கும். உனக்குப் பிடிச்சுப் போய், சரின்னு சொல்லிட்டேன்னா யு ஆர் தி லக்கியஸ்ட் பர்சன்'' என்றார் ராஜசேகர்.

''எதனால?''

''ஹேமா அவரோட ஒரே பொண்ணு. ஒன்றரை கோடி ரூபா சொத்து!''

''எனக்குச் சொத்து வேணாம்ணா... திகட்டுது. எனக்கு வேண்டியது பொருத்தமான பொண்டாட்டி.''

''அதான் சொல்றேனே, நான் ஹேமாவைப் பார்த்துட்டேன். பியூட்டி காண்டெஸ்ட்ல கலந்துக்கிட்டா இவளைத் தவிர வேற யாரையும் தேர்ந்தெடுக்க முடியாது. அவ்வளவு அழகு.''

''நான் சொல்ல வந்தது மனப் பொருத்தம்.''

''வா, வந்து பாரு. பேசிப் பாரு. குழாய் திறந்த மாதிரி சளசளன்னு இங்கிலீஷ் கொட்டுது. வாயேன்.''

அரவிந்த் கிருஷ்ணனையும் அழைத்துக் கொண்டு ஃபிளைட்டில் டெல்லி போனான்.

கிருஷ்ணன் அரவிந்தின் பள்ளிக் காலத்திலிருந்து நண்பன். எத்தனையோ கருத்துக்களில் இரண்டு பேருக்கும் முரண்பாடு உண்டு. அடிப்படைக் குணங்களிலேயே வித்தியாசங்கள் உண்டு. அரவிந்த் ஒரு பதற்றமற்ற, நிதான வகை. கிருஷ்ணன் அடுத்த அரை மணி நேரத்தில் உலகம் அழிந்து விடப் போவதைப் போல பரபரக்கிற டைப்.

கிருஷ்ணனுக்குச் சொந்த ஊர் கோயமுத்தூர். அங்கே அப்பா, அம்மா, தம்பி,

பட்டுக்கோட்டை பிரபாகர்

தங்கை எல்லோரும் உண்டு. இவன் சென்னையில் தன் பெரியப்பா வீட்டில் வளர்ந்து, படித்து, வேலை கிடைக்காமல் திரிந்து, பிறகு ஒரு பங்கு மார்க்கெட் ப்ரோக்கர் நிறுவனத்தில் வேலை பார்த்து, பங்கு மார்க்கெட் பற்றிச் சகலமும் கற்று, இன்று தனியாக ஓர் அறை எடுத்துத் தங்கி, அங்கீகரிக்கப்பட்ட ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்கராகச் செயல்படுபவன்.

போன் ஒன்றை மூலதனமாக வைத்துக் கொண்டு, பாம்பேக்கு எண்கள் சுழற்றிக் கொண்டு, அருமையான இருபது முப்பது வாடிக்கையாளர்களை வைத்துக் கொண்டு, அவர்களுக்குப் பங்குகளை விற்றுக் கொடுத்து, வாங்கிக் கொடுத்து கமிஷன் பெறுவதோடு வேறு சில ஜகதலப் பிரதாப வேலைகள் எல்லாம் செய்வான். பர்சில் பணம் வழியும். நினைத்த ஹோட்டலில் சாப்பாடு. தீரத்தீர பைக்கிற்குப் பெட்ரோல். செலவிட எக்கச்சக்கமான நேரம். அதனாலேயே நிறைய வாலிப சேஷ்டைகள்.

கிருஷ்ணன் வைத்திருக்கும் ஒரு டைரியில் அகர வரிசைப்படி நிறையப் பெண்கள் பெயர்களைப் பார்க்கலாம் — போன் நம்பர்களுடன். எல்லா ஹோட்டல்களிலும் ரிசப்ஷனில் இவனுக்கு அறிமுகப் புன்னகை கிடைக்கும்.

தினமும் ஒரு தடவையாவது அரவிந்தைச் சந்திக்க வருவான். சந்திப்பதோடு மட்டுமில்லாமல்...

''வெட்கம்!'' என்பான்.

''ஏண்டா?'' என்பான் அரவிந்த்.

''ஒரு பெரிய கம்பெனியோட எம்.டி. சிகரெட் பிடிக்க மாட்டேங்கறே!''

''டை கட்டிக்கிற மாதிரி சிகரெட் என்ன எக்ஸிக்யூட்டிவ்க்கு ஒரு அத்தியாவசியமா?''

''ஆமாம். இப்போ ஒரு ஸ்டேட்டஸ் சிம்பல் ஆகிடுச்சு.''

''உளறாதே. டிரைவரும் சிகரெட் பிடிக்கிறான். இது ஒரு பழக்கம். எல்லாரும் பழகிக்கணும்னு இல்லையே.''

''நீ பழகிக்கயேன்.''

''எனக்குப் பிடிக்கலையேப்பா. சும்மா ஸ்டைலுக்காகப் பத்த வச்சிக்கறதை நான் விரும்பலை. இப்போ சில பார்ட்டிகள்ல பீர் மட்டும் நான் எடுத்துக்கறதுண்டு. அது பிடிச்சிருக்கு. அதிக பாதிப்புமில்லை. அந்த மாதிரி எனக்குத் தேவைன்னா செய்வேன். இன்னொருத்தரை இம்ப்ரெஸ் பண்ணணும்ங்கிறதுக்காக எதையும் செய்ய மாட்டேன்.''

''நீ தேறவே மாட்டே போ! சரியான சாமி





பண்ருட்டி :

ஜெயுடன் பிணக்கம்; காங்கிரஸுடன் இணக்கம்!

அ. இ. மு. க. வில் சேராமல் பண்ருட்டி தனித்து நின்றாலும், அவரது தனிப்பட்ட செல்வாக்குக் குறைய வில்லை. முக்கியமாக தில்லியில் உள்ள காங்கிரஸ் பிரமுகர்களுடன் பண்ருட்டிக்கு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. காங்கிரஸ் வேட்பாளர்கள் தேர்தலில் பண்ருட்டியின் 'கை'யும் உண்டு!

''நீங்கள் காங்கிரஸை ஆதரிக்க வேண்டிய காரணம் என்ன?''

''எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மை ஒரு காரணமாக இருந்தாலும், இந்திரா காந்தி, ராஜீவ் ஆகியோருடன் மறைந்த எங்கள் தலைவர் எம். ஜி. ஆர். நட்புறவு வைத்திருந்தார் என்பது முக்கிய காரணம். எனக்கும் அவ்விருவருடனும் நல்ல பழக்கம். நான் வைத்திருக்கும் நட்புதான் ஆதரிப்பதற்கான முக்கிய காரணம்.''

''காங்கிரஸில் சேருங்கள் எம். பி. ஸீட் கொடுக்கிறோம்'' என்று சொன்னார்களாம்.

''நான் காங்கிரஸ் மேடைகளில் எப்படிப் பேச முடியும்? என் 'ஸர்வீஸ்' வீணாகிவிடுமே'' என்று கூறிச் சிரிக்கிறார் பண்ருட்டி.

''ரொம்பவும் வீராப்பாகப் பேசியவர்கள் எல்லாம் ஜெ. யிடம் பணிந்து போய் விட்டார்களே...!''

''அவர்கள் கதை எப்படியோ...? இப்போது மட்டுமல்ல, எதிர்காலத்திலும் நான் போய் ஜெ.யுடன் சேருவது என்ற பேச்சுக்கே இடமில்லை'' என்று உறுதியாகக் கூறுகிறார் பண்ருட்டி.

— திருபர்.

யார்! மொழு மொழுன்னு ஒரு செகரட்டரியை வச்சிருக்கே. அவளைப் பார்த்தாலே நாலு கப் ஐஸ்க்ரீம் சாப்பிட்டா மாதிரி ஆய்டுது எனக்கு. ஏதாவது சில்மிஷம் பண்ணிருக்கியான்னு கேட்டா, மூஞ்சை நேரா பார்க்காமதான் டிக்டேட் பண்ணுவேன்னு சொல்வே.''

''கிருஷ், நீ வேற டைப். நான் வேற டைப்.''

''எல்லாம் ஒரே டைப்தான். நான் மேட்டு நிலம். மழை பேஞ்சா உடனே செலவழிச்சிடறேன். நீ அணைக்கட்டு. தேக்கி வச்சிருக்கே. ஆனா பாரு... என் வாழ்க்கைல இன்னிக்குத்தான் கடைசி நாள்னு நினைச்சி வாழணும். அதான் என் பாலிசி. அனுபவிக்கணும்டா ராஜா. கடல் மாதிரி சொத்து வச்சிக்கிட்டு ஆம்பளை கண்ணகியா இருக்கியே... நான் உன்னைப் பார்த்து பரிதாபப் படறேன்.''

அரவிந்த் மென்மையாகச் சிரித்துக் கொள்வான்.

கிருஷ்ணன் முயற்சியைக் கை விடவே மாட்டான்.

அந்தக் கிருஷ்ணனையும் உடன் அழைத்துக் கொண்டு டெல்லி போய் அண்ணனுடன் சென்று அந்த ஹேமாவைப் பார்த்த வினாடியே இவனுக்குப் பிடிக்க வில்லை.

கண்டினால் ரத்தம் தெறிக்கும் நிறம் தான். அழகுதான். நாகரிக உடையணிந்து, ''ஹலோ'' என்றாள்.

ராஜசேகர் வற்புறுத்தி அவளுடன் தனியாகப் பேசச் சொன்ன போது, இவன் துவங்கும் முன்னரே அவள், ''உங்களுக்கு மியூசிக் பிடிக்குமா?'' என்றாள்.

''ம்'' என்றான்.

''யாரைப் பிடிக்கும்?''

''நாமகிரிப்பேட்டை, லால்குடி, ரவி சங்கர், ஸ்ரீனிவாஸ்.''

இவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவள் மேலே பல்லி விழுந்தவளாக முகத்தைச் சுளித்து, ''கர்நாடக சங்கீதமா? நான் அதைக் கேக்கலை. பாப் ம்யூசிக்ல கேட்டேன்'' என்றாள்.

''ஸாரி. மேற்கத்திய சங்கீதத்தில எனக்கு ஈடுபாடு இல்லை. சரி. நான் கேக்கறனே உன்னை. தமிழ் நாவல்கள் படிச்சிருக்கியா? யாரைப் பிடிக்கும்?''

''நாவலா? எங்கே நேரம்? டான்ஸ் க்ளாஸ் போறேன். ஸ்விம்மிங் போறேன். ப்யூட்டி பார்லர், க்ளப்ஸ், பார்ட்டீஸ்னு ஒரு நாளைக்கு இன்னொரு இருபத்தி நாலு மணி நேரம் தேவைப்படுது.''

அதற்கு மேல் பேசாமல் புறப்பட,

''யெஸ் சொல்லப் போறீங்களா அரவிந்த்?'' என்றாள்.

''நோ சொல்றதுதான் ரெண்டு பேருக்கும்

நல்லது'' என்றான்.

''ஓ! தேங்க் காட்! மெட்ராஸ் வெயில் எனக்குப் பிடிக்கிறதேயில்லை யூ நோ!''

''டெல்லி குளிரும் எனக்குப் பிடிக்கிறதே யில்லை.''

விமானத்தில் திரும்பும் போது கிருஷ்ணன் அடித்துக் கொண்டான்.

''உன்னை மாதிரி முட்டாளை நான் பார்த்ததே இல்லை. உழைப்பே இல்லாம கோடீஸ்வரனாகற வழிகள்ல ஒண்ணு — கோடீஸ்வரனோட ஒரே பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறது. லட்டு மாதிரி இருக்கா. ரசனைகள் ஒத்து வரல்லையாம்! வர்ற சான்சை விடாம பயன்படுத்திட்டு... அப்புறம் உன் ரசனைக்கு ஒண்ணை ஒதுக்குப்புறமா வச்சிக்க வேண்டியது தானே?''

''உன் பேத்தலை நிறுத்து. கல்யாணம்ங்கிறது ஒரு புனிதமான பந்தம்.''

''தீப்பந்தம்! எனக்குத் தெரிஞ்ச பணக்காரப் பசங்க எல்லாம் ஒரே மாதிரிதான் இருக்காங்க. நீ எப்படித் தப்பா இருக்கேன்னு புரியலையே. உன்னை நினைச்சா எனக்குக் கவலையா இருக்குப்பா. சரி. உன் பொண்டாட்டி எப்படித்தான் இருக்கணும்? வெய்ட். சொல்லாதே. நான் சொல்றேன். பதினெட்டு முழப் புடைவை கட்டி, நகை போட்டு, மருதாணி வச்சு, கையில வீணையோட, தலைல கிரீடம் வச்சு கிட்டத்தட்ட சாமி மாதிரி! கரெக்ட்டா?''

''போடா மண்டு! எதைச் சொன்னாலும் கிண்டல் பண்றதுன்னு இருக்கே. உன் கிட்டே சீரியஸா எதையும் பேச முடியாது.''

''உண்மை. என்னைப் பொருத்தவரைக்கும் வாழ்க்கைல சீரியஸான விஷயம்னு எதுவும் இல்லை.''

சொந்தமாகத் தயாரித்த திருக்குறள் இது என்று சொல்லித் திரியும் கிருஷ்ணன், மாலை நான்கு மணிக்கு அவசரமாக அரவிந்தின் அறைக்குள் வந்து, ''யப்பாடா, இன்னும் வரல்லையே? பறந்துக்கிட்டு வந்தேன்'' என்றான்.

போன் அடித்தது. அரவிந்த் எடுத்தான். ''யெஸ், ஸ்பீக்கிங்.''

''சார், நான் வந்தனா பேசறேன். நான் வந்த ஆட்டோல ஏதோ மைனர் பிராப்ளம். டிரைவர் அதைச் சரி செய்துக்கிட்டு இருக்கார். வேற ஆட்டோ பிடிக்க விடமாட்டேங்கறார். பதினைஞ்சு நிமிஷம் லேட்டா வர்றேன் சார். ஸாரி.''

''பரவாயில்லை, வாங்க'' என்று வைத்த அரவிந்த், பேசினதைச் சொன்னதும்,

''நான் பேசியிருக்கணும் போன்ல. எங்கேர்ந்து பேசறான்னு தெரிஞ்சா பைக்ல போய் பிக்கப் பண்ணிட்டு வந்திருக்கலாமில்லை?'' என்ற கிருஷ்ணன் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான்.

''டோண்ட் பி ஸில்லி கிருஷ்ணா. அவங்க இருக்கிறப்போ சிகரெட் பத்த வைக்காதே. இந்த ரூமுக்குள்ளே உன் ஒருத்தனுக்கு மட்டும்தான் ஸ்பெஷல் பர்மிஷன். இந்த ஆஷ்ட்ரேயே உனக்காகத்தான்'' என்ற அரவிந்த் ஃபைல்களில் கையெழுத்திட்டான்.

கிருஷ்ணன் உரிமையாக போனைத் தன் பக்கம் திருப்பி வைத்துக் கொண்டு பம்பாய்க்காரனுடன் தன் தொழில் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

பியூன் வந்து சொல்லி, ''வரச் சொல்லு'' என்று அரவிந்த் சொன்னதும், உள்ளே வந்தாள் வந்தனா.

(தொடரும்)



— வி. ஜி. குமார்



* அலுவலக அறை.

நேரு நினைவுகள் – 2




* காங்கிரஸ் கூட்டம்.



* தலாய் லாமாவுடன்.

* சிலை வடிக்கும் அமெரிக்கப் பேராசிரியர் கிரீன் — பொறுமையுடன் 'போஸ்' கொடுக்கிறார் நேரு.







* ஸி. ஆர். – நேரு – அபூர்வ சிநேகிதம்.

* பெற்றோருடன் பாலகன் நேரு.



* பஸ்ஸின் கூரை மேல் நின்று பேசுகிறார்.



* இறுதி மரியாதை.





மக்கள் சார்பாக மன்றத்தில் வழக்குகள்!

முதல் முறையாக மக்களுக்குத் தேவையான ஒரு விஷயத்துக்காகக் கறுப்புக் கோட்டை மாட்டிக் கொண்டு, "சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றேன். முதல் வழக்கே வெற்றி" என்று மனநிறைவுடன் சொல்கிறார் பி. எச். பாண்டியன்.

"உங்கள் வழக்கில் தீர்ப்பு வருவதற்கு முன்பே மத்திய உணவு மந்திரி சுக்ராம் அதிகப்படியான அரிசி தருவதாகச் சொன்னாரே?"

"அது தவறான கணிப்பு. மத்திய மந்திரி தருவதாகச் சொன்னது, டிசம்பர் மாதத்திலிருந்துதான். ஆனால் நவம்பர் மாதமே 10,000 டன் அதிகமாக வந்ததற்குக் காரணம் என் வழக்குத்தான். மேலும் மந்திரி அப்படிச் சொல்லியிருந்தால், அது மத்திய அரசு உச்சநீதி மன்றத்தில் பதில் மனுத் தாக்கல் செய்யும்போதே அதில் இடம் பெற்றிருக்குமே!"

பாண்டியனின் அடுத்த வழக்கு பிற்பட்டவர்களுக்காக நியமிக்கப்பட்ட மண்டல் கமிஷனின் பரிந்துரைகளை மத்திய அரசு அமுல்படுத்த வேண்டுமென்று நிர்பந்திப்பதற்காக.

"மண்டல் கமிஷன் அறிக்கையை பாராளுமன்றத்தில் வைத்தார்களே தவிர, அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதைத் தெரிவிக்கவில்லை. அறிக்கை கொடுத்து ஒன்பது வருடங்கள் ஆகின்றன. அரசியல் சட்டப்படி அறிக்கை மீது எடுத்த நடவடிக்கையையும் பாராளுமன்றத்தில் வைக்க வேண்டும். அதற்குத்தான் வழக்கு. பிற்பட்டவர்களுக்கு மாநில அரசு கல்வி, வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆனால் மத்திய அரசு நிர்வகிக்கும் கல்விக் கூடங்கள் தொழிற் சாலைகள், அலுவலகங்களில் பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு கிடையாது."

பாண்டியன் போடவிருக்கும் இன்னொரு வழக்கு நெல்லை மாவட்டம் களக்காட்டில் பச்சையாறு அணையை கட்டித் தர வேண்டும் என்பது.

"1975ல் அடிக்கல் நாட்டினார்கள். பின்னர் ஒன்றும் நடக்கவில்லை. இந்த அணையைக் கட்டினால், என் தொகுதியில் சில பகுதிகள் பசுமையாகும்."

"இப்படி வழக்குகள் நடத்துவது உங்களுக்குச் செலவுதானே!"

"செலவு மட்டுமல்ல; டெல்லிக்குப் போய் வழக்கு நடத்துவதில் சிரமங்கள் வேறு. நாட்டில் எந்தப் பகுதியில் இருக்கும் குடிமகனுக்கும் இதுபோன்ற வழக்குகளில் அவனுக்கு மிக அருகிலேயே நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும். பாராளுமன்றம் சட்டம் இயற்றினால், சுப்ரீம் கோர்ட்டின் சில அதிகாரங்களை மாவட்ட அளவில். கூடக் கொண்டு போக முடியும்."

"திருச்செந்தூரில் நீங்கள் போட்டியிடப் போவதாக வந்த செய்தி பற்றி..."

"உங்களிடம் 30 லட்சம் இருந்து, எனக்குக் கொடுத்திருந்தால் ஒருவேளை நின்றிருப்பேன்" என்று சொல்லிச் சிரிக்கிறார் பாண்டியன்.

— நமது நிருபர்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.



POND'S

பொன் நகைகள் மின்னிட... சந்தன நறுமணம் கமழ்ந்திட...

இனிய உணர்வுகள் மனதில் மலர்ந்திடும் கணங்கள். உங்கள் மேனியில் பொன் நகைகள் மின்னிட, தூய சந்தனத்தின் நறுமணம் கமழ்ந்திட இதுவரை அனுபவித்தறியா உணர்வுகளால் உள்ளம் பூரிக்கிறது; பெண்மை உங்களிடம் பூரண பொலிவு பெறுகிறது.

அரிய நறுமணம், மதிப்பில் பொன்னைப் போல் உயர்ந்தது.

பாண்ட்ஸ் சாண்டல் டால்க்

HTA 7023

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

